July 2021
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
12-ம் ஆண்டில்

# VARSHA™

# IDLI/DOSA BATTER

## Let's eat the Best!

iதமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

July 2021

சுவடி — 11
ஓலை — 5

## வணக்கம் பல

பல்வேறு காலகட்டங்களில் இன அழிப்புகள் தொடர்ந்து நடைபெற்றவண்ணம்தான் இருக்கின்றன. மனித சமுதாயம் உய்வதற்கு எத்தனையோ வழிகளை ஞானவான்கள் அருளிச் சென்றிருக்கிறார்கள் என்றாலும், அதனைக் கருத்தில் கொள்ளாமல் ஒருவருக்கு ஒருவர் அடித்துக் கொள்கின்ற நிலை அவ்வப்போது நிகழ்ந்தபடியே இருப்பது வேதனை! வெட்கம்!

இலங்கையில் போரினவாத அழிப்புக்கு உதவி செய்த சீனா, நாட்டுக்குள்ளேயே பெரும் இன அழிப்பைச் செய்து வருவது தற்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. உலக நாடுகளுக்கு தீநுண்மித் தொற்று பரவுவதற்கும், மக்களின் உயிரிழப்புக்கும் பெரும் பொருளாதாரச் சீரழிவுக்கும் காரணமான அந்நாட்டுக்கு நாடுகள் ஒன்றாய்க் கூடித் தகுந்த பதிலடியைத் தரவேண்டிய நேரம் இது!

ஈரானில் ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை என்ற கதை தொடர்கதையாகி இருக்கிறது. ஏற்கெனவே பல சிக்கல்கள் நிறைந்திருக்கும் அந்நாட்டின் உண்மை நிலையினை உணர்ந்து மக்கள் நல அரசாக புதியவர் கட்டியெழுப்ப வேண்டும்! அது நடக்குமா என்ற கேள்விதான் அங்கு எழுந்திருக்கிறது.

தமிழகம், இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக பற்பல அரசியல் மற்றும் சமுதாய மாற்றங்களைக் கண்ட மாநிலமாக விளங்கியதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு! தற்போது பொருளாதாரக் குழு நிபுணர்களை அமைத்திருப்பதன் மூலம் மாநில அரசின் உரிமைகளை நிலைநிறுத்த முயலும் இந்த முயற்சியை நிச்சயம் வரவேற்கத்தான் வேண்டும்! இதனைப் பிற மாநிலங்களும் கருத்தில் கொள்ளுமானால் நாட்டுக்கே நலம் விளையும்! இந்த நிலைப்பாட்டுக்கு ஒரு பூச்செண்டு!

இதுகுறித்த விரிவான கருத்தாக்கங்களுடனும், நல்ல பல பனுவல்களுடனும் மலர்கின்ற இம்மாத 'அய் தமிழ்' இதழ், கலை, இலக்கியம், மருத்துவம் எனக் கலந்து கட்டிய கதம்ப மலராக மணம் தருகிறது!

வரவேற்று வாசியுங்கள் நேசியுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...

அழியாதா இனஅழிவு
விளிம்பில் மதவெறி

மந்திரப் போர்
எம்வழி தனிவழி

தமிழே தமிழே
சேரமான் கனவு

அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்

இன்பம் என்பது
எதுவெனில்!

மருத்துவ தமிழ்
மூத்தோர் பேணல்

IThamil Monthly Magazine
Chief Editor & Publisher
Sivanesan
Editor
Khottravan
Editorial Team
Ganesan
Navani
Shanthakumar
Art Editor
Sriram
Art & Marketing Director
Jaya
Printers
Kanagam Pathippagam
Contact us:
editor@ithamil.com

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# அழியாதா

## இனஅழிப்பில் ஈடுபடுகிறதா சீனா?

சீனாவில் இன அழிப்பு நடந்து வருவதை உலகநாடுகள் கைகட்டிக் கொண்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது நியாயமா? இனஅழிப்பு உலகநாடுகள் அறிவிக்கும்போது, நம்மால் அலட்சியமாகவோ ஒன்றும் செய்யாமலோ இருந்துவிட முடியுமா? இங்கே ஒரு சம்பவத்தை மட்டும் உதாரணத்துக்கு பார்ப்போம்!

அழைக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார். அவர் தற்போது அமெரிக்காவில் பத்திரமாக இருந்தாலும் தான் வெளிப்படையாகப் பேசுவது தனது பெற்றோரைப் பாதித்துவிடுமோ என்று அரண்டுபோயிருக்கிறார்.

சீனாவின் மேற்குப் பிராந்தியமான ஜின்ஜியாங்கில் உள்ள முஸ்லிம் சிறுபான்மையினர்தான் உய்கர்கள். நவீன வதை முகாம்களில் பத்து லட்சம் உய்கர் மக்கள் அடைக்கப்பட்டிருப்பது உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. இதில் அதிகம்

உய்கர் பூர்வகுடி முஸ்லிம்களை சீனா இனஅழிப்பு செய்கிறது என்று அமெரிக்காவும் பிற நாடுகளும் இந்த ஆண்டில் அறிவித்தாலும் அதனால் பெரிய மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. இந்தச் செயல்படாமையானது உச்சபட்சக் குற்றமான இனஅழிப்பின் பயங்கரத்தைக் கண்டுகொள்ளாமல் விடுகிறது. நம் கண் முன்னே வெளிப்படும் நிகழ்வுகளைப் பார்த்து நாம் மரத்துப் போகாமல் இருப்பதற்கு நான் ஒரு உய்கர் பெண்ணை அறிமுகப்படுத்துகிறேன்: தன்னை 'நான்சி' என்று

கவனிக்கப்படாத விஷயம் எதுவென்றால், உய்கர் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தும் விதத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகள்தான்.

மகப்பேறு மருத்துவரான தன் உறவினர் பற்றி நான்சி கூறுகிறார். இரண்டு ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டு வதைமுகாமுக்கு அந்த மருத்துவர் அனுப்பப்பட்டிருக்கிறார். அங்கே இரண்டு பெண்களின் உடல்நலனை முன்னிட்டு அவர்களின்

# இன அழிவு

கருத்தடைச் சாதனத்தை அகற்றியதால் அந்த மருத்துவருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவரது மற்றுமொரு உறவினர் ஒரு உய்கர் கிராமத்தில் குடும்பக் கட்டுப்பாடு பணியாளராக இருந்தார்.

அந்தக் கிராமத்தில் அனுமதி இல்லாமல் ஒரு பெண் கர்ப்பமடைந்ததால் நான்சியின் உறவினருக்கு வதைமுகாமில் இரண்டாண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தக் கர்ப்பிணியின் கணவருக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது என்று தான் கேள்விப்பட்டதாகக் கூறும் நான்சி அந்தப் பெண்ணுக்கும் அவரது குழந்தைக்கும் என்ன ஆனது என்பது பற்றித் தனக்குத் தெரியாது என்கிறார்.

நான்சி கூறுவதை உறுதிப்படுத்துவது மிகவும் கடினம், ஆனால் ஜின்ஜியாங்கில் நடைபெற்றுவரும் ஒடுக்குமுறையை வெளிப்படுத்திய பத்திரிகையாளர்கள், வெளியுறவுத் துறை அதிகாரிகள், மனித உரிமைக் குழுக்கள் போன்றவற்றின் பதிவுகளுடன் நான்சி கூறுவது ஒத்துப்போகிறது.

ஆக, என்னதான் நடந்துகொண்டிருக்கிறது? கடந்த காலத்தில் அவ்வப்போது வன்முறையில் ஈடுபட்ட பிரிவினைவாதக் குழு ஒன்றால் சீனா எச்சரிக்கையடைந்தது. அதனால், ஹான் சீனர்களின் மக்கள்தொகை மிகுந்த அந்தப் பிரதேசத்தில் உய்கர் மக்கள்தொகையைக் குறைப்பதற்கான முயற்சியில் சீனா ஈடுபட்டுக்கொண்டிருப்பதுபோல் தெரிகிறது. 'தெற்கு ஜின்ஜியாங்கின் மக்கள்தொகை அமைப்பை மாற்றியமைப்பதற்கான' தேவையைப் பற்றியும், 'உய்கரின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான' தேவையைப் பற்றியும் சீன அதிகாரிகள் பேசியிருக்கிறார்கள்.

இதன் விளைவுதான் கட்டாயக் குடும்பக் கட்டுப்பாட்டுக்கும், கருத்தடைச் சாதனத்தைக் கட்டாயமாகப் பொருத்துதலுக்குமான இயக்கம். சீனாவில் கருத்தடைச் சாதனங்கள் பொருத்தப்படுவதில் ஜின்ஜியாங்கில் மட்டும் 80% அளவுக்குப் பொருத்தப்படுகின்றன. இந்தப் பகுதியில் ஒட்டுமொத்த நாட்டின் மக்கள்தொகையில் 2%—க்கும் குறைவானவர்கள்தான் வசிக்கிறார்கள்; படுகொலை செய்யவில்லை; ஆகவே, இது வழக்கமான அர்த்தத்தில் இனஅழிப்பு என்று எடுத்துக்கொள்ள முடியாதுதான். ஆனால், இனஅழிப்பு தொடர்பான 1948—ம் ஆண்டின் உடன்படிக்கையின் சட்டப்படி, குறிப்பிட்ட இனக்குழுவின் பிறப்பு எண்ணிக்கையை ஒடுக்கும் சீனாவின் நடவடிக்கைகள் இனஅழிப்பு என்ற வரையறைக்கு உட்படுபவையாகவே




உய்கர் முஸ்லிம்கள் வசிக்கும் இரண்டு பெரிய மாவட்டங்களில் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 84% அளவுக்குக் குறைந்திருக்கிறது; இந்தத் தகவல்களெல்லாம் அட்ரியன் ஜென்ஸ் என்ற அறிஞருடையவை. உய்கர் முஸ்லிம்களின் மக்கள்தொகையை வரும் ஆண்டுகளில் குறைப்பதற்கான சீனாவின் திட்டத்தை இவர் ஆவணப்படுத்தியிருக்கிறார்.

இது ஜின்ஜியாங்கின் முஸ்லிம் சிறுபான்மையினரிடம் மனிதத்தன்மை நீக்கும் செயல்திட்டத்தின் ஒரு பகுதி. பன்றிக்கறி உண்ணுதல், மது அருந்துதல் ஆகிய செயல்களை மேற்கொண்டு முஸ்லிம்கள் தங்கள் மதநம்பிக்கையைக் கைவிடும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றனர். குழந்தைகளுக்கு சித்தாந்தத் திணிப்பு செய்வதற்காக உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். உய்கர் ஆண்கள் சிறைக்கு அனுப்பப்படும்போது, அவர்கள் வீட்டை ஆக்கிரமிக்க ஹான் சீனர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

சீனா உய்கர் முஸ்லிம்களைக் கொத்துக்கொத்தாகப் தோன்றுகின்றன.

உய்கர்களின் ஆதரவை நாடிய நிலையிலிருந்து அவர்களை நசுக்கும் நிலைக்கு சீன அரசு எப்படி வந்தது என்பதை நான்சியின் சொந்த வாழ்க்கைப் பயணம் பிரதிபலிக்கிறது. அவருடைய குடும்பம் மதப் பற்று கொண்டதல்ல. அவருடைய அம்மா கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்தார். அரசுப் பணியில் உயர் இடத்தில் இருந்தார். அவர்களின் குடும்பமும் அமைப்புக்கு ஒத்துழைப்பு கொடுத்து இயங்கத் தயாராகவே இருந்தது. நான்சி மேல்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது, கிழக்கு சீனாவுக்கு அனுப்பப்பட்டார். அங்குள்ளவர்களோடு இரண்டறக் கலப்பதற்காகவும் செல்வாக்கு கொண்ட உய்கர் முகவராக அவரை மாற்றுவதற்காகவும் இப்படி அனுப்பப்பட்டார்.

ஆனால், ஹான் சீனர்களுக்கும் உய்கர்களுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்தது. நன்கு படித்த உய்கர்களுக்குக்கூட சீனாவில் நல்ல வேலைகள் கிடைக்காத நிலையால் விரக்தியடைந்த நான்சி, கடைசியில் துருக்கியில் ஒரு வேலையில்

சேர்ந்தார். அந்த நேரத்தில் அதை யாரும் சந்தேகிக்கவில்லை. ஆனால், 2016—ல் சீனா தனது கிடுக்கிப்பிடியை இறுக்க ஆரம்பித்த பிறகு, உய்கர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது சந்தேகக் கண்ணோடு பார்க்கப்பட்டது.

நான்சி துருக்கியில் இருந்தபோது அவரது பெற்றோர் அவரை அங்கே சந்தித்ததால், மறுகற்றலுக்காக அவர்கள் வதைமுகாம்களில் அடைக்கப்பட்டனர். முகாம்களிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டதும் நான்சியை சீனாவுக்குத் திரும்பும்படி ஒரு குரல் தகவல் அனுப்பினார்கள். "உன் நாடு உன்னை நேசிக்கிறது. நீ இங்கே இருக்க வேண்டும் என்று உன் நாடு விரும்புகிறது" என்பதுதான் அந்தக் குரல் தகவல். உடனேயே நான்சிக்குச் சந்தேகம் ஏற்பட்டது, நான்சி கர்ப்பமாக இருப்பதால் அது நாடு திரும்புவதைக் கடினமாக்கிவிடக்கூடும் என்று அவர் அம்மா கூறியதும் இரண்டு மடங்கு சந்தேகம் அதிகமானது. உண்மையில் நான்சி கர்ப்பமாக இல்லை. ஆகவே, தன்னை நாடு நோக்கித் திரும்பவைக்கத் தன் அம்மாவை யாரோ ஒருவர் தூண்டுகிறார் என்றும், நான்சியை நாடு திரும்ப வேண்டாம் என்று மறைமுகமாக அவரது அம்மா சமிக்ஞை செய்கிறார் என்றும் நான்சி புரிந்துகொண்டார்.

வதைமுகாம்களில் அடித்துச் சித்ரவதை செய்ததால் நான்சியின் மாமா ஒருவருக்குப் பக்கவாதம் ஏற்பட்டுவிட்டது என்றும், இன்னொரு உறவினர் வதைமுகாமிலேயே உயிரிழந்தார் என்றும் நான்சி கூறுகிறார். ஒன்றுவிட்ட உறவினர்கள் நான்கு பேர் கட்டாய உடலுழைப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களில் ஒருவர் பட்டினியிலிருந்து தப்பிப்பதற்கு அவரிடமிருந்து காவலர்கள் லஞ்சம் கேட்கிறார்கள் என்றும் நான்சி கூறுகிறார். இந்தப் பயங்கரங்களுக்கு மத்தியில்

உலகம் என்ன செய்ய முடியும்? இதற்கிடையே ஹாங்காங்கின் அழிவையும், கடத்தப்பட்டு சித்ரவதைக்குள்ளாக்கப்பட்ட இரண்டு கனடா பணயக் கைதிகளின் நிலையையும் ஜி ஜின்பிங்கின் முரட்டுத்தனமான நடத்தையையும் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

சீனாவின் மேற்கு பகுதியிலுள்ள சின்ஜியாங் பிரதேசத்தில் மதத் தீவிரவாதத்தால் ஈர்க்கப்பட்டவர்கள் என்று அதிகாரிகள் கூறுகிற உய்கர் முஸ்லிம்களை போதனை முகாம்களில் அடைத்து அவர்களுக்கு கருத்தியல் கல்வி புகட்டுவதை சீனா சட்டபூர்வமாக்கியுள்ளது.

சின்ஜியாங்கில் உய்கூர் முஸ்லிம்கள் காணாமல் போவது தொடர்பாக உலக அளவில் கவலைகள் எழுந்துள்ளன.10 லட்சம் உய்கர் முஸ்லிம்களை சீனா சிறையில் அடைத்திருக்கலாம் என்ற புகார் ஐநா மனித உரிமைகள் குழுவின் கவனத்துக்கு வந்தது. இந்த பகுதியில் சீனா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை முதல் முறையாக விளக்கமாக இந்த சம்பவம் சுட்டிக்காட்டுகிறது. தொழிற்பயிற்சி அளிப்பதும், நடத்தையை திருத்துவதும், கருத்தியல் கல்வி வழங்குவதும் இதன் நோக்கமாக இருக்கும் என்று இந்த முகாம்களை சட்டபூர்வமாக்கியுள்ள சின்ஜியாங் பிரதேச அரசு கூறுகிறது.

இந்நிலையில், சின்ஜியாங்கில் நிலவும் இஸ்லாமிய நடைமுறைகளுக்கு எதிரான பெரியதொரு நடவடிக்கையை சீனா தொடங்கியுள்ளது. உணவு பொருட்கள் அல்லாத ஹலால் பொருட்களை பயன்படுத்துவதை நிறுத்த சீனா விரும்புகிறது.

பற்பசை போன்ற பொருட்களை ஹலால் என்ற சொல்லால் குறிப்பது, மதம் சார்ந்த மற்றும் மதச்சார்பற்ற வாழ்க்கைக்கு இடையிலான கோடுகளை அழித்து, மதத்தீவிரவாதத்துக்கு மக்களை இரையாக்குவதாக செய்தித்தாள் ஒன்று குறிப்பிடுகிறது.

முஸ்லிம் பெண்கள் முகத்தை மூடும் துணிகளை அணிவது தடை செய்யப்படுவதாக புதிய விதிமுறைகள் தெளிவுபடுத்தியுள்ளன.கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், அரசு அதிகாரிகளும் பொதுவெளியில் பேசும்போது உள்ளூர் மொழியில் அல்லாமல், மான்ட்ரின் சீன மொழியில் பேச வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

## சரி, இந்தச் சூழலில் உடனடியாக உலக நாடுகள் என்ன செய்யலாம்?

அடுத்த ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெறவிருக்கும் 'இனஅழிப்பு ஒலிம்பிக்' போட்டிகளைப் பகுதியளவு புறக்கணிக்கலாம்; விளையாட்டு வீரர்கள் மட்டும் கலந்துகொண்டு, அதிகாரத் தரப்பினர் போன்றோர் புறக்கணிப்பு செய்யலாம். நிறுவனங்கள் தங்கள் விநியோகச் சங்கிலிகளில் பருத்தி, சூரியசக்தித் தகடுகள் போன்ற ஜின்ஜியாங் தயாரிப்புகளைத் தவிர்க்கலாம்.

ஒரு அறிவார்ந்த ஒரு எதிர்வினையை முன்னெடுப்பதன் மூலம் சீனாவைக் கடுமையாக தண்டிக்கலாம்!

# கருத்துப் ப(ர)டம்

நன்றி: 'தினமலர்'




## சொல்றாங்க...

"அண்ணாவின் அரசியல் வாரிசு, கருணாநிதியின் கொள்கை வாரிசு"

**மு.க.ஸ்டாலின்**

(இத, இத, இதத்தான் தமிழர்கள் எதிர்பார்க்கிறோம்!)

"டெல்லியில் வாழும் 2 கோடி மக்களுக்காகப் போராடியதுதான் நான் செய்த குற்றம்'

**கெஜ்ரிவால்**

(அந்தக் குற்றத்துக்காக மக்கள் மனங்களில் நீங்க நிலைச்சு இருப்பீங்க. அதுபோதுமே!)

எத்தனை அறிக்கைகள் விட்டாலும் நீட் தேர்வில் அதிமுக, பாஜக செய்த துரோகத்தை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்"

**கே.எஸ்.அழகிரி**

(மன்னிக்க முடியாத இந்தக் கூட்டணிக்கு தமிழக மக்கள் முதலில் கொடுத்த அடிதான் தேர்தல் தோல்வி! இன்னும் அடுத்தடுத்து கொடுப்பார்கள்.)

"எஸ்.பி.பி. இல்லாமல் இசை நிகழ்ச்சி நடக்குமா என யோசிக்க முடியவில்லை"

**சித்ரா**

(உங்களுக்கு தெரியுது! ஆனா சில இம்சை ஞானிகளுக்கு புரியவே மாட்டேங்குதே!)

# விளிம்பில்

## இரானில் புதிய அதிபர்

இரானின் புதிய அதிபராக ஆகஸ்ட் மாதம் இப்ராஹிம் ரையீசி பதவியேற்கவுள்ளார்.

அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து, பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ளும் இரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவில் எவ்வகை மாற்றங்கள் இருக்கும் என்பது குறித்து விவாதங்கள் எழுகின்றன.

அமெரிக்கா இதுவரை எந்தவொரு முறையான அறிவிப்பையும் வெளியிடவில்லை, ஆனால் தனது விருப்பத்தை ஜனாதிபதி ஜோ பைடன் தனது தேர்தல் உரைகளிலேயே தெளிவுபடுத்தியிருந்தார். இரான் அணுசக்தி ஒப்பந்தத்தில் மீண்டும் பங்கெடுப்பதற்கான பேச்சு வார்த்தைகளும் தொடங்கப்பட்டன.

ணுசக்தி ஒப்பந்தம் 2015 ஆம் ஆண்டில் கையெழுத்தானது. இது ஒரு வருடத்திற்குப் பிறகு செயல்படுத்தப்பட்டது. அமெரிக்காவைத்

அமெரிக்காவால் தனிப்பட்ட முறையில் தடை விதிக்கப்பட்ட இரானைச் சேர்ந்த சிலரில் ரையீசியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா, இரான் ஆகிய இரு நாடுகளிலும் தலைமை மாற்றம் ஏற்பட்டுள்ளது. இரு நாடுகளும் தமக்கிடையேயான உறவில் புதிய சமன்பாடுகளின் சாத்தியங்களை ஆராய்கின்றனர்.

தவிர, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்களான பிரிட்டன், பிரான்ஸ், சீனா, ஜெர்மனி மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளும் இதில் உள்ளன. ஆனால், 2018 ஆம் ஆண்டில், டொனால்ட் டிரம்பின் ஆட்சிக் காலத்தில், அமெரிக்கா இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகிவிட்டது.

இரானில் புதிய மாற்றத்திற்குப் பிறகு இரான் ஜனாதிபதி பதவிக்கு இப்ராஹிம் ரையீசி

சல்மான் ராவி

தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் முக்கியமான முடிவுகளை அதி உயர் தலைவரான அயதுல்லா அலி கமேனி தான் எடுப்பார் என்று நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

அண்மையில், அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜாக் சல்லிவன், அமெரிக்காவின் பேச்சு வார்த்தை அதி உயர் தலைவர் அயதுல்லா அலி கமேனியுடன் தான் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் அது தொடரும் என்றும் கூறியுள்ளார்.

ரையீசி அதி உயர் தலைவர் அயதுல்லா அலி கமேனியுடன் நெருக்கமாக இருக்கிறார், எனவே ரையீசி முக்கியமான முடிவுகளை எடுப்பதில் எந்தவிதமான தடைகளையும் எதிர்கொள்ள மாட்டார். ஹசன் ரூஹானி மற்றும் கமேனியின்

அரசியல் வேறுபட்டது," என தெரிவித்தார் இராஜீய விவகாரங்களில் நிபுணரான பேராசிரியர் ஹர்ஷ் வி பந்த்,

"நீண்ட காலமாக பொருளாதாரத் தடைகளை எதிர்கொண்டுள்ள இரான், இப்போது அதிலிருந்து வெளியேற விரும்புகிறது. எனவே இதுபோன்ற பல இராஜீய பிரச்னைகளில் தனது பிடிவாதமான அணுகுமுறையை நிச்சயமாக மாற்றிக்கொள்ளும்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இப்ராஹிம்

இருப்பினும், இரானின் தரப்பிலிருந்து அணு ஆயுதம் தயாரிப்பதில்லை என்ற உறுதியும் 2015 அணுஆயுத ஒப்பந்தத்திற்குட்பட்டு நடப்பது என்ற உறுதியும் அமெரிக்காவுக்குக் கிடைத்தால் தான் ஈரான்—அமெரிக்க உறவுகளில் மாற்றம்

சாத்தியமாகும் என்று வெளிநாட்டு விவகாரங்களில் நிபுணர்கள் சிலர் நம்புகின்றனர்.

எந்தெந்த விஷயங்களில் இரானைத் தயார் படுத்துவதில் அமெரிக்கா வெற்றியடைகிறது என்பதைப் பொருத்தே இது உள்ளது. இரான் இப்போது மற்ற நாடுகளுடனான வர்த்தகத்தை மீண்டும் மீட்டெடுக்க விரும்புகிறது. ஏனென்றால் கடும் பொருளாதார நெருக்கடியை நீண்ட காலமாகச் சந்தித்து வருகிறது.

அமெரிக்கா இரண்டுமே இது வரை வெளிப்படையாகக் கூறவில்லை. ஆனால், ராஜரீக மட்டத்தில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம், ஈரான் விஷயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன என்பது விரைவில் தெளிவாகத் தெரியும்.

## ரையீசி வெற்றியால் உலகுக்கும், இரானுக்கும் என்ன நடக்கும்?

மத்திய கிழக்கு அரசியலில் சவுதி அரேபியாவுக்கு டொனால்ட் டிரம்ப் நிறைய முன்னுரிமை அளித்தார். ஆனால் சவுதி அரேபியா குறித்த தனது நிலைப்பாட்டை பைடன் தெளிவுபடுத்தவில்லை.

இரானுடனான உறவுகளை அமெரிக்கா மென்மையாக்கிக்கொண்டால், அது சவுதி அரேபியாவுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தலாம். ஏனெனில் இரானுக்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையிலான உறவுகள் அவ்வளவு சிறப்பாக இல்லை.

வெளியுறவு நிபுணர் மனோஜ் ஜோஷி, ஹசன் ரூஹானியின் பதவிக்காலத்தில் தான் இரான் தொய்வடைந்தது என்று கருதுகிறார். ரூஹானியின் முடிவுகள் அதி உயர் தலைவரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டியிருந்ததால் இப்படி இருந்திருக்கலாம் என்றும் அவர் கூறுகிறார்.

தன் எண்ணம் என்ன என்பதை இரான், "ரையீசியின் ஆட்சியின் கீழ் தூய்மைவாத இஸ்லாமிய ஆட்சியை நிறுவ கடும்போக்காளர்கள் முயற்சி செய்வார்கள். இதனால், சமூக செயல்பாடுகள் மீது மேலும் அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வாய்ப்புள்ளது. பெண்களின் உரிமையும், வேலை வாய்ப்புகளும் குறையும். ஊடகங்கள், சமூக ஊடகத் தளங்கள் மீதான கட்டுப்பாடுகள் மேலும் இறுக்கமாகும்" என்று பிபிசி பாரசீக சேவையின் கஸ்ரா நஜி தெரிவிக்கிறார்.

கடும்போக்காளர்கள் மேற்குலகத்தின் மீது சந்தேகம் கொண்டவர்கள். ஆனால், ரையீசியும், அதி உயர் தலைவர் கமேனியும் இரானின் அணுக்கரு செயல்பாடுகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தம் ஒன்று மீண்டும் ஏற்படவேண்டும் என்று விரும்புகிறவர்கள். விரிவான கூட்டு செயல்திட்டம் என்ற முந்தைய ஒப்பந்தத்தில் இருந்து 2018ம் ஆண்டு அமெரிக்கா வெளியேறியது. அதன் பிறகு இரான் மீது கடுமையான தடைகளை விதித்தது

டிரம்ப் நிர்வாகம். இந்த தடைகளால் சாமானிய இரானியர்களுக்கு பொருளாதார சிக்கல்கள் ஏற்பட்டன. இதனால் பரவலான அதிருப்தி தோன்றியது. அமெரிக்காவின் நடவடிக்கைக்குப் பதிலடியாக, அந்த ஒப்பந்தத்தில் தடை செய்யப்பட்டிருந்த அணுக்கரு நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கியது இரான். மீண்டும் பழைய ஒப்பந்தத்தை உயிர்ப்பிக்கும் முயற்சியில் வியன்னாவில் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. அமெரிக்க அதிபர் பைடனும் அதை மீண்டும் உயிர்ப்பிக்கவே விரும்புகிறார். ஆனால், இரு தரப்பும் எதிர்த் தரப்பு முதலில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விரும்புகின்றன.

## தேர்தல் சுதந்திரமாக நடைபெற்றதா?

ரையீசியின் மூன்று போட்டியாளர்களும், பதவி நிறைவு பெறும் அதிபர் ஹசன் ரூஹானியும் ரையீசியின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். வாக்கு எண்ணிக்கை நடந்து வரும் நிலையில், அவருக்கு 62 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளதாக

அரசு தொலைக்காட்சி கூறியுள்ளது. இரானில் சுமார் 5.9 கோடி வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 2.8 கோடி பேர் வாக்களித்தனர். இதில் ரையீசி சுமார் 1.8 கோடி வாக்குகள் பெற்றுள்ளார். 40 பெண்கள் உள்பட சுமார் 600 பேர் வேட்பாளர்களாகப் பதிவு செய்துகொண்டனர். ஆனால், கடும்போக்குடைய கார்டியன் கவுன்சிலின் 12 ஜூரிகளும், இறையியலாளர்களும் அவர்களில் 7 பேருக்கு மட்டுமே போட்டியிடுவதற்கு அங்கீகாரம் அளித்தனர். மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத இந்த

அவர், தற்போதைய அதிபர் ரூஹானியுடன் அதிபர் தேர்தலில் போட்டியிட்டு படுதோல்வி அடைந்தார்.

பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கவும், ஊழலை ஒழிக்கவும் தம்மால் முடியும் என்று வாதிட்டு தேர்தலை சந்தித்தார் இவர். ஆனால், 1980களில் பெருமளவிலான அரசியல் கைதிகள் மரண தண்டனை விதிக்கப்பட்டு கொல்லப்பட்டதில் இவரது பங்கு குறித்து பல இரானியர்களும்,

கார்டியன் கவுன்சில்தான் வேட்பாளர்களுக்கு போட்டியிடத் தகுதி உண்டா என்பதை முடிவு செய்யும். இந்த முடிவு இறுதியானது.

இப்படிப் போட்டியிடத் தகுதி பெற்ற 7 பேரில் 3 பேர் தேர்தலுக்கு முன்பாகவே போட்டியில் இருந்து விலகினர். இதனால், 4 பேர் மட்டுமே களத்தில் இருந்தனர். இதனால், அதிருப்தியாளர்களும், சீர்திருத்தவாதிகளும் தேர்தலைப் புறக்கணிக்க முடிவு செய்தனர்.

வாக்குப் பதிவும் 50 சதவீதத்துக்கு குறைவாகவே இருந்தது. 2017 அதிபர் தேர்தலில் 73 சதவீதம் வாக்குகள் பதிவானது குறிப்பிடத்தக்கது.

## எப்ராஹீம் ரையீசி யார்?

60 வயதான மதகுரு ரையீசி பெரும்பாலும் வழக்குரைஞராகவே இருந்தவர். 2019ல் இவர் நீதித்துறையின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். இதற்கு 2 ஆண்டுகள் முன்பு மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கவலை கொண்டுள்ளனர்.

ஈரானில் அண்மையில் நடந்து முடிந்த அதிபர் தேர்தல், அந்நாட்டு சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி இப்ராஹிம் ரைசி வெற்றி பெற்றார். ஈரான் அதிபர் தேர்தல் குறித்து கருத்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் கருத்து தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியிருப்பதாவது: ஈரானில் அண்மையில் நடந்து முடிந்த அதிபர் தேர்தல், ஈரான் மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்காத ஒரு முன் தயாரிக்கப்பட்ட செயல்முறை என்றும் இது அணுசக்தி ஒப்பந்தத்தை மீண்டும் அடைய முயற்சிக்கும் அமெரிக்காவின் வேகத்தை பாதிக்காது என்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் கருத்து தெரிவித்துள்ளது.

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix**

ఇడ్లీ దోస పిండి

இட்லி / தோசை மாவு

ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്




100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

# மந்திரப்

## ட்விட்டர் – இந்திய அரசு:

புதிய டிஜிட்டல் ஊடக விதிகள் விவகாரத்தில் இந்திய அரசுக்கும் ட்விட்டர் நிறுவனத்துக்கும் இடையே மோதல் வலுத்து வரும் நிலையில், அந்த நிறுவனத்தின் மூத்த நிர்வாகி தர்மேந்திர சாதுர் பதவி விலகியுள்ளார். இவர் இந்த சமூக ஊடக நிறுவனத்தில் இடைக்கால குறைதீர் அதிகாரியாக சமீபத்தில்தான் நியமிக்கப்பட்டார்.

இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய டிஜிட்டல் ஊடக விதிகளின்படி பெரிய சமூக ஊடக நிறுவனங்களில் இத்தகைய பதவிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும்.

இந்த நிலையில், தர்மேந்திர சாதுரின் ராஜினாமா குறித்து ட்விட்டர் எந்த கருத்தையும் வெளியிடவில்லை. ஆனாலும், தர்மேந்திர சாதுரின் பெயர், இந்திய அரசு விதிகளின்படி ட்விட்டர் இணையதள பக்கத்தில் இடம்பெறவில்லை.தகவல் தொழில்நுட்பம் (இடைக்கால வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் ஊடக நெறிகள் விதி) விதிகள் கடந்த பிப்ரவரி மாதம் அறிவிக்கப்பட்டது.

அந்த விதிகளின்படி,இந்தியாவில் சேவை வழங்கும் சமூக ஊடக நிறுவனங்கள், அதன் மூன்று முழு நேர நிர்வாகிகளாக இந்தியர்களை நியமிக்க வேண்டும். அவர்கள் இந்திய குடியிருப்புவாசிகளாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதில் ஒருவர், விதிகள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும், மற்றொருவர் சமூக ஊடகத்துக்கு வரும் புகார்களை கவனிப்பவராக இருக்க வேண்டும், மற்றொருவர் 24 மணி நேரமும் அரசின் சட்ட அமலாக்கத்துறைகளுடன் ஒருங்கிணைந்து விதிகள் அமலாக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

புதிய ஆணைப்படி சர்ச்சைக்குள்ளான தகவல் பற்றி தெரிய வந்தவுடன் 36 மணி நேரத்துக்குள் அது

பிரசாந்தோ கே. ராய்

தொடர்பான இடுகைகளையோ பதிவுகளையோ சம்பந்தப்பட்ட சமூக ஊடக நிறுவனம் தமது தளத்தில் இருந்து அகற்ற வேண்டும். அந்த நிறுவனம் ஆட்சேபகர தகவல்கள், ஆபாச காட்சிகள் போன்றவற்றை தானியங்கியாக அகற்ற ஒரு செயல்முறையை உருவாக்க வேண்டும்.

இந்த நிலையில், ட்விட்டர் நிறுவனம் புதிய விதிகளின்படி சில நிர்வாகிகளை நியமித்தது தொடர்பாக அனுப்பிய பதிலை ஆராய்ந்த இந்திய தகவல் தொழில்நுட்பத்துறை, ட்விட்டர் நிறுவனம் நியமித்த புதிய நிர்வாகிகளில் இருவர் அதன் முழு நேர ஊழியர்கள் அல்ல என்று சுட்டிக்காட்டியது.

மேலும், அந்த கடிதத்தில் இடம்பெற்ற இடம் ட்விட்டர் நிறுவனத்துக்குரியது அல்ல என்றும் அது ஒரு சட்ட ஆலோசனை வழங்கும் அலுவலகம் என்றும் அரசு கூறியது. மேலும், ட்விட்டர் நிறுவனத்தின் தவறான செயல்பாடுகள் இருந்தால் அதற்கு பொறுப்பு வகிக்கும் தலைமை அதிகாரி பற்றிய விவரத்தை ட்விட்டர் நிறுவனம் தெரிவிக்கவில்லை என்றும் இந்திய அரசு கூறியது.

ஆனால், இது தொடர்பாக விரிவாக விளக்கம் அளிக்காத ட்விட்டர் நிறுவனம், இடைக்காலமாக ஒரு தலைமை அதிகாரியை நியமித்துள்ளதாக மட்டும் குறிப்பிட்டது. புதிய வழிகாட்டுதல்களுக்கு உடன்பட இயன்ற அனைத்து முயற்சியும் எடுக்கப்படுவதாக ட்விட்டர் நிறுவனம், அரசுக்கு அனுப்பிய கடிதத்தில் கூறியிருந்தது.

ஆனால், தர்மேந்திர சாதுரின் திடீர் ராஜினாமா இந்த விவகாரத்தை தற்போது மேலும் சிக்கலாக்கியிருப்பதாக கருதப்படுகிறது. குறிப்பாக,

காவல்துறை அனுப்பி சம்மனில் இருந்து விலக்கு பெற தற்காலிக அனுமதியை நீதிமன்றத்திடம் இருந்து சமீபத்தில்தான் ட்விட்டர் இந்திய பிரதிநிதி பெற்றிருந்தார். அந்த வழக்கில் கைது நடவடிக்கையில் இருந்து அவருக்கு நீதிமன்றம் பாதுகாப்பு வழங்கியிருந்தாலும், அவருக்கு எதிரான வழக்கு தொடர்ந்து நிலுவையிலேயே உள்ளது.

சில வாரங்களுக்கு முன்பு, 72 வயது முஸ்லிம் பெரியவரின் தாடியை மழிக்கும் காட்சியை ட்விட்டரில் சில பத்திரிகையாளர்கள், பிரபலங்கள் பகிர்ந்திருந்தனர். அந்த காட்சி இந்திய தலைநகர் டெல்லியை அடுத்த காஜியாபாத் மாவட்டத்தில் நடந்ததாக கூறப்படுகிறது. ஆனால், காணொளியில் இடம்பெற்றது போல அது வெறுப்புணர்வைத் தூண்டும் நோக்குடன் கூடியதல்ல என்றும் தங்களுடைய குடும்பத்தாருக்கு மூட நம்பிக்கை தொடர்பான பொருட்களை விற்ற முஸ்லிம் பெரியவரை அவரை தாக்கிய நபர்கள் ஏற்கெனவே அறிந்ததாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர். இந்த விவகாரத்தில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரத்தில் உண்மையை சரிபார்க்காமல் தவறான தகவலை பகிரவும் அதன் மூலம் வன்முறையை தூண்டவும் சில நபர்களின் இடுகைகள் காரணமாக இருந்ததாகக் கூறி உள்ளூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அளித்த புகாரின்பேரில் காவல்துறையினர் ட்விட்டர் நிறுவனம் மீது வழக்குப்பதிவு செய்தனர். அத்துடன் சர்ச்சைக்குரிய காணொளியை தங்களுடைய ட்விட்டர் பக்கத்தில் இருந்து பகிர்ந்ததற்காக 'தி வயர்' என்ற இணையதளம், மூன்று பத்திரிகையாளர்கள், மூன்று அரசியல் கட்சி தலைவர்கள் மீதும் காவல்துறையினர் வழக்கு பதிந்தனர்.

காங்கிரஸ் கட்சியினருக்கு எதிராக, சமூகத்தில் வகுப்புக்கலவரத்தை தூண்டும் நோக்குடன் காணொளி பகிரப்பட்டதாக காவல்துறை தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஜூன் 21ஆம் தேதி இந்த பதிவு தொடர்பான 50 இடுகைகளை ட்விட்டர் நிறுவனம் கட்டுப்படுத்தியிருந்தது. மேலும், காணொளி காட்சி மூலம் காவல்துறை உயரதிகாரியுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக ட்விட்டர் நிறுவனத்தின் இந்திய பிரதிநிதி தெரிவித்தார். ஆனால், அவர் ஆஜராக வேண்டும் என்று காவல்துறை தரப்பில் இருந்து ட்விட்டர் நிறுவனத்துக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

தங்களுடைய தளத்தில் பகிரப்பட்ட பிறரின் இடுகைகள் தொடர்பாக சமூக ஊடக நிறுவன பிரதிநிதி ஆஜராக சம்மன் அனுப்பப்படுவது அரிதான நடவடிக்கையாக கருதப்படுகிறது. சர்ச்சைக்குரிய கருத்துகளை இந்திய சட்டவிதிகளுக்கு உட்பட்டு நீக்குவோம் என உத்தரவாதம் அளித்தால், இந்திய செல்போன் நிறுவனங்களைப் போலவே, சமூக ஊடக நிறுவனங்களுக்கும் சட்ட பாதுகாப்பு வழங்கப்படும். இதைத்தான் இடைக்கால பாதுகாப்பு அந்தஸ்து என்று இந்திய தகவல் தொழில்நுட்பத்துறை அழைக்கிறது.

ஆனால், தற்போதைய விவகாரத்தில் ட்விட்டர்

நிறுவனம், இந்திய அரசின் டிஜிட்டல் ஊடக விதிகளுக்கு இணங்கும் நடவடிக்கையில் முழுமையாக ஈடுபாடு காட்டாத நிலை தென்படுவதால், இடைக்கால பாதுகாப்பு அந்தஸ்தை அந்த நிறுவனம் இழப்பதாக இந்திய அரசு கூறியுள்ளது. ட்விட்டர் நிறுவனத்தின் விதிகளின்கீழ் இந்தியாவில் பதிவாகும் முதலாவது வழக்காக இருக்கும்.

ஆனால், அரசின் டிஜிட்டல் ஊடக விதிகளுக்கு உடன்படும் விவகாரத்தில் அரசின் விதிகளை எதிர்ப்பது ட்விட்டர் மட்டுமல்ல. கடந்த வாரம்

செயல்பாடுக்கு எதிர்வினையாற்றுவதன் மூலம் விதிகளுக்கு உடன்படாத நிறுவனங்கள் மீது எத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை ட்விட்டர் மூலமே சமூக ஊடகங்களுக்கு காண்பிக்க இந்திய அரசு முயல்வதாகவே இந்த விவகாரம் பார்க்கப்படுகிறது என்று டிஜிட்டல் உரிமைகள் செயல்பாட்டாளர் நிகில் பஹ்வா கூறுகிறார். இந்தியாவில் இன்டர்நெட் சேவையில் பங்களிப்பை வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் மீது மேலதிக கட்டுப்பாட்டை பிரயோதிக்கும் நடவடிக்கையாகவே இதை பார்க்க முடிகிறது என்று அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் இடைக்கால பாதுகாப்பு அந்தஸ்தை இழப்பதென்பது, சமூக ஊடக நிறுவனங்களுக்கு சிக்கலானதாக மாறும். இந்தியா போன்ற பெரிய நாட்டில் மத உணர்வு என்பது எளிதில் காயம் அடையக்கூடியது. உதாரணமாக, இந்துக்களால் புனிதமாக கருதப்படும் பசுவை கேலிச்சித்திரமாக வரைந்தால் கூட அது மத உணர்வை புண்படுத்தக் கூடியதாக கருதப்படலாம். அப்படி ஒரு நிலை வந்தால், ட்விட்டர் நிறுவனத்துக்கு எதிராக ஆயிரக்கணக்கில் புகார்கள் குவியலாம். அப்படி ஒரு வழக்கு ட்விட்டருக்கு எதிராக பதிவாவதாக இருந்தால், அதுவே, டிஜிட்டல் ஊடக

இதே விவகாரத்தில் அரசின் விதிகளை எதிர்த்து வாட்ஸ்அப் நிறுவனம் டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. உலக அளவில் இந்தியாவில் மிகப்பெரிய பயனர் பலத்தை கொண்டுள்ளது ஃபேஸ்புக் நிறுவனம் நடத்தி வரும் வாட்ஸ்அப். இந்தியாவில் இதன் பயனர்களின் எண்ணிக்கை 40 கோடிக்கும் அதிகமாகும்.

சர்ச்சை தகவலின் மூலத்தை கண்டறியும் இந்திய அரசின் விதிப்படி நடப்பதென்றால், என்கிரிப்ட் செய்யயப்பட்ட இரு தரப்பு உரையாடலை டிகிரிப்டிங் செய்வது அவசியம். இப்படி செய்வது தங்களுடைய பயனர் உரையாடல் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கும் என்று கருவதாகக் கூறி வாட்ஸ்அப் நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளது.

இதே நடைமுறையை சிக்னல் செயலி, ஆப்பிள் செல்பேசியின் ஐமெசேஜ் ஆகியவையும் கடைப்பிடிப்பதால், அவை கூட இந்திய அரசின் டிஜிட்டல் ஊடக விதிகளின் கட்டுப்பாடுகளுக்கு உடன்படும் விஷயத்தில் சிக்கலை எதிர்கொண்டுள்ளன. ஆனால், இப்போதைக்கு அரசு வாட்ஸ்அப் செயல்பாடு மீதே கவனம் செலுத்தி வருவதாக தெரிகிறது.

## சொற்களுக்கும் அகழாய்வு தேவை

கீழடி அகழாய்வில் கிடைக்கும் பழங்கால மண்பாண்டங்களுக்கு என்ன பெயர் வைக்கலாம்? 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய பொருட்கள் காணக் கிடைத்ததுபோல் சமகாலத்தில் அவற்றுக்கு வழங்கிய பெயர்கள் என்ன என்பது நமக்கு எட்டாது. மண்ணில் சொரித்துப்போகும் பொருட்கள் கிடைக்கின்றன; காலம் எளிதில் அரித்துவிடாத சொல் கிடைப்பதில்லை!

இந்தப் பொருட்களின் பயனை வைத்து ஆய்வாளர்கள் அவற்றை விவரிக்கவோ, பெயர் கொடுக்கவோ வேண்டும். புதிதாகச் சொற்களைச் செய்துகொள்வதைத் தவிர்க்க இயலாது. ஆனாலும், இப்படிச் சொல்லாக்கம் செய்வதில் ஒரு பிரச்சினை இருப்பதையும் தொல்லியல் ஆர்வலர்கள் கவனிக்க வேண்டும்.

## மொழியில் தெரியும் மரபு

ஏற்கெனவே சொல் இருந்திருக்கிறதா என்று பார்ப்பதைவிட புதிய சொல் செய்துகொள்வதில் நமக்கு முனைப்பு அதிகம். இது மரபுத் தொடர்ச்சியை மொழி வழியே அடையாளம் காணும் வாய்ப்பைக் குறைக்கிறது. கீழடியில் கண்டெடுத்த ஒரு மண்பாண்டத்தை 'சுடுமண் தாங்கி' என்று குறிப்பிடுகிறார்கள். பானை தன்தரையில் நிற்காமல் பிரிமணைபோல் அதைத் தாங்கிக்கொள்ளப் பயன்படுத்தும் பொருள். இப்போதும் புழக்கத்தில் இருக்கும் இதற்குக் 'கலவடை' என்று பெயர். உடைந்த பானையின் தலைப் பகுதியைக் கவிழ்த்து வைத்து, இந்தக் கலவடையை உருவாக்கிக்கொள்வார்கள். கீழடியில் கண்டெடுத்தது இதற்காகவே தனியாகச் செய்யப்பட்டதாகத் தெரிவதுதான் சிறப்பு. தொழிலுக்கு வெளியே இருந்து பார்ப்பவரின் மொழி எழுத்துக்குள் வந்து தொழிலுக்குள் இருக்கும் மொழியை மேக்கரித்துவிடுவது வழக்கம். அப்போது தொழிலுக்கு உள்ளேயே இருப்பவர்கள் தங்கள் மொழிக்குத் தாங்களே அந்நியமாகிவிடுகிறார்கள்.

## அச்சுப் போட்ட மண்பாண்டம்

'சிவப்பு நிறப் பானை ஓடுகள்', 'வண்ணம் தீட்டப்பட்டது', 'அலங்கரிக்கப்பட்டது' என்றும் சிலவற்றைச் சொல்கிறார்கள். மண்பாண்டங்கள் இரண்டு வகை. திருகையில் பாண்டங்களைச் செய்து, வெயிலில் பதமாக உலர்த்துவார்கள். தூர் திறந்தவாறுதான் இருக்கும். உட்புறமாக அணைவுக்கு ஒரு கருங்கல்லைப் பிடித்துக்கொண்டு, வெளிப்புறத்தில் பலகையால் தட்டித் தட்டிப் பெரிதாக்கிக்கொள்வது பெருவாரியான வகை. இந்த வகையை 'தட்டு' என்பார்கள். இரண்டாவது வகை, திருகையில் செய்து அறுத்து அப்படியே

தங்க.ஜெயராமன்

உலர்த்தி, சுட்டு எடுத்துக்கொள்வது. சிறியதாகவே, அழகாகச் செய்யப்படும் இவற்றைத் தட்டிப் பெருக்க வேண்டியதில்லை. இந்த வகையை 'அறுப்பு' என்பார்கள். இவற்றைச் செய்பவர்களை 'சிட்டிக் குயவர்' என்று அழைத்தார்கள்.

'அறுப்பு' வகைப் பாண்டங்களுக்குக் கருக்கு ஏற்ற ஒரு முறை உண்டு. சுடும்போது அவை அந்திச் சூரியனாகப் பழுக்கும். அப்போது மூட்டத்தைக் கலைத்து உமியை விசிறினால் அவை நாவற்பழமாகக் கறுத்துவிடும். இவற்றை 'கருஞ்சூளைப் பாண்டம்' என்பார்கள். முதல்

வகையைச் சுடுவதற்காகச் சூளையில் அடுக்கும் முன்பு வெள்ளைச் செம்மண், சிவப்புச் செம்மண் என்று இரண்டு செம்மண் கரைசலைப் பூசுவார்கள். இப்படித்தான் அவை சிவப்பு நிறப் பானை ஓடுகளாகின்றன. இரண்டு வகைப் பாண்டங்களிலும் கழுத்தில் பொன் சரடுகள்போல் இழைப்பு இருக்கும். சிவப்பு வகையில் மட்டும் இந்த இழைப்புக்குக் கீழே உள்ள நெஞ்சடியில் அச்சுப் பதித்து அலங்கரிப்பார்கள். இதற்காக மரத்தில், மாட்டுக் கொம்பில் செய்த குந்துவை, கோரை, தேர் என்ற பெயருள்ள அச்சுகள் உண்டு.

## நெஞ்சடியில் தமிழி

கவனிக்க வேண்டியது என்னவென்றால், அச்சுப் போட்ட பாண்டங்களில் தமிழி (தமிழ் பிராமி) எழுத்து பொறிக்க முடியாது. எழுத்துப் பொறிக்க வேண்டுமானால், அவை அச்சுப் போடாத மொழுக்கம் பானைகளாகவே இருக்க வேண்டும். கருஞ்சூளைப் பாண்டங்களில் எழுத்து இருப்பதாகத் தெரியவில்லை. தட்டு வகைப் பாண்டங்கள் உலரும்போது, ஒரு பதத்தில் தமிழியைப் பொறிக்க முடியும். அப்போது பொறித்தால் எழுத்துகள் பிசிறில்லாமல் இருந்திருக்கும். சூளையில் வைக்கும்போது பூசும் செம்மண்ணை இரண்டு சுற்று கூடுதலாகப் பூசினால் பாண்டத்தின் நெஞ்சடி இலை கனத்துக்குப் பதமாகிவிடும். அப்போதும் தமிழியைக் கீற இயலும். அந்த

முறையில் கீழடி ஓடுகளில் தெரியும் பிசிறோடு எழுத்துகள் அமையலாம்.

அரிக்கமேட்டுப் பானை ஓடுகளில் 'வேளார்' என்ற சொல் இருப்பதாக ஐராவதம் மகாதேவன் சொல்லியுள்ளார். இந்தச் சொல் இப்போது வரை கொள்ளிடக் கரைக்குத் தெற்கே உள்ள குயவர்களின் சாதி பட்டமாகும். கீழடியில் கண்ட தமிழிப் பெயர்களை இந்தப் பின்னணியில் எப்படியெல்லாம் விளங்கிக்கொள்ளலாம் என்பதை ஆராய வேண்டும்.

கீழடி ஓடுகளில் 'துளையிடப்பட்ட பானை ஓடு' என்பதாக ஒன்று. அண்மைக் காலம் வரை சோறு வடிப்பதற்கு மண்ணாலான வடிதட்டு இருந்தது சிலருக்காவது நினைவிருக்கும். அடுப்பு, கிணற்று உறைகளை வெறும் களிமண்ணால் செய்யாமல், கூளமண்ணால் செய்வது வழக்கம். 'கூளமண்' என்பது களிமண்ணோடு கூளம், கருக்காய், உமியைச் சேர்த்துப் பிசைந்து வருவதாகும். மதுரை அருங்காட்சியகத்தின் கீழடி அடுப்பும் கிணற்று உறையும் களிமண்ணால் செய்ததாகத் தெரிகின்றன. கூளமண் உருப்படிகளானால் இந்நேரம் மண்ணுக்குள் சிரித்துப்போயிருக்கும். வெறும் களிமண்ணால் ஆனதால்தான் சுடுமண் உருவங்கள் இப்போதும் கிடைக்கின்றன. ஆனால், வெறும் களிமண்ணில் சிறிய உருவங்களைத்தான் செய்வார்கள். பிற்காலத்துப் பெரிய குதிரை, கடவுள் சிலைகளைப் போல் அன்றைய உருவங்களும் கூளமண் சிலையானால் அவை மண்ணில் சிரித்துப்போயிருக்கலாம்.

## தாழி கவிழ்ப்பது இதுதானா?

பொதுவாக, ஈமத் தாழிகளை எப்படிச் செய்திருப்பார்கள் என்று ஊகிக்கலாம். நெஞ்சடி வரை அவற்றைத் திருகையில் செய்து, தலைகீழாகக் கவிழ்த்து வைத்து, வெயிலில் உலர்த்தியிருக்க வேண்டும். திறந்திருக்கும் தூர் உலர உலர, அந்தாயம் அந்தாயமாக மண்ணைச் சேர்த்துத் தட்டி, பெருக்கியிருப்பார்கள். இதனால்தான், தாழிகள் வாழைப்பூ வடிவில் கும்பாக இருக்கின்றன. பெரிய தாழியை முழுதுமாகத் திருகையில் செய்ய முடியாது. செய்து, சுட்டு எடுப்பதற்கு நான்கு நாட்களாகலாம்.

புறநானூற்றுப் பாடல் ஒன்றில் வருவதுபோல், இறந்த பின் ஒருவருக்குத் தாழி செய்யக் கோருவது அவ்வளவு சாத்தியமில்லை. மற்ற பாண்டங்களைப் போல் இந்த மதமதக்கா பானைகளைச் செய்து, சரக்காக வைத்துக்கொள்ளும் வழக்கம் இருந்தது என்பதும் சந்தேகமே. தொல்லியல் ஆய்வு ஒரு பண்பாட்டுத் தொடர்ச்சியை அனுமானித்துக்கொண்டு இயங்கும். அந்தத் தொடர்ச்சிக்குப் பொருட்கள் எப்படி ஆதாரமோ அதைப் போலவே அவற்றின் பெயர்களும் ஒரு சான்று. வகைப்படுத்தவும் விவரிக்கவும் இப்போது புழங்கும் சில பெயர்களைக் காட்டினேன். அந்தந்தத் தொழிலில் புழங்கும் சொற்களைப் பகிர்ந்துகொண்டு உருவாகும் ஆய்வு மொழி இன்னும் செறிவானதாக இருக்குமே!

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix**

ఇడ్లీ దోస పిండి

இட்லி / தோசை மாவு

ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്

100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

## தமிழ்நாடு அரசு அமைத்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்த குழு

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த ஐந்து பொருளாதார நிபுணர்கள் அடங்கிய குழுவை உருவாக்கியுள்ளது தமிழக அரசு. இந்த முடிவில் அரசியல், பொருளாதார பின்னணி என்ன?

தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் முடிவடைந்து மு.க. ஸ்டாலின் தலைமையில் புதிய அரசு பதவியேற்றுள்ள நிலையில், தமிழ்நாடு சட்டப்பேரவை ஆளுநர் உரையுடன் திங்கட்கிழமை துவங்கியது. இதில் உரையாற்றிய ஆளுநர், தமிழ்நாட்டில் பொருளாதாரத்தை மேம்பட்டுவதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கு, சர்வதேச அளவில் அறியப்பட்ட ஐந்து பொருளாதார நிபுணர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப்படுமென அறிவித்தார்.

இந்தக் குழுவில் ரகுராம் ராஜன், எஸ்தர் டஃப்லோ, ஷான் த்ரே, அரவிந்த் சுப்பிரமணியன், எஸ். நாராயணன் ஆகியோர் அடங்கியிருந்தனர். ஆளுநர் உரையில் இடம்பெற்றிருந்த இந்த அறிவிப்பையடுத்து சமூக வலைதளங்களில் ஆதரவுக் கருத்துகளும் எதிர்ப்புக் கருத்துகளும் கேலியும் நிரம்பி வழிந்தன.இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருந்த ஐந்து பேரும் ஒவ்வொரு வகையில் தத்தம் துறை சார்ந்து பரவலாக அறியப்பட்டவர்கள். பட்டியலில் முதலாவதாக இடம்பெற்றுள்ள ரகுராம் ராஜன், இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநராக இருந்தவர். ஆனால், பண மதிப்பிழப்பு விவகாரத்தில் மோதியுடன் ஏற்பட்ட மோதல் காரணமாக, அந்தப் பதவியிலிருந்து வெளியேறியவர்.

டாக்டர் மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது 2008ல் இந்தியாவின் முதன்மை பொருளாதார ஆலோசகராக இவரை நியமித்தார். 2013ல் இவர் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். 2003 முதல் 2007 வரை சர்வதேச நிதியத்தின் முதன்மை பொருளியலாளராக இருந்தார் ரகுராம் ராஜன். ரிசர்வ் வங்கி ஆளுநர் பதவியை விட்டு விலகிய பிறகு, சிகாகோ பல்கலைக்கழகத்தில் பூத் வணிகப் பள்ளியின் பேராசிரியராக பணியாற்றிவந்தார்.

எஸ்டர் டஃப்லோ அமெரிக்காவின் மாஸசூஸட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் பேராசிரியராக பணியாற்றிவருகிறார். ஏழ்மை ஒழிப்பு, வளர்ச்சிப் பொருளாதாரம் ஆகியவை இவரது துறைகள். இவர் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை பெற்றவர்.

டாக்டர் அரவிந்த் சுப்பிரமணியன் இந்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகராக இருந்தவர். தற்போது ப்ரவுன் பல்கலைக்கழகத்தில் உள்ள வாட்சன் இன்ஸ்டிடியூட் ஃபார் இன்டர்நேஷனல் அண்ட் பப்ளிக் அஃபையர்சில் மூத்த உறுப்பினராக இருக்கிறார்.

பேராசிரியர் ஜான் த்ரேவைப் பொறுத்தவரை இந்தியப் பொருளாதாரம் குறித்து விரிவாக அறிந்தவர். எஸ்தர் டஃப்லோவைப் போலவே வளர்ச்சிப் பொருளாதாரம், ஏழ்மை ஒழிப்பு ஆகியவற்றில் தேர்ந்தவர்.

டாக்டர் எஸ். நாராயணன் 2003—04ல் பிரதமர் வாஜ்பாயியின் பொருளாதார ஆலோசகராக இருந்தவர். அதற்கு முன்பாக இந்திய அரசின் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான செயலராக இருந்தவர். தமிழ்நாடு பிரிவு இந்திய குடிமைப் பணி அதிகாரியான நாராயணன், மாவட்ட ஆட்சித் தலைவர், ஊரக மேம்பாடுத் துறை, திட்டமிடுதல் போன்றவற்றில் இரு தசாப்தங்கள் பணியாற்றியவர். தமிழ்நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழலை நன்கு அறிந்தவர்.

இதில் எஸ்தர் டஃப்லோ ஏற்கனவே தமிழ்நாட்டிற்கு பல்வேறு துறைகளில் ஏற்கனவே ஆலோசனை தெரிவித்தவர். 2004ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் எப்படி கிராமங்களில் செயல்படலாம் என்ற ஆலோசனையை வழங்கியவர்.

# தனிவழி !

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

எஸ்தர் டஃப்லோ மற்றும் அவரது கணவர் அபிஜித் பேனர்ஜி ஆகியோர் இணைந்து நிறுவிய The Abdul Latif Jameel Poverty Action Lab (J-Pal) அமைப்பானது 2014ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. சிறந்த நிர்வாகத்தைத் தருவதற்காக, புள்ளிவிவரங்கள் அடிப்படையிலான திட்டமிடலுக்காக இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அந்தத் தருணத்தில் அந்தத் தம்பதியின் பணிகளும் ஆலோசனைகளும் வெகுவாகப் பாராட்டப்பட்டன.

மற்றொரு அறிஞரான ஜான் த்ரேவும் தமிழ்நாடு குறித்த பார்வையும் அக்கறையும் கொண்டவர். அவர் நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென்னுடன் இணைந்து எழுதிய An Uncertain Glory: India and its Contradictions புத்தகத்தில் தமிழ்நாடு பொது சுகாதாரத் துறையின்

வெற்றி குறித்து விரிவாகவும் நேர்மறையாகவும் விவாதிக்கப்பட்டிருந்தது. மருத்துவ சேவைகளை வழங்குவதில் இந்தியாவிலேயே பிற மாநிலங்களை விட தமிழ்நாடு எப்படிச் சிறந்து விளங்குகிறது என்பதை இந்தப் புத்தகத்தில் விளக்கியிருந்தார் ஜான் த்ரே.

இந்தக் குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருப்பார் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இந்தியாவில் மாநிலங்களுக்கு நிதித் துறை சுதந்திரம் மிகக் குறைவாக உள்ள நிலையில் இம்மாதிரி குழுக்கள் தேவையா என சமூக





## வல்லுநர் குழு

அதேபோல, ஆலோசனைக் குழுவின் மற்றொரு உறுப்பினரான டாக்டர் எஸ். நாராயணன், 2018ல் வெளியிட்ட தனது The Dravidian Years புத்தகத்தில், திராவிட இயக்க ஆட்சியில் அதிகாரமும் ஆலோசனையும் எப்படி கீழ்மட்டத்திலிருந்து மேல்நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது என்பதை விளக்கியிருந்தார். திராவிடக் கட்சிகள் மக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து எப்படிச் செயல்பட்டன என்பதையும் ஆய்வுசெய்திருந்தார். தமிழ்நாடு அரசு அளிக்கும் இலவசங்களுக்குப் பின்னால் உள்ள சமூக நிர்பந்தங்கள், தேவைகள் ஆகியவற்றைத் தெளிவாக முன்வைத்தார்.

தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை இந்தக் குழுவினரிடமிருந்து பொருளாதாரம் மற்றும் சமூகக் கொள்கைகளை வகுப்பது, சமூக நீதி, மனித வளத்தை மேம்படுத்துவது ஆகியவற்றில் பொதுவான வழிகாட்டுதலை எதிர்பார்க்கிறது. மாநிலத்தின் பொருளாதாரம், வேலைவாய்ப்பு, உற்பத்தி ஆகியவற்றை வளர்த்தெடுப்பதற்கான ஆலோசனைகளையும் எதிர்பார்க்கிறது.

தமிழ்நாடு அரசின் நிதித் துறையே இந்தக் குழுவின் செயலகமாக இருக்கும். நிதித் துறையின் கூடுதல் தலைமைச் செயலர் எஸ். கிருஷ்ணன் வலைதளங்களில் கேள்விகள் எழுப்பப்பட்டன.

## பொருளாதார வல்லுநர் குழு

“இந்தியாவில் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் பரப்பளவில் ஐரோப்பிய நாடுகளுக்கு இணையானவை. தமிழ்நாட்டின் நிதி நிலை அறிக்கையில் கிட்டத்தட்ட 3 லட்சம் கோடியைக் கையாளுகிறார்கள். சேவைத் துறை, தயாரிப்புத் துறை கடந்த சில ஆண்டுகளில் வெகுவாக வளர்ந்திருக்கின்றன. விவசாயத்தைச் சார்ந்திருப்பது வெகுவாகக் குறைந்திருக்கிறது. ஆகவே பொருளாதார நிபுணர்களின் ஆலோசனை என்பது நிச்சயம் தேவை.

தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் ஏழு அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். இவற்றை நிறைவேற்ற நிச்சயம் இந்தப் பொருளாதார நிபுணர்களின் ஆலோசனை தேவைப்படும்“ என்கிறார் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைத் தலைவர் ஜோதி சிவஞானம்.

ஆனால், தமிழ்நாடு பெரும் கடன் சுமையை எதிர்கொண்டிருக்கிறது. வரி வசூலிக்கும் அதிகாரம் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில், இந்தக் குழுவால் என்ன செய்ய முடியும் என்ற கேள்வியும்

இருக்கிறது.

“தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நிதி ரீதியில் பல சவால்கள் இருக்கின்றன என்பது உண்மைதான். மாநிலத்தின் நிதி நிலை மிக மோசமான நிலைமையில் உள்ளது. மாநிலத்திற்கு பட்ஜெட்டிற்கு உள்ளே 5.7 லட்சம் கடன் இருக்கிறது. பட்ஜெட்டிற்கு வெளியில் 3 லட்சம் கோடி ரூபாய் கடன் உள்ளது. இந்தக் கடன்களுக்காக வருடத்திற்கு 40 ஆயிரம் கோடி ரூபாய் வட்டியாக கட்ட வேண்டியுள்ளது.

இந்த நீண்ட காலக் கடன்கள் ஒருபுறமிருக்க, அன்றாடச் செலவுகளையே சமாளிக்க முடியாத நிலைதான் நிலவுகிறது. இதன் காரணமாகத்தான் அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் வயது அதிகரிக்கப்பட்டது. இதுபோல கடந்த 100 வருடங்களில் இது நடந்ததில்லை. அன்றாடச் செலவுகளையே அரசால் சமாளிக்க முடியவில்லை என்பதற்கு இதுதான் சிறந்த உதாரணம். இதனால்தான் அரசு முதலில் நிதி குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிடப்போவதாகச் சொல்லியிருக்கிறது. இம்மாதிரிச் சூழலில், இதுபோன்ற நிபுணர்களின் ஆலோசனை மிக அவசியம்“ என்கிறார் ஜோதி சிவஞானம்.

இந்தக் குழு அமைக்கப்பட்டது மிகச் சிறப்பான நடவடிக்கை என்கிறார் காங்கிரஸ் சார்புடைய பொருளாதார நிபுணரான ஆனந்த் சீனிவாசன். “இது மிகச் சிறப்பான குழு. இந்தக் குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்தன்மை இருக்கிறது. எஸ். நாராயணன் வருவாய் ஈட்டுவதற்கான வழிகளைச் சொல்வதில் சிறந்தவர். எஸ்தர் டஃப்லோவும் ஜான் த்ரேவும் ஏழ்மை ஒழிப்பில் நிபுணர்கள். ரகுராம் ராஜன் வட்டிச் சுமை குறைப்பதை பற்றி, நிதியை கொண்டுவருவதில் நிபுணர்.

மாநிலத்தின் கடன்களை நிர்வகிப்பதில் அவருடைய பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்கும். அரவிந்த் சுப்பிரமணியன், மாநிலத்தின் தற்போதய பொருளாதாரத்திற்குள் அதனை சிறப்பாக நிர்வகிக்கும் வழிகளைக் காட்டுவார். எதிலெல்லாம் முதலீடு செய்யலாம் என்று சொல்வார்.” என்கிறார் அவர்.

ஆனால், குழுவில் உள்ள வெளிநாட்டவர்கள், வெளிமாநிலத்தவரால் மாநிலத்தின் சமூகச் சூழலை புரிந்துகொண்டு ஆலோசனைகளை வழங்க முடியுமா என்ற கேள்வியும் இருக்கிறது. “இந்தக் குழுவைப் பொறுத்தவரை மாநிலத்தின் நிதிநிலையை மேம்படுத்த விரிவான, பரந்த பார்வையிலான வழிகாட்டும் அறிவுரைகளை அளிக்கும். மிக நுணுக்கமான ஆலோசனைகளைத் தர மாட்டார்கள். குறிப்பான அறிவுரைகளை அளிக்க மாநில வளர்ச்சி ஆலோசனைக் குழு இருக்கிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை, 1950களில் பெரும்பாலானவர்கள் ஏழைகளாக இருந்தபோது, வளர்ச்சி வந்தால் ஏழ்மை மாறிவிடும் என்று கருதப்பட்டது. 1991ல் பொருளாதார தாராளமயமாக்கத்திற்குப் பின் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. இருந்தபோதும் வறுமை என்பது ஒழியவில்லை. இந்த நிலையில்தான் 2004க்குப் பிறகு பல விஷயங்களை குடிமக்கள் உரிமையாக கேட்டுப்பெறும் விதத்தில் சட்டமியற்றப்பட்டது. இதன் பின்னணியில் ஷான் த்ரே இருந்தார்.

அவரது ஆலோசனையின் பேரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டநிலையில், அதன் தாக்கம் எப்படியிருக்கிறது என விழுப்பரம் மாவட்டத்தில் வந்து ஆய்வுசெய்தார். ஆகவே அவருக்கு தமிழ்நாட்டைப் பற்றி நன்றாகவே தெரியும்.

அரவிந்த் சுப்பிரமணியத்தைப் பொறுத்தவரை வர்த்தகம், பொருளாதாரக் கொள்கைகள் ஆகியவற்றி வல்லவர். ரகுராம் ராஜனைப் பொறுத்தவரை, சர்வதேச நிதி, பணம் ஆகியவற்றை நிர்வகிப்பதில் திறமை மிகுந்தவர். அவரைப் பொறுத்தவரை General Equlibrium frame workä அவர் தொடர்ந்து வலியுறுத்துவார். அதாவது பொருளாதாரத்தில் எதைச் செய்தால் என்ன நடக்கும் என்பது ரகுராம் ராஜனுக்கு

நன்கு தெரியும். ரகுராம் ராஜனின் அறிவுரையை மீறித்தால் பண மதிப்பிழப்பு நடவடிக்கையை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் விளைவுகள் எல்லோருக்கும் தெரியும். ஆகவே இந்தக் குழுவைப் பொறுத்தவரை, ஆலோசனைகளை அளிப்பதில் பிரச்சனை இருக்காது" என்கிறார் ஜோதி சிவஞானம்.

## தமிழ்நாடு அமைத்துள்ள வல்லுனர் குழு

இந்தியாவில் ஜிஎஸ்டி வரிவிதிப்பு முறை அமல்படுத்தப்பட்ட பிறகு, மாநிலங்கள் பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலையில், இம்மாதிரி குழு மிக அவசியம் என்கிறார் ஜோதி சிவஞானம்.

"மாநிலங்களின் நிதி இறையாண்மை என்பது ஜிஎஸ்டி வரி விதிப்பு முறை வந்த பிறகு அடியோடு போய் விட்டது. ஜிஎஸ்டி அமல்படுத்திய பிறகு ஐந்தாண்டுகளில் 14 சதவீத வளர்ச்சி இருக்கும் என்றார்கள். அதனால்தான் 2022 வரை இழப்பீடு தருவதாக சொன்னார்கள். ஆனால், நினைத்த வேகத்தில் வளர்ச்சி ஏற்படவில்லை.

தவிர, ஜிஎஸ்டி கவுன்சில் மிகுந்த அதிகார தோரணையோடு செயல்படுகிறது.ஜிஎஸ்டி கவுன்சிலை பொறுத்தவரை ஒரு பக்கம் மாநில அரசுகள் மற்றொரு பக்கம் மத்திய அரசு என்றுதான் விவாதம் நடக்குமென நினைத்தார்கள். ஆனால், கவுன்சில் கூட்டங்கள் நடக்கும்போது பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் அரசுகள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு மத்திய அரசின் பக்கம் நிற்கின்றன. இதனால், பா.ஜ.க. என்ன நினைக்கிறதோ அதுதான் கவுன்சிலில் நடக்கிறது.

ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டபோது மாநில அரசு தனது வருவாயில் 44 சதவீதத்தை இதில் கொண்டுவர ஒப்புக்கொண்டது. மத்திய அரசு 35 சதவீதத்தை விட்டுக்கொடுத்திருக்கிறது. ஆனால், பிரிக்கும்போது மத்திய அரசும் மாநில அரசும் வரி வருவாயை பாதிப்பாதியாக பிரித்துக்கொள்ள வேண்டும். இருந்தபோதும் அந்த அமைப்பு ஒரு கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அப்படி நடக்கவில்லை. அரசியல் ரீதியாக கவுன்சில் பிரிந்துகிடக்கிறது.

இப்போதைய சூழலில் மாநிலங்களால் பெட்ரோல் விலையைக் குறைக்க முடியாது. மதுபானங்களின் மீது கடுமையான வரி விதிக்கப்பட்டிருக்கிறது. பத்திரப்பதிவுத் துறையிலும் கடுமையான வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சவால்களுக்கு மத்தியில்தான் புதிய மாநில அரசு பணியாற்ற வேண்டும்.

இந்த நிலையில் இந்தக் குழுவில் இருப்பவர்களின் தொடர்புகள் புதிய முதலீடுகளைக் கொண்டுவர உதவலாம். இம்மாதிரி ஒரு உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டிருப்பதால், பொருளாதாரம், முதலீடு ஆகியவற்றில் மாநில அரசு மிகத் தீவிரத்துடன் பணியாற்றுகிறது என்பதைப் புரிந்துகொண்டு பல நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வரலாம். இதன் மூலம் வளர்ச்சி அதிகரிக்கும். ஆகவே வரி வருவாயும் அதிகரிக்கும். தி.மு.க. முன்வைத்த 7 அம்சத் திட்டத்தில் 2 இலக்க வளர்ச்சியை ஏற்படுத்துவது தங்களது இலக்கு என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இலக்கை அடைய இந்த வளர்ச்சி உதவும்" என்கிறார் பேராசிரியர் ஜோதி சிவஞானம்.

ரகுராம் ராஜன், அரவிந்த் சுப்பிரமணியன், காங்கிரஸ் அரசில் பல ஆலோசனைகளை அளித்த ஜான் த்ரே ஆகியோரைக் கொண்டு குழு அமைத்திருப்பது ஒரு அரசியல் ரீதியான நடவடிக்கையும்கூட என்கிறார்கள் ஜோதி சிவஞானமும் ஆனந்த் சீனிவாசனும்.

"பிரதமர் ஹார்வர்டா ஹார்ட் ஒர்க்கா என்று கேட்டு, ஹார்ட் ஒர்க்கே முக்கியம் என்றார். அதனால் இந்தியாவின் பொருளாதாரம் இந்த நிலையில் இருக்கிறது. ஆனால் மாநில அரசு அப்படிக் கேட்கவில்லை. மேதைகளை மதிக்கிறது. இதற்கு நிச்சயம் பலன் இருக்கும்" என்கிறார் ஆனந்த் சீனிவாசன்.

"நிச்சயம் இது ஒரு அரசியல் நடவடிக்கையும்கூட. மாநில அரசே இம்மாதிரி குழுவை அமைத்து பொருளாதாரத்தை மேம்படுத்த நினைக்கிறதே, மத்திய அரசு செய்யக்கூடாதா என்ற கேள்வியை இந்த நியமனம் எழுப்பும்" என்று சுட்டிக்காட்டுகிறார் ஜோதி சிவஞானம்.

இது போல குழு அமைப்பது, நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுவது என்பது புதிதல்ல. 100 வருடங்களுக்கு முன்பே சென்னைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறைத் தலைவர் பி.ஜே. தாமஸ் இந்திய அரசுக்கே ஆலோசனை சொன்னார். ராஜாஜி காலகட்டத்தில் விற்பனை வரியை அறிமுகப்படுத்தியதே தாமஸ்தான். அதேபோல தி.மு.க. ஆட்சிக் காலத்தில் குகன் ஆலோசகராக இருந்தார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு பி.ஜே. தாமஸ், கே.என். ராஜ், வி.கே.ஆர்.வி. ராவ், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கிய மெகலனாபிஸ், பி.ஆர். பிரம்மானந்தா, சி.என். வக்கீல், சுக்மாய் சக்ரவர்த்தி, மன்மோன் சிங், கௌசிக் பாசு, ரகுராம் ராஜன், அரவிந்த் சுப்ரமணியன், பனகாரியா போன்றவர்கள் இந்திய அரசுக்கு ஆலோசகர்களாக இருந்தார்கள்.

படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

சரித்திரத் தொடர்

# சேரமான் கனவு

14

## 14 துறைமுகத்தில் துட்டர்கள்

**கா**லைச் சூரியன் வெப்பத்தை வேகமாகக் கூட்டியபடி உச்சிக்கு செல்லும் வேளை.

நடுக்கடலில் கரும்பச்சை வண்ணத்தில் நின்றிருந்தது கடற்கொள்ளையர் தலைவன் சிமோவின் கப்பல். அக்கப்பலில் இருந்தவர்கள் பார்வை முழுதும் சற்றுத் தொலைவில் மிதந்துக் கொண்டிருந்த கட்டுமரத்தின் மீதே இருந்தது.

கட்டுமரம் நெருங்கியதும், கப்பலிலிருந்து கயிறு வீசப்பட்டது. விறுவிறுவென கட்டுமரத்திலிருந்தவன் அந்தக் கயிற்றைப் பிடித்தபடி தாவி ஏறி கப்பலுக்குள் வந்து நின்றான்.

"என்ன ஆயிற்று? நீ கொண்டு வந்திருப்பது நல்ல செய்திதானே?" ஆவல் பொங்க வேகமாகக் கேட்டான் சிமோ. ஆனால் அந்த வார்த்தைகளுக்குள் கோபமும் ஒளிந்திருப்பதை வந்தவன் உணர்ந்து கொண்டான்.

எனவே மூச்சு வாங்கியபடியே எச்சரிக்கையுடன் பேசினான். "காரியம் கைநழுவிப் போய்விடவில்லை. அந்த வகையில் நல்ல செய்திதான்!"

"ஆகா! உன்னை நான் நம்பியது வீண்போகவில்லை நூமா! சொல்! தியோதராவைக் கண்டுபிடித்து விட்டாயல்லவா?" சிமோவின் முகத்தில் மகிழ்ச்சி குடிகொண்டது.

"ஆமாம் சிமோ! நம்மிடமிருந்து தப்பித்து கடலில் குதித்தவளைக் கரையில் உயிருடன் கண்டேன்!" அவன் சொல்லி முடித்ததும் துள்ளிக் குதித்தான் சிமோ.

"இது போதும் நூமா! இது போதும்! இனி அவளைக் கப்பலுக்குக் கொண்டு வருவது சிக்கல் அல்ல! அதை நான் பார்த்துக் கொள்கிறேன்!" புன்னகையுடன் கூறியவன், தன் வலுவான கரங்களால் நூமாவின் தோள்களைப் பற்றிக் குலுக்கித் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான்.

"சிமோ, அது நீ நினைப்பது போல் அவ்வளவு எளிதான காரியம் அல்ல!" அந்த வார்த்தைகள் கேட்ட மறுநொடி சிமோவின் விழிகள் குறுகின. அந்த வார்த்தைகள் தன்னை இழிவுப்படுத்துவதாக உணர்ந்தான்.

கப்பல் தலைவன் மிக்கானைப் பார்த்தான் சிமோ. மிக்கானுக்குப் புரிந்தது. சிமோ சினம் கொண்டால் எதிர் நிற்பவன் என்னாவான் என்பது தெரியாது. அதனால் அச்சூழலை மாற்ற சட்டென மிக்கான் குரல் உயர்த்திப் பேசினான்.

"தேவையற்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவது புத்திசாலிகளுக்கு அழகல்ல! நூமா, உன்னை நான் புத்திசாலி என்று நினைக்கிறேன். அந்தத் தகுதியை இழந்து விடாதே! நீ சென்று வந்த தகவலை மட்டும்

கொற்றவன்

கூறு!" மிக்கானின் அந்த வார்த்தைகளில் ஒளிந்திருக்கும் எச்சரிக்கையை உணர்ந்தான் நூமா.

அதேநேரம் மிக்கானின் பேச்சு சிமோவின் கோபத்தையும் சற்றுக் குறைத்தது.

நூமா சற்றே யோசித்தான். நடந்ததைச் சொல்ல வேண்டும்தான், ஆனால் அது சிமோவின் கோபத்தைத் தூண்டி விடுவதாக அமைந்து விடக் கூடாது என்ற எண்ணம் எழுந்தது.

நூமாவை நெருங்கி வந்த மிக்கான் அவன் தோளில் ஆதரவாகக் கைபோட்டு, அருகிலிருந்த மரப்பெட்டியின் மீது அமரச் செய்தான்.

"சொல் நூமா! அங்கு போனதிலிருந்து நடந்ததை விரிவாகச் சொல்" என்றான் மிக்கான்.

நூமா சொல்லத் தொடங்கினான்.



"கடலில் பாய்ந்த தியோதராவையும் தாலியாவையும் தேடி நானும் அவனும் படகில் சென்றபோது, எப்படியும் எங்கள் கண்களில் அப்பெண்கள் தென்பட்டு விடுவார்கள் என்றுதான் நம்பினோம். ஆனால் இரவு நேரமாதலால் அப்பெண்கள் எப்பக்கமாக நீந்திச் சென்றார்கள் என்பது தெரியாமல், நம் கப்பலைச் சுற்றிலும் படகைச் செலுத்தி வந்து நோட்டமிட்டபடியே இருந்தோம். பிறகு கரைநோக்கி படகைச் செலுத்தினோம்.

ஒரு கட்டத்தில் அவர்கள் நீரில் மூழ்கி இறந்திருக்கவும் கூடுமோ என்ற ஐயமும் ஏற்பட்டது. ஆனாலும் கரைக்குச் சென்று அவர்களின் நிலை என்னவென்று தெளிவாகத் தெரிந்துக்கொள்ள முயற்சித்தோம். நள்ளிரவைத் தாண்டி முசிறித் துறைமுகத்திலும், அதனைச் சுற்றியுள்ள கடற்கரையின் ஓரத்திலும் தேடியலைந்தும் அவர்கள் எங்கள் கண்களில் படவில்லை.

விடிந்தபின் விபரம் தெரியக்கூடும் என நினைத்தாலும், எங்கள் தேடலை மட்டும் நிறுத்தவில்லை. பேரியாற்றங்கரையில் மறைவாக ஓரிடத்தில் எங்கள் படகை நிறுத்தி வைத்துவிட்டு, கடற்கரையோரம் ஆளுக்கொரு பக்கம் தேடியலைந்தோம். அப்போது திடீரென ஒரு பெண்ணின் குரல் கேட்டது. குரல் வந்த திசைநோக்கி நடந்தேன். அங்கே ஒரு மணற்குன்று. அருகில் சென்று பார்த்தால், இவன் பலத்த காயத்துடன் கிடக்கிறான். எப்படி இவன் காயம் பட்டான் என அதிர்ச்சியடைந்தேன்.

அந்நேரம் பார்த்து, அங்கே இரண்டு குதிரை வீரர்கள் வந்ததால், அவர்களிடம் பிடிபடாமல் இருக்க மறைவிடம் தேடி ஓடி ஒளிந்துக் கொண்டேன். சிறிது நேரத்துக்கெல்லாம் காவலர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். பிறகு மணற்குன்றின் அருகில் நான் சென்று பார்த்தபோது அங்கே நண்பனைக் காணவில்லை" நூமா தன் பேச்சை சற்றே நிறுத்தினான்.

அக்கப்பலில் இருந்தவர்களின் பார்வை முழுவதும் நூமாவின் மீதே பதிந்திருந்தது. நூமா தொடர்ந்தான்.

"மணற்குன்றின் அருகே கிடந்தவன் எப்படி மாயமாகி இருக்க முடியும் என யோசித்த போதுதான், ஒருவேளை அவன் என்னைத் தேடிப் படகு பக்கம் போயிருக்கக்கூடும் என நினைத்து, ஆற்றங்கரைக்குக் நடக்கத் தொடங்கினேன்.



அது விடியும் வேளை என்பதால், மக்களை சற்றுத் தெளிவாகவே காண முடிந்தது. பேரியாற்றங்கரைக்கு நான் சென்றபோது, எங்கள் படகை ஆற்றின் மறுகரைக்கு ஒருவன் செலுத்துவதைக் கண்டேன். ஆற்றின் நடுவே பயணித்துக் கொண்டிருந்த அப்படகில் பெண்கள் இருவர் கிரேக்க உடையில் இருந்தார்கள்." நூமா சொன்னதுதான் தாமதம்! வேகமாய் அவனை நெருங்கி வந்த சிமோ அவன் கரங்களைப் பற்றிக் கொண்டு முகமலர்ச்சியுடன் கூறினான்.

"சாதித்து விட்டாய் நூமா! சென்ற வேலையைச் சிறப்பாக முடித்து விட்டாய் நீ! சொல் அவர்கள் தியோதராவும் தாலியாவும்தானே!"

"அவர்களாகத்தான் இருக்க வேண்டும். நமது படகு ஆற்றின் மறுகரையில் எங்கே கரையேறுகிறது என்பதையும் கவனித்து விட்டுத்தான் உடனடியாக ஒரு கட்டுமரத்தைத் தேடிப் பிடித்து நம் கப்பலுக்குத் திரும்பி இருக்கிறேன்."

இவ்வாறு நூமா சென்று வந்த நிலையைச் சொல்லி முடித்ததும், சிமோ வேகமாய் மிக்கானை நோக்கித் திரும்பினான்.

"அப்படியானால் நாம் உடனடியாக முசிறிக்குச் செல்கிறோம்! அதைத்தானே சொல்ல விரும்புகிறாய்?" என்றான் மிக்கான்.

"சரியாகச் சொன்னாய் மிக்கான்! ஆனால்... எப்படி...?"

"வணிகர்கள் வேடத்தில் நாம் முசிறி செல்கிறோம்."

"தியோதராவுடன்தான் வருகிறோம்." முகத்தில் புன்னகை படர, சிமோ அந்த வார்த்தைகளைக் கூறினாலும், அதற்குள் உயிரை விலைவைத்தேனும் எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்ற உறுதியும் தொனித்தது.

இந்தப் போராட்டத்தில் சில தலைகள் உருளப்போவது நிச்சயம் என்பதை உணர்ந்த மிக்கான் அமைதியாகக் கடலைப் பார்த்தான்.

கடற்பரப்பில் வெள்ளியை வார்த்தது போல் மினுமினுவென அலைகள் அசைந்தாடின.

அந்திநேரச் சூரியனின் மந்தகாச ஒளியில் முசிறித் துறைமுகம் பொன்மயமாக ஒளிர்ந்தது.

சீனத்துக் கப்பலொன்றிலிருந்து இறக்குமதியான பொருட்கள், படகுகளில் ஏற்றப்பட்டு பேரியாற்றின் வழியே போய்க் கொண்டிருந்தன. மேற்கத்திய பகுதிகளின் கப்பல்களிலிருந்து வந்திறங்கிய கண்ணாடி, ஈயம், செம்பு, பவளம் போன்றவை கடற்கரையோரமாக கடைவிரிக்கப்பட்டிருந்தது. உள்ளூர் வணிகர்கள் அவற்றை ஆர்வமாகப் போட்டிப் போட்டுக் கொண்டு விலைகூறி வாங்கினர். அருகிலேயே மூட்டை மூட்டையாக மிளகை, பொன் கொடுத்து பெற்றனர்.

சேரநாட்டு வணிகர்களின் நேர்மையை மெச்சிப் புகழ்ந்தபடி இருந்தனர் சில சீனத்து வணிகர்கள். சீனத்துப் பட்டாடைகளை வாங்க உள்ளூர் செல்வந்தர்கள் குதிரைகள் பூட்டப்பட்ட வண்டிகளில் வந்திறங்கியிருந்தனர்.

துறைமுகம் மிகப் பரபரப்புடன் இயங்குவதைக் காண்பதே கண்களுக்கு கொள்ளை விருந்தாகும்

என்பதை அறிந்திருந்த உள்ளூர்வாசிகள், அங்கே பார்வையாளர்களாக வந்து சேர்ந்ததில், திருவிழாக் கூட்டத்தைப்போல துறைமுகம் களைகட்டியிருந்தது.

சேரநாட்டு மக்களுடன் இரண்டறக் கலந்து வாழும் பிறநாட்டவர்கள், தங்கள் நாட்டுக்காரர்களைக் கண்டால் இல்லத்துக்கு அழைத்து உபசரித்து மகிழ்ந்தார்கள்.

இந்தப் பன்னாட்டு மக்கள் குழாத்திடையே வணிகர்களின் வேடத்தில் கலந்து ஊடுருவியிருந்தார்கள் மிக்கான், சிமோ மற்றும் அவர்களது கூட்டத்தைச் சார்ந்தவர்கள்.

ஆங்காங்கே கடைகளுக்குச் சென்று தங்கள் நாட்டைச் சார்ந்த இரண்டு யவன அழகிகள் வழிதவறி விட்டதாகவும், அவர்களை யாரேனும் கண்டார்களா என விசாரித்தபடியும் நடந்தார்கள்.

எங்கெங்கு காணினும் சீனம், கிரேக்கம், ரோமாபுரி, அரேபிய வணிகர்கள்... அவர்களுடன் அந்நாட்டு பெண்மணிகளையும் ஆங்காங்கே காணமுடிவதால், சிலர் பொதுவாகக் கூறினார்களே தவிர, குறிப்பிடத்தகுந்த செய்தி ஒன்றும் மிக்கான் குழுவினருக்கு கிடைக்கவில்லை.

ஆயினும் அப்பெண்களை எப்படியேனும் கண்டுபிடிப்போம் என்ற திடமான நம்பிக்கையுடன் அவர்கள் ஒரு முடிவெடுத்தனர்.

மிக்கான் தனது யோசனையைக் கூறினான்.

"நாம் பத்துபேரும் ஆளுக்கொரு பக்கம் முசிறியைச் சல்லடையாக அலசவேண்டும். அவர்கள் இருக்குமிடம் தெரிந்துவிட்டால் உடனடியாக அந்த இடத்தின்மீது பச்சை நிறப் புகை கிளப்பவேண்டும். புகை கிளம்பிவிட்டால் அனைவரும் அதிவிரைவில் அங்கே கூடிவிடவேண்டும். இங்குள்ள மக்களோ காவலர்களோ அறியாவண்ணம் காரியமாற்ற வேண்டும். ஒருவேளை இந்த இரவுக்குள் அவர்கள் கிடைக்காவிட்டால், காலையில் இதே இடத்தில் நாம் மீண்டும் கூடவேண்டும். என்ன சொல்கிறாய் சிமோ?"

"ஆம்! நீ சொல்வதுதான் சரி! இனி நாம் பிரிந்து செல்வோம்! அவர்களை நிச்சயமாகக் கொண்டு வருவோம்! புறப்படுங்கள்!" சிமோ கட்டளையிட்டான்.

முடிவெடுத்தபடி அங்கிருந்து பத்துபேரும் பிரிந்து நடந்தனர்.

அன்றிரவு கிழவர் பெரியானின் பழக்கடைக்கு வருகை புரிந்தான், சேரமான் செங்குட்டுவனது உளவுப்பிரிவின் துணைத்தலைவன் உதயன்.

பழக்கடையில் இருந்த தனது உதவியாட்கள் சிலரை ரகசியமாக சில இடங்களுக்கு அனுப்பி, உதயன் வந்த தகவலைத் தெரிவிக்கச் செய்தார் பெரியான்.

அதன்படி வந்து சேர்ந்த சில வீரர்களிடம் உதயன் பேசினான்.

"வீரர்களே! நேற்று இரவு முசிறித் துறைமுகத்தையொட்டிய மணற்குன்றில் ஒருவன் படுகாயமுற்றுக் கிடந்ததை அறிவீர்கள். அந்த நேரத்தில் யாரோ ஒரு பெண் அங்கு இருந்ததற்கான சான்றாக அவளது காதணியொன்று அங்கே கிடைத்திருக்கிறது. அது ரோமாபுரியைச் சார்ந்த காதணி என்பதால், ஒரு யவனப் பெண்ணுக்கு நம் எல்லையில் ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்திருக்கிறது.

எனவே அதுகுறித்த தேடுதல் பணியில் நீங்கள் ஈடுபட வேண்டும். ஆனால் இப்பணியின் பேரது, முசிறியில் எவ்வித கலவரமோ பரபரப்போ ஏற்பட்டுவிடக் கூடாது. குறிப்பாக வெளிநாட்டு வணிகர்களுக்கு எவ்வித ஐயமும் ஏற்படாமல் நாம் காரியமாற்ற வேண்டும். ஐயத்துக்கிடமாக எது நடந்தாலும் உடனடியாக என் கவனத்துக்குக் கொண்டு வாருங்கள். இப்போது வந்த சுவடே தெரியாமல் விரைந்து களைந்திடுங்கள்"

உதயன் கட்டளையை வணங்கி ஏற்று குதிரை வீரர்கள் நாலாபுறமும் சிதற ஆரம்பித்தார்கள்.

"என்ன பெரியான், உங்களிடம் ஏதேனும் தகவல் இருக்கிறதா இது பற்றி?"

"முசிறியில் யார் மூச்சு விட்டாலும் முதலில் உணர்ந்து கொள்ளும் திறமை உதயனுக்கல்லவா இருக்கிறது! நான் அறிந்த தகவல் உன் காதுக்கு எட்டாமலா இருக்கும்?"

பெரியவர் எதனை மனதில் வைத்துக் கொண்டு அவ்விதம் கூறுகிறார் என்பதை உதயன் ஓரளவுக்கு ஊகித்து விட்டான்.

"உள்குத்து வைத்து பேசுவதாக நினைத்து நீர் எதையாவது உளறி வைக்காதீர்! வில்லவர் வேறெங்கும் போகவில்லை! ஆசானின் மேட்டுக் குடிலில்தான் இருக்கிறார்."

"அப்படியா? அப்பனே நல்ல செய்தி சொன்னாய்! இப்போதுதான் மனதுக்கு நிம்மதி!"

"அதுமட்டுமல்ல, இனிமேல் வில்லவரைப் பற்றிக் கவலை நமக்கு வேண்டாம்!"

"ஏன்? ஏன்?.. ஏன் உதயா அப்படிச் சொல்கிறாய்?"

"அவருக்குத்தான் இப்போது நான்கடுக்கு அரண் பாதுகாப்பு வந்துவிட்டதே!" எனக் கூறி நகைத்தான் உதயன்.

இவன் என்ன புதிர் போடுகிறான்? வில்லவன் இந்நாட்டின் இளவரசன் என்பதே முசிறியில் எண்ணி நான்கைந்து பேருக்குத்தான் தெரியும். அவர்களும் உயிரே போனாலும் அந்த ரகசியத்தை வெளியில் சொல்லப் போவதில்லை! இந்நிலையில் நான்கடுக்குப் பாதுகாப்பு என்பது வில்லவனைக் காட்டிக் கொடுத்து விடுமே!... குழம்பி நின்ற பெரியானைப் பார்த்து புன்னகை மாறாமல் கூறினான் உதயன்.

"அதிகம் குழம்பாதீர்! இருக்கும் நான்கைந்து தலைமயிரும் கொட்டிவிடப் போகிறது. வில்லவரின் அருமைத் தோழரும் அசகாயச் சூரருமான வளவத்திரையன் வந்து விட்டார். அதைத்தான் அப்படிச் சொன்னேன்" என்றவன் பலமாகச் சிரித்தான்.

பெரியானின் முகத்தில் ஏகமாய் பூரிப்பு! "ஆகா!.. இது சிறப்பான செய்திதான்!"

அவர்களது உரையாடலின்போது முசிறியின் கடற்பரப்பில் முழுநிலா மேலேறிக் கொண்டிருந்தது!..

முழுமதிக்கு முதல்நாள் என்பதால் பெருமளவு மஞ்சள் ஒளியைப் பொழிந்தபடி, அன்றைக்கு நடக்கப் போவதன் சாட்சியாக நிற்க, அந்த மஞ்சள் மதி வேகமாக மேலெழும்பத் தொடங்கியது.

(கனவு தொடரும்...)


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!!!
VARSHA
1Kg
Traditional taste that Lingers

# ஆக்கவோ அழிக்கவோ..

ஒத்தத் தன்மையால் விலகியும்
அதே தன்மையால் விடாமலும்
ஒன்றின் இரண்டாய் நிற்கிறோம்ஞ்.
துருவங்கள் நாம்.
எப்போதும் நாம் நம்மை
அறிவதில் லயித்திருக்கிறாம்ஞ்
முடிவிலாதேடல் நாம்.
அனைவருக்கும்
நாம் யார் யாரோ தான்.

சொல்லி விளங்க வைக்கும்,
செய்து நிரூபிக்கும் சங்கடங்கள் இல்லை.
எப்படி பிரிந்திருப்பது என்ற
பிலாக்கணங்கள் இல்லைஞ்
எப்போதும் பிரிந்தே இருக்கிறோம்.
எப்போது சேர்ந்திருப்பது
என்ற பதட்டமில்லை
இருமுனைகளாய் சேர்ந்தே இருக்கிறோம்.

மலரே அறிவதில்லை அன்பே
தன் மணத்தை எடுத்து
செல்லும் காற்றின் திசையை,
நாம்கூட நம் அன்பின் ரூபத்தை
இன்னும் முழுதாய் அறியவில்லைஞ்
பெரும் ப்ரியங்களுக்கு
லௌகீகங்கள் இல்லை அன்பே,
நம் முன்னே
நம் உடலோ மனமோ கூட இல்லை.
பெற்றுக்கொள்ளுதலும் இல்லைஞ்
நம்மை நமக்கு அளித்தல் என்ற
ஒன்று மட்டுமே
நம்மை நாமாக்குகிறது ப்ரியமே.

விதிகள் குறுக்கே நிற்காத அன்பு சாத்தியம்,
பேரன்பு சாத்தியமில்லை,
அன்பு பேரன்பாவதே விதிகளின்
பிழம்பில் சுட்டு எடுக்கப்படுவதால் தானோ!
ஊழோ விதியோ வாழ்வோ
அதற்குப்பெயர்
எதுவாயிருந்தால் என்ன அன்பே,
அது நம் முன் மண்டியிட்டு
நம் அன்பை
யாசகமாய் பெற்று செல்கிறது.

யாசகம் கொடுத்தபின் மிஞ்சும்
வெற்றிடத்தில்
வியாபிக்கிறது பேரன்பு.
வியாபித்த பேரன்பை கடைகிறது காலம்,
திரண்டெழுகிறது அமுதமாகிய ஒன்றுஞ்
அமுதை அறிந்தவர்கள் நாம்ஞ் நம் முன்னே
என்ன செய்யும் இந்த பிரபஞ்ச விதிகள்.
கூடவே நஞ்சை நம்முள் நிறுத்தி
ஒன்றின் இருபாகமானவர்கள் நாம்ஞ்
நம்மை என்ன செய்யும்
இருப்பின் துயரங்கள்.

**கமலதேவி**

# அன்பு

தேங்கும் உள்ளவற்றை தேடும்
சில மனிதர் வாழும் நாடும்
கொண்டு வந்த கொள்ளப் போவதும்
நிலையில் இல், சிலரிடமே உண்டு
என அறியா சிலர், அறிந்தும்
பலர் கொடுக்கத் தயங்கும் விடயம்

விடயம் அறிந்து வாழா மக்களும்
விசமம் ஆக வாழும் மக்களும்
தேவைக்காக காட்டும் சிலரும்
தேவையிலா என அலட்டும் பலரும்
கடையில் தேடித்தேடி அலைவதும்
அடையும்பொழுது விட்டுப் பிரிவதும்

பிரிவு அதனாலே உணர்வர் சிலர்
ஓதி அதனாலே விழுந்தனர் பலர்
ஓரறி முதல் ஐந்தறி வரையுண்டு
அவற்றின் கலந்து பழகிக் கண்டு
அவயத்தின் மாற்றம் பல, மாறாத
ஒன்று அன்பே என்று நின்றனர்

அக்கண் நின்று ஒழுகி பரந்தன
அன்பை எங்கும் கொண்டு வளர்த்தன
இயற்கை மயங்க அன்பு காட்டின
ஐம்பூத படைத்து ஐம்பூதம் பெற்றன
கரைந்து காக்கைக்குச் சோறு இட்டன
வரைந்து எறும்புக்கு பசி போக்கின

கொலையும் ஞமலி குரைத்து கொஞ்சின
திருடும் பூனை நெளிந்து கெஞ்சின
சேயும் கன்றும் பசியா கத்தின
தாயும் பசுவும் பசியாற்றி மகிழ்ந்தன
அன்பெனு பந்தியில் ஊர் அருந்தின
மறமும் அன்பு கருதியே விளைந்தன

இருபாலர் காதலும் ஒருவித அன்பே!
ஈன்றோர் தன் செய்கையும் அன்பே!
பிரிவால் ஆகும் சோகமும் அன்பே!
கனவால் கூடும் இயக்கமும் அன்பே!
கூடல் கருதி போர் அன்பே!
வாகை சூடும் வெற்றியில் அன்பே!

ஊர்கூடி சேர்தல் அன்பே!
மெத்தை மேல் காமம் அன்பே!
தலைவன் தலைவி ஊடல் அன்பே!
ஊடலின் வழி கூடல் அன்பே!
அன்பிலா உயிரும் உடலும் இலவே!
காணும் இடம் எலாம் உறவே!

முரா

## சிகரத்தில் ஏறும் சேதுபதி!

இயக்குநர் சுந்தர்ராஜனின் மகன் தீபக் சுந்தர்ராஜன் இயக்குநராக அறிமுகமாகும் படம், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்.' இதில் விஜய் சேதுபதி நடித்து வருகிறார். இதுதவிர மாமனிதன், கடைசி விவசாயி, இடம் பொருள் ஏவல், மணி ரத்னம் தயாரிப்பில் நெட்பிளிக்ஸில் வெளியாகவுள்ள நவரசா இணையத் தொடரிலும், பாலிவுட்டிலும் அறிமுகமாகிறார் விஜய் சேதுபதி. கதாநாயகியாக கத்ரினா கைப் தேர்வாகியுள்ளார். இது, 90 நிமிடப் படமாக உருவாகவுள்ளது. 30 நாட்களில் படப்பிடிப்பை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மும்பைக்குக் குடியேறினார் ராஷ்மிகா

## ராஷ்மிகாவுக்கு வேலை செய்யுது ராசி!

## இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா!

கர்நாடகத்தைச் சேர்ந்த நடிகை ராஷ்மிகா, ஹிந்திப் படங்களில் தொடர்ந்து கவனம் செலுத்துவதற்காக மும்பைக்குக் குடியேறியுள்ளார். 2016—ல் கிரிக் பார்ட்டி என்கிற கன்னடப் படத்தினால் திரையுலகில் நடிகையாக அறிமுகமானார். கன்னடம் மற்றும் தெலுங்குப் படங்களில் நடித்துக் கவனம் பெற்றுள்ள நடிகை ராஷ்மிகா, சுல்தான் படத்தினால் தமிழில் அறிமுகமாகினார். அப்படத்தில் கார்த்தியின் ஜோடியாக நடித்தார். இந்நிலையில் ஹிந்தியில் அதிகப் படங்களில் நடிக்க விருப்பம் கொண்டுள்ள ராஷ்மிகா, இதற்காக மும்பையில் குடியேறியுள்ளார். இதுகுறித்த தகவலை இன்ஸ்டகிராமில் தெரிவித்துள்ளார்.

‘மாஸ்டர்’ படத்துக்கு அடுத்ததாக சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் நெல்சன் இயக்கத்தில் நடித்து வருகிறார் விஜய். இது அவருடைய 65—வது படம். ‘பீஸ்ட்’ எனப் பெயரிடப்பட்டுள்ள இப்படத்தின் கதாநாயகியாக பிரபல நடிகை பூஜா ஹெக்டே தேர்வாகியுள்ளார். பூஜா ஹெக்டே, 2012—ல் ‘முகமூடி’ படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார். இதன்பிறகு ஏராளமான தெலுங்குப் படங்களிலும் சில ஹிந்திப் படங்களிலும் நடித்துள்ளார். பீஸ்ட் படத்துக்கான நடனப் பயிற்சியை ஆரம்பித்துள்ளதாக இன்ஸ்டகிராமில் தகவல் தெரிவித்துள்ள பூஜா ஹெக்டே, விஜய்யை தொடர்ந்து சூர்யா படத்தில் நடிக்க உள்ளார்.

# தலவலம்

## திருவல்லிக்கேணி

புவனகிரி ஜெயபாலன்

அரங்கனைத் தரிசிக்க திருவரங்கம், வேங்கடவனைத் தரிசிக்க திருமலை திருப்பதி, வரதராஜனைத் தரிசிக்க காஞ்சிபுரம், நரசிம்மரைத் தரிசிக்க அகோபிலம், ஸ்ரீராமனைத் தரிசிக்க அயோத்தி என தனித்தனியாக செல்லவேண்டும். இந்த ஐந்து திருத்தல பெருமாள்களையும் ஒரே தலத்தில் சேவிக்க திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் மட்டுமே!

இக்கோயில் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. 108 திவ்ய தேசங்களில் 60வது. 7 கலசங்கள் கொண்ட 5 நிலை இராஜகோபுரம். இரண்டு பிரகாரங்களைக் கொண்டது.

கிருஷ்ணனுக்கு பல ஆலயங்கள் இருந்தாலும் பார்த்தனுக்கு சாரதி கோலத்தில் சேவை சாதிப்பது இங்கு மட்டுமே! பெருமாள் மீசையுடன் தன் பிரதான ஆயுதமான சுதர்சன சக்கரம் இல்லாமலும் காட்சி அளிப்பது இங்கு மட்டும்தான்! இத்தலத்தில் ஐந்து தனித்தனி சன்னதிகள் உள்ளன. சந்நிதிகளில் தனித்தனியே ஐந்து பெருமாள்.

முதல் சந்நிதி: இங்கு ஸ்ரீ வேங்கட கிருஷ்ணன் ருக்மணியுடன் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். ஆத்ரேய மகரிஷி தன் குருவான வியாச மகரிஷியைச் சந்தித்து, வரப்போகும் கலியுகத்தில் கலியின் கொடுமையிலிருந்து நல்லவர்கள் உய்யும் வகை சொல்லுமாறு வேண்ட, தான் பூஜை செய்து வந்த பார்த்தசாரதியின் விக்ரகத்தை தந்து தென்னாட்டில் துளசி வனம் நிறைந்த விருந்தாரண்யத்தில் விக்கிரகத்தை ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருமாறு கூற, அதன்படி பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்து வரலானார். அந்தப் பகுதியே திருவல்லிக்கேணி விருந்தாரண்யம்.

துண்டீரம் என்ற நாட்டை சுமதி என்பவன் ஆட்சி செய்து வந்தான். துண்டீரம் என்பது துண்டீர மண்டலம் ஆயிற்று என்றும், அதுவே தொண்டைமண்டலம் ஆனது என்கின்றனர். இவ்வரசன் திருவேங்கடமுடையானிடம் பக்தி கொண்டு ஆராதித்து வந்தவனுக்கு, பார்த்தனுக்கு தேரோட்டிய பார்த்தசாரதியின் திவ்ய ஸ்வரூபத்தை தரிசிக்க வேண்டும் என்று வேங்கடவனை ஆத்மார்த்தமாக வேண்ட, விருந்தாரண்யத்திற்கு சென்றால் விருப்பம் நிறைவேறும் என ஆசீர்வதித்தார்.

அதன்படி இத்தலம் வந்து வழிபாடு செய்த சுமதிக்கு வேங்கடநாதன் பார்த்த சாரதியாக வேங்கடகிருஷ்ணன் என்னும் திருநாமத்துடன் ஆனந்த விமானத்தின் கீழ் சேவை சாதிக்கிறான். இப்பெருமானை மற்றவர் 'பற்றவர் வீயக்கோல் கையில் கொண்டு பார்த்தன் தன் தேர் முன் நின்றானை' என்று திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார்.

இரண்டாவது சந்நிதி: இங்கு ஸ்ரீ ரங்கநாதர் புஜங்க சயனத்தில் கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார். ஒருசமயம் திருப்பாற்கடலில் பரந்தாமனுக்கும் திருமகளுக்கும் ப்ரணய கலகம் (ஊடல்) ஏற்பட்டது. அதனால் பரந்தாமனைப் பிரிந்து, விருந்தாரண்யத்தில் தவம் செய்து கொண்டிருந்த பிருகு, அத்திரி, மாரீசி, மார்க்கண்டேயர், சுமதி, சப்தரோமா, ஜாலி முனிவர்கள் எதிரே

இருந்த சந்தன மரத்தின் அடியில் குழந்தையாய் தோன்றினாள்.

தெய்வீகக் குழந்தையைக் கண்ட பிருகு முனிவர் எடுத்துச்சென்று வேதவல்லி எனப் பெயரிட்டு வளர்க்கத் தொடங்கினார். வேதவல்லி திருமண பருவம் வந்ததும், பெருமாள் ஓர் அழகான அரசகுமாரன் வடிவில் வேதவல்லி முன் நிற்க, அவன் மீது மையல் கொண்டு தன் விருப்பத்தைப் பிருகு முனிவரிடம் தெரிவித்தாள்.

அப்போது அங்கு வந்த அவனைப் பார்த்ததும் வந்திருப்பது பரமனே என்று தெரிந்து வேதவல்லியை மணந்து கொள்ள வேண்டினார். அதன்படி மாசி மாத சுக்லபட்ச துவாதசி அன்று திருமணம் செய்து கொண்டார்.

பிருகு முனிவர் வேண்டுகோள்படி பரமன் இத்தலத்திலேயே பிரணவ விமானத்தின் கீழ் பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருக்கோலத்தில் அரங்கநாதனாக வேதவல்லி தாயாருடன் நித்யவாசம் கொண்டார். இப்பெருமாள் மனநாதன் (மனநாதன் என்றால் தெலுங்கில் என் நாயகன் என்று பொருள்) என்று அழைக்கப்படுவதாக ஐதீகம்!

இதைத் திருமழிசை ஆழ்வார் நான்முகன் திருவந்தாதியில்

'தாளால் உலகம் அளந்த அசைவே கொல்?
வாளா கிடந்தருளும் வாய்திறவாய்
மாமயிலை கேணியின் ஐந்தலை வாய்' என மங்களாசாசனம் செய்துள்ளார்.

மூன்றாவது சந்நிதி: இதில் ஸ்ரீராமர், சீதா, லட்சுமணன், பரதன், சத்ருக்னன், அனுமான் ஆகியோருடன் நின்ற கோலத்தில் தெற்கு நோக்கி காட்சி தருகிறார்.

பாண்டிய நாடு பாண்டரம் மலைச்சரிவில், சசபதர் என்ற முனிவர் நாராயணனைக் குறித்து தவத்தில் ஈடுபட்டு வந்தார். இந்திர பதவியைப் பெறுவதற்காக தவம் செய்கிறார் என நினைத்த இந்திரன் ஹேலை என்ற தேவ கன்னி.யை அனுப்பி தவத்தைக் கலைக்கச் சொன்னார் அவள் இன்னிசையில் மயங்கி தவம் கலைந்து அவளுடன் இல்லறத்தில் ஈடுபட, ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பசியால் அழும் போதெல்லாம் அதன் வாயில் மரத்திலிருந்த தேன்துளிகள் கொட்டியதால் குழந்தைக்கு மதுமாது எனப் பெயரிட்டனர்.

வளர்ந்து இளம் வயதிலேயே சகல ஞானங்களும் கைவரப்பெற்றவன், எப்பொழுதும் எம்பெருமான் சிந்தனையில் காலம் கழித்தான். ஒரு சமயம் கார்க்கியர் என்ற மகரிஷி இவனது குடிலுக்கு வந்து, திரேதாயுகத்தில் மகாவிஷ்ணு ராம அவதாரம்

செய்து இப்பூவுலகில் அறத்தை நிலை நிறுத்த அவர் பட்ட கஷ்டங்களை எல்லாம் விவரித்தார். மேலும் ராமனை தரிசனம் செய்யும் பேறு பெற்றவர்கள் மோட்சம் அடைந்தனர் என்றார்.

இதைக் கேள்விப்பட்ட மதுமான் தானும் மகாவிஷ்ணுவை ராம அவதார கோலத்தில் சீதாபிராட்டி, தம்பிகள் புடைசூழ சேவை சாதிக்க வேண்டும், அதைப் பார்க்க வேண்டும் என்ற ஏக்கத்துடன் படுத்துறங்க, அவன் கனவில் பரமன் தோன்றி 'துளசி வனம் சென்று ராமனைக் குறித்து தவம் செய்தால் ஆசை நிறைவேறும்' என்று ஆசி கூறினார். அதன்படி விருந்தாரண்யம் சென்று விஷ்ணு குறித்து தவம் இருக்க, திரேதாயுகத்தில் தான் அவதாரம் செய்த ராம அவதார கோலத்தில் சீதாபிராட்டி, தம்பிகள் புடைசூழ காட்சியளித்து அருள் புரிந்தார். அப்போது மதுமான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க விருந்தாரண்யத்திலேயே சேஷ விமானத்தின் கீழ் ராம அவதாரத்தில் தங்கி விட்டதாக ஐதீகம்!

திருமங்கையாழ்வார் திருவாய்மொழியில் 'பரதனும் தம்பி சத்துருக்கன் இலக்குவனோடு மைதிலியும் இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் திருவல்லிக்கேணி கண்டேன்; என்று மங்களாசாசனம் செய்துள்ளார்.

நான்காவது சந்நிதி: இங்கு ஸ்ரீ வரதராஜ பெருமாள் கருடன் மீது அமர்ந்த கோலத்தில் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார். கஜேந்திரன் என்ற யானை ஒருசமயம் முதலையால் பிடிக்கப்பட்ட போது 'ஆதிமூலமே' என யானை குரல் கொடுக்க, பகவான் கருடன் மீதமர்ந்து வந்து, முதலையைத் தன் சக்ராயுதத்தால் கொன்றார்.

கஜேந்திரனை காப்பாற்றுவதற்காக எடுத்த திருக்கோலம் கஜேந்திர வரதர். விருந்தாரண்யத்தில் தவம் செய்த சப்தரோவுக்கு காண வேண்டும் என்று தவம் செய்ததால், கஜேந்திர கோலத்தை வரதர் காண்பிக்க, இந்த திருக்கோலத்திலேயே இத்தலத்தில் இருக்க வேண்டுமென வேண்ட இங்கு புஷ்பக விமானத்தின் கீழ் சேவை சாதித்து வருகிறார். திருமங்கை ஆழ்வார் திருவாய்மொழியில் 'மீனமர் பொய்கை நான்மலர் கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்த... திருவல்லிக்கேணி கண்டேனே!' என மங்களாசாசனம் செய்துள்ளார்.

ஐந்தாவது சந்நிதி: தெள்ளிய சிங்கர் என்னும் நரசிம்மர் வீற்றிருக்கும் கோலத்தில் மேற்கு நோக்கி காட்சி தருகிறார். விருந்தாரண்யத்தில் தவம் செய்து வந்த அத்திரி மகரிஷிக்கு மகாவிஷ்ணு தரிசனம் காட்டப்போவதாக வசிஷ்ட முனிவர் மூலம் தெரிந்துகொண்ட கபில மகரிஷியின் பெயரன் விகட முனிவர், அத்திரி மகிரிஷி உடன் சேர்ந்து பல வருட காலம் தவம் செய்யலானார்.

ஒருநாள் திடீரென்று வானில் தேவகானம் இசைக்கப்பட, தேவமாந்தர்கள் தோன்ற, விண்ணிலிருந்து நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட பொன் விமானம் வெளிப்பட்டது. அதன் இருபுறமும் சேனை முதலியாரும் கருடாழ்வாரும். விமானத்தில் ஆதிசேஷனும் தேவர்களும் பெருமாளின் புகழ் பாடி வர, விமானத்தின் நடுவே வீற்றிருக்கும் கோலத்தில் தெள்ளிய சிங்கர் என்னும் நரசிம்மர். நேரில் கண்ட ரிஷிகள் இருவரும் பெருமானின் திருவடிகளைத் துதித்து மோட்சம் அளிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க தெள்ளிய சிங்கர் அவ்வாறு செய்வதாக அருளினார்.

பிரம்ம கல்பம் முடியும்வரை திருவல்லிக்கேணியில் தங்கியிருந்து தன்னை நாடி வரும் அடியார்களின் குறைகளைத் தீர்த்து வைப்பதாகவும் வாக்களித்தார். அதன்படி தெய்வீக விமானத்தின் கீழ் இருந்து சேவை சாதிக்கிறார். திருமங்கையாழ்வார் 'பள்ளியில் ஓதி வந்த சிறுவன் வாயில் ஓராயிர நாமம்... தெள்ளிய சிங்கமாகிய தேவைத் திருவல்லிக்கேணி கண்டேனே' என மங்களாசாசனம் செய்துள்ளார்.

சுமதி என்ற அரசன் விருப்பப்படி கிருஷ்ணன் இத்தலத்தில், பாரதப் போரில் பார்த்தனுக்கு தேரோட்டிய திருக்கோலத்துடன் பார்த்தசாரதியாக இருக்கிறார். கிருஷ்ணன் குடும்பத்தைச் சார்ந்த அனைவரும் ஒரே கருவறையில் பகவான் தன் உறவினர்களுடன் காட்சி அளிக்கிறார். இதைப் 'பஞ்சவீர வழிபாட்டு மரபு' என்பர். திருத்தங்கல், நாச்சியார்கோயில், தேரெழுந்தூர் ஆகிய இடங்களில் இதேபோல் உள்ளது.

கருவறையில் வேங்கடகிருஷ்ணன் இரு திருக்கரங்களுடன் வலப்புற கையில் பாஞ்ச சன்யம் சங்கை ஏந்தியும், இடது கையில் கோல் ஏந்தியும் கம்பீரமான தோற்றத்தில் காணப்படுகிறார்.

பெருமானுக்கு வலப்புறம் ருக்மணி. சிசுபாலனை மணக்க இருந்த அவளை அவள் விருப்பப்படி சகோதரர் பலராமன், சாத்யகி துணையுடன் தேரில் அழைத்து வரச்செய்து மணமுடித்தவன் கண்ணன். அதனால் ருக்மணிக்கு முக்கியத்துவம். இடதுபுறம் தம்பி சாத்யகி.

கம்சனின் சகோதரி தேவகி. இவளது சுயம்வரத்தில் வசுதேவருக்காக அவரது சகோதரன் சினி என்பவன் சுயம்வரத்திற்கு வந்த அனைத்து அரசகுமாரர்களையும் வென்று வசுதேவருக்கு மணமுடித்து வைத்தான். சினியின் மகன் சத்யகன். சத்யகனின் மகன்தான் சாத்யகி. கண்ணனுக்கு தம்பி முறை. சாத்யகி தன் வலைக்கரத்தில் கட்கம் என்ற குறுவாளை ஏந்தியும், இடது கரத்தில் வரத முத்திரையுடனும் சேவை சாதிக்கிறான். ருக்மிணி பிராட்டியின் வலப்புறம் கிருஷ்ணனின் தமையனான பலராமன். வசுதேவரின் மற்றொரு மனைவியான ரோகிணிக்கு பிறந்தவன். கண்ணனுக்கு மூத்தவன். வலது கரத்தில் கலப்பையும் இடது கரத்தில் வரத முத்திரையுடன். அடுத்து மகன் பிரத்யும்னன், அதற்கு அடுத்து பேரன் அநிருத்தன்.

ஒரு சமயம் சிவன் தியானத்தில் இருக்கும்போது மன்மதன் மலரம்புகள் எய்து சிவனின் தியானத்தைக் கலைக்க முற்படுகிறான். கண்திறந்து பார்த்து மன்மதனை தன் தீட்சண்யப் பார்வையால் எரித்து விடுகிறார். இந்த மன்மதன்தான் கிருஷ்ணன் ருக்மணிக்கு மகனாக, பேரழகு வாய்ந்த பிரத்யும்னன். சம்பந்தனின் அரண்மனையில் வசித்து வந்த ரதி தேவியின் அம்சமான மாயாவதி என்பவளை திருமணம் செய்து கொள்கிறான். இவர்களுக்குப் பிறந்தவன் அநிருத்தன். கிருஷ்ணனின் பெயரன்.

மூலவரின் வலது மார்பில் பொன்வண்ணப் பிரபையுடன் திருமகள். அவர் இடுப்பின் மேல்புறம் வாள் ஒன்று தொங்குகிறது. சாதாரண மக்களிடம் ஏற்படக்கூடிய அஞ்ஞானம் என்னும் இருளை ஞானம் என்னும் வாளால் வெட்டி அகற்றுவதற்காகவே இத்தலத்தில் தன் இடுப்பில் வாளுடன் சேவை சாதிக்கிறார்.

திருமழிசை ஆழ்வாரால் முதன்முதலில் மங்களாசாசனம் செய்யப்பட்டது. ஸ்ரீ மனநாதர் சந்நிதியே கலத்தால் முற்பட்டது என்றும்,

அதன்பின் பார்த்தசாரதி, ராமர், கஜேந்திரவரதர், தெள்ளிய சிங்கர் சந்நிதிகள் ஏற்பட்டது என்று தலவரலாறு கூறுகிறது.

இங்குள்ள தீர்த்தத்துக்கு 'கைரவணீ' என்று பெயர். இந்த வடமொழி சொல்லுக்கு அல்லிமலர் என்று பொருள். புராண காலத்தில் இங்கு அல்லி மலர்கள் பூத்து இருந்த காரணத்தால் அல்லிக்கேணி என்றாகி, திரு அடைமொழி சேர்ந்து திருவல்லிக்கேணி என்றானது. கேணி என்பதற்கு குளம் என்றும் பொருளுண்டு.

கங்கையை விட புனிதமாகக் கருதப்படும் இத்தீர்த்தத்தினுள் வடகிழக்கில் ஐராவதத் தீர்த்தம், தெற்கில் சோம தீர்த்தம், தென்மேற்கில் மீன தீர்த்தம், வடமேற்கில் அக்னி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம் என ஐந்து தீர்த்தங்களை உள்ளடக்கியது. இத்தீர்த்தத்தில் நீராடினால் பிரம்மஹத்தி தோஷம் நீங்கும். கார்த்திகை மாத கிருஷ்ணபட்ச அஷ்டமி திதியில் நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தால் சகல நன்மைகளும் உண்டாகும் என்றும் நம்பப்படுகிறது.

கைரவணீ தீர்த்தக்குளம் 30 ஆண்டுகளுக்கு முன் சாக்கடை கழிவுநீர் கலந்து மிகவும் மோசமாகி, கால் வைக்க முடியாத அளவு ஏற்பட்டது. இதைக் கேள்விப்பட்ட தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் தன் ஆட்சிக் காலத்தில் எடுத்த முயற்சியின் காரணமாக சீரமைக்கப்பட்டு, ஆழ்துளை கிணறுகள் மூலம் நிலத்தடி நீர் உயர்ந்தது இது இன்றும் நல்ல நிலையில் இருப்பதற்கு எம்.ஜி.ஆரே காரணம்!

கன்வ முனிவரின் குமாரர் முத்கலர் என்ற மகரிஷி ஒரு சமயம் கைரவணீ' புஷ்கரணி அருகில் அமர்ந்து கோகிலர், கௌதமர், கதகர், விமனவிது போன்ற முனிவர்கள் தவம் செய்து வந்த போது,

குளத்திலுள்ள மீன்கள் மகிழ்ச்சியாய் துள்ளி விளையாடின. ஒரு மீன் முத்கலர் மீது விழ, தவம் கலைந்து கண் விழித்துப் பார்த்து அந்த மீன்கள் கடலில் சென்று விழுமாறு பணித்தார் என்றும், அன்று முதல் இக்குளத்தில் மீன்கள் எதுவும் வாழ்வதில்லை!

## இவ்வாலயத்தின் தலவிருட்சம் மகிழமரம்!

மச்ச, கூர்ம, அவதார சிற்பங்களையும், பரசு ராமர், பலராமர், நரசிம்மர், வராகர், வாமனர் சிற்பங்களை ஆளவந்தார் மண்டபம், முப்பத்தாறுக்கால் மண்டபம், தெள்ளிய சிங்கர் மண்டபத் தூண்களில் சிற்ப வடிவில் காணலாம்! கிருஷ்ணர், கல்கி அவதாரம் கோலத்தை திருவாய்மொழி மண்டபத்திலும், ராமாவதார கோலத்தை தனித்தும், சீதை இலக்குவன் ஆகியோருடன் சேர்ந்து பல இடங்களில் காணலாம்.

பார்த்தசாரதி உற்சவர் உலோகக் கலவையால் செய்யப்பட்ட திருமேனி. திருமஞ்சனம் முடிந்ததும் ஒரு பொன்னிறத்திலும் சிறிது நேரம் கழித்து செப்பு போன்ற கருமஞ்சள் நிறத்திலும், இன்னும் சற்று நேரம் சென்றதும் நீலம் கலந்த கருமை நிறத்துக்கு மாறிவிடுகிறது. பெருமாளின் நிறம் மாறக் காரணம் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்கின்றனர் உலோகவியல் நிபுணர்கள்.

பிரம்ம கல்பம் முடியும்வரை பார்த்தசாரதி இத்தலத்தில் குடிகொண்டு தன்னை நாடி வரும் பக்தர்களின் மனக்குறையைத் தீர்த்து வைப்பார் என்று புராணங்கள் கூறுகின்றன. இக்கோவிலில் உள்ள மற்ற பெருமாளை சேவித்த பின்னே பார்த்தசாரதியை சேவிக்க வேண்டும்.

'ஞான வடிவானவன் பார்த்தசாரதி, அஞ்ஞான மூர்த்திக்கே என் தினசரி நமஸ்காரங்கள் என்றும், பார்த்தனுக்கு சாரதியாக இருந்து கீத உபதேசத்தை நினைவூட்டும் என்றும் பாரதியார் போற்றுகிறார். கணிதமேதை சீனிவாச ராமானுஜம் வந்து வழிபட்டுள்ளார். ஸ்ரீரங்கத்தில் ரங்கநாயகி தாயார் போலவே இங்குள்ள வேதவல்லி தாயார் உற்சவங்கள் அனைத்தும் ஆலயத்தில் உள்ளே நடைபெறும். தாயாரின் உற்சவ மூர்த்தியும் வெளியில் உலா செல்வதில்லை! ஸ்ரீமனநாதருக்குப் படைக்கப்படும் நிவேதனம் தாயாருக்கும் அளிக்கப்படுகிறது.

பெரும்பாலான நாட்கள் இங்கு பிரசாதம் சர்க்கரை பொங்கல். திருப்பதி லட்டு என்பது போல் இங்கு சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, தயிர்சாதம், மற்றும் வடையும் பிரசாதங்கள்.

## கல்வெட்டுகள்

இத்தலத்தில் கி.பி மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றும், 9 12— 13 —ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது 42, 13— 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது 17, 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது 18, 18—19 ஆம் நூற்றாண்டை சேர்ந்தது 13 என மொத்தம் 97 கல்வெட்டுகள்.

ஸ்ரீரங்கம் ஆலயத்திற்கு அடுத்தபடி அதிகமான கல்வெட்டுகள் கொண்ட வைணவத் தலம் இதுதான்! சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தைப் பற்றி அமெரிக்க மக்களிடம் சென்று உரையாற்றுவதற்கு முன் இங்கு வந்து வழிபட்டுச் சென்றார். 1893 இல் சென்னையில் வசித்து வந்த தனது நண்பரான அழகியசிங்கர் என்பவருக்கு பார்த்தசாரதி பெருமாளை பற்றி ஒரு கடிதம் எழுதியுள்ளார். கடிதத்தையும் அதன் தமிழாக்கத்தையும் தெள்ளிய சிங்கர் சந்நிதிக்கு முன் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது.

## வழிபாடும் விழாக்களும்

கோயில்களில் நித்தியம், நைமித்தியம், காமியம் என மூன்று வகையான வழிபாடுகள் நடக்கும். தினமும் நடைபெறும் நித்திய பூஜைகளை நித்திய வழிபாடு என்றும், மாதப்பிறப்பு, அமாவாசை, பவுர்ணமி, ஏகாதசி நாட்களில் நடைபெறும். புத்தகங்களுக்கு நைமித்திகம் என்றும் தனிப்பட்டவர்கள் காக நடத்தப்படும் பூஜைக்கு காமிய பூஜை என்றும் பெயர். இங்கு உஷத் காலம், காலசந்தி, உச்சிக்காலம், சந்தியாகாலம், இராக்காலம், அர்த்த ஜாமம் என ஆறு கால பூஜைகள் நடைபெறுகிறது.

சித்திரை, 10 நாள் பிரம்மோற்ஸவம். இந்த நாட்களில் காலை மாலை இரு வேளைகளிலும் பெருமாள் வெவ்வேறு வாகனத்தில் எழுந்தருள்வார். இந்த மாதத்தில் ராமானுஜரின் திரு அவதார உற்சவம் நடைபெறும்.வைகாசி 7 நாட்களுக்கு பார்த்தசாரதிக்கு வசந்த உற்சவம். ஏழாவது நாள் சுக்ல பட்ச தசமியில் முடிவடையும். இத்தலத்தில் உறையும் ஸ்ரீ மரகதவல்லி தாயாருக்கும் வசந்த உற்சவம்.

ஆடியில், ஆண்டாள் பூர நட்சத்திரத்தில் பிறந்ததால் திருவிழா 10 நாள் நடக்கும். ஆண்டாள் பார்த்தசாரதிக்கு திருமஞ்சனமும் திருவிழாவும் நடைபெறும். ஆவணி அவிட்டத்தை ஒட்டி தசமி தொடங்கி பிரதமையில் நிறைவு வருமாறு கொண்டாடப்படுகிறது. அன்று பெருமாளின் பழைய பூணூல் களைந்து புதிதாக அணிவிக்கப்படும். இந்த மாதத்திலேயே கோகுலாஷ்டமி என்னும் கிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெறும்.ஐப்பசி தீபாவளியன்று வேங்கட கிருஷ்ணருக்கு சிறப்பு திருமஞ்சனமும் அன்று மாலை உற்சவர் பெரிய வீதியில் உலா வருவார். துவாபர யுகத்தில் வாழ்ந்து வந்த ஆயர்கள் ஒவ்வொரும் ஒவ்வொரு வருடமும் இந்திரனுக்கு விழா எடுத்து கோவர்த்தன மலைக்கு மிகப்பெரிய அளவில் அன்னத்தை படைப்பது வழக்கம்! இந்நாளில் மூலவரான வேங்கட கிருஷ்ணனுக்கு முத்தங்கி சேவை நடைபெறும்.

கார்த்திகை பௌர்ணமி பூஜை முடிந்து அனைத்து மூலவர்களுக்கும் தைலக்காப்பு. அதற்கு மறுநாள் பகல் பத்து உற்சவம் ஆரம்பம் ஆகும். மார்கழி இருபத்தொன்றாவது நாள் இயற்பா சாற்றுமுறை நடைபெறும் இராப்பத்து உற்சவத்தின் போது மூலவருக்கு கபாய் என்னும் குளிர்கால அங்கி சாத்துவது வழக்கம்.

மார்கழி மாதக் கடைசி 9 நாட்களில் ஆண்டாளுக்கு நீராட்டு விழா நடக்கும் இறுதிநாள் போகிப் பண்டிகையன்று காந்தர்வ முறைப்படி பெருமாள் திருமணம் செய்து கொள்வதாக ஐதீகம். அதன்படி மாலை மற்றும் மாங்கல்ய தாரணம் நடைபெறும்.

தை பொங்கல் அன்று பார்த்தசாரதிக்கு சிறப்பு திருமஞ்சனம் நடைபெறும்.

மாசி மாத அமாவாசையில் தொடங்கி ஏழு நாட்கள் தெப்பத் திருவிழா. முதல் மூன்று நாள் பார்த்தசாரதியும் அடுத்த நான்கு நாட்கள் நரசிம்மர், ராமர், கஜேந்திரவரதர், மனநாதர் பங்கேற்பார்கள். ஒரே ஆலயத்தில் ஐந்து பெருமாள்களும் உற்சவத்தில் பங்கு கொள்வது இங்கு மட்டும்தான் காண முடியும்.

1959—ஆம் ஆண்டு தமிழக அரசு இந்து அறநிலையத்துறை நிர்வாகப் பொறுப்பை ஏற்று செயல்பட்டு வருகிறது. அனைத்து நாட்களிலும் காலை 6 மணி முதல் 12.30 மணி வரையிலும், பிற்பகல் 4.30 மணி முதல் 9 மணி வரையிலும் திறந்திருக்கும்.

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் திருவல்லிக்கேணி பகுதியில் கோயில் அமைந்துள்ளது. நகரப் பேருந்துகள், புறநகர் ரயில் மூலம் இப்புகழ் பெற்ற கோயிலை அடையலாம்.

(தொடரும் வலம்.....)

# புத்தக விமர்சனம்

## திரை உலகில் செல்வி ஜெயலலிதா

**ஆசிரியர்: கவிஞர் பொன்.செல்லமுத்து**




**வெளியீடு:**

**வைகுந்த் பதிப்பகம்,**

**நாகர்கோவில்–2**

**விலை : 950**

கிராம நிர்வாக அலுவலராகப் பணியாற்றி பணி ஓய்வு பெற்ற ஒருவர், தமிழ் சினிமா என்கிற பெருங்கடலில் முத்துக் குளித்துத் தேடித் தந்திருக்கும் தகவல் களஞ்சியம்தான் "திரை உலகில் செல்வி ஜெயலலிதா'

ஜெயலலிதா நடித்த ஒவ்வொரு திரைப்படம் குறித்தும் கதையுடன் கூடிய குறிப்பு, நடித்தவர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், அதில் இடம் பெற்ற பாடல்கள், பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர் என எல்லா விவரங்களும் அடங்கிய தொகுப்பு. ஜெயலலிதாவின் தாயார் சந்தியா, சித்தி வித்யாவதி ஆகியோர் நடித்த படங்கள் பற்றிய குறிப்புகளும் இதில் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஜெயலலிதா என்கிற நடிகை தொடர்பான எல்லா திரையுலகத் தகவல்களையும் ஒரே இடத்தில் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் இப்புத்தகத்தைப் புரட்டினால் போதும். ஜெயலலிதா தொடர்புடைய புகைப்படங்கள்தாம் இந்தத் தொகுப்பின் சிறப்பம்சம்.

# சிங்கப்பெண்

கோ. தினேஷ்

"பொட்ட கழுதைக்கு இட்லிய திங்க முடியாதாமா?" என்கிற குரலைக் கேட்ட மலர்விழி, அடுப்பில் வைத்த தோசைக்கல்லை கீழே இறக்கி வைத்தாள்.

"என்ன நெஞ்சு தைரியம் இருந்தா போலீஸ்காரன வெச்சு என் வீட்டுக்குள்ள நுழைஞ்சுருப்பா இவ" என மீண்டும் தனது மாமியாரின் கடிந்த குரல் கேட்க, மலர்விழியின் விழிகளில் கண்ணீர் தேங்கத் தொடங்கியது. சிறு வயதிலேயே வீட்டைவிட்டு ஓடிச்சென்று காதல் திருமணம் செய்துகொண்டவர்கள் மலர்விழியும் அவளது கணவனும். அதனால் இருதரப்பு வீட்டாரின் வெறுப்பையும் சம்பாதித்து வைத்திருந்தார்கள்.

சில மாதங்களில் மலர்விழி வீட்டாரது வெறுப்பு சற்றுத் தணிந்தது. கோயம்புத்தூரில் வசித்து வந்த இருவரையும் மலர்விழியின் தாயார் சென்று சமாதானம் செய்து சென்னைக்கு அழைத்து வந்தார். சென்னை திரும்பிய பிறகு மலர்விழியும் அவளது கணவனும் தனிக்குடித்தனம் நடத்தி வந்தார்கள்.

தன் மகன் ஊர் திரும்பியதை அறிந்ததும் பிள்ளை மீதுள்ள பாசம் தலைதூக்க மலர்விழியின் கணவனை மட்டும் ஏற்றுக்கொண்டார்கள் அவன் வீட்டார். தன் கணவனை மாத்திரம் "ஏற்றுக் கொள்வேன்" என அவர்கள் கூறியது மலர்விழிக்குச் சற்று வருத்தத்தையே தந்தது. காதல் திருமணம் முடிந்து ஆறு ஏழு மாதங்கள் கழிந்துவிட்டன. வயிற்றில் குழந்தையும் உதைக்க தொடங்கிவிட்டது.

சென்னை திரும்பியதும் கணவனுக்கு பழைய வேலை பறிபோனது. வருமானம் இல்லை. தாய் வீட்டில் மலர்விழியைச் சேர்த்து ஏழு பேர் உள்ளார்கள். தந்தை ஒருவரின் வருமானத்தில்தான் மலர்விழியின் வீட்டார் வயிற்றைக் கழுவிக் கொண்டு இருக்கிறார்கள். வாடகை கொடுக்காததால் வாடகைக்கு வசித்து வந்த வீட்டையும் காலி செய்யுமாறு வீட்டின் உரிமையாளர் கெடு வைத்துவிட்டார்.

இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் அவள் எங்கு செல்வதெனத் தெரியாது விழித்தாள். வேறு வழியே இல்லை என மலர்விழியைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான் அவளது கணவன். அவர்களது குடும்பம் சற்று பெரியது. சொந்த வீடாக இருப்பினும் வீட்டில் தங்குவதற்கு இடமும் இருப்பினும், மலர்விழியை ஏற்றுக்கொள்ள அவர்கள் மனதில் இடமில்லை. பலமுறை மலர்விழியின் கணவன் தன் வீட்டாரிடம் முறையிட்டு பார்த்தான்.

"வந்தா நீ மட்டும் வா! அவளை எல்லாம் வீட்டுக்குள்ள சேர்த்துக்க முடியாது." என அவனது பெற்றோர் கறாராகக் கூறி விட்டார்கள். 'இது என்ன நியாயம் தங்களது மகன் என்னை காதலித்து திருமணம் செய்துள்ளார். அவரது குழந்தை என் வயிற்றில் வளர்கிறது. ஏன் என்னை ஏற்றுக்கொள்ள

மாட்டேன் என்கிறீர்கள்?' என மலர்விழி பலமுறை வாதிட்டும் திட்டவட்டமாக மறுத்துவிட்டார்கள்.

மலர்விழியும் அவளது கணவனும் பலமுறை அங்கு சென்று முறையிட்டு பார்த்தார்கள். அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இதை அறிந்த மலர்விழியின் வீட்டார் காவல்துறையிடம் தெரிவிக்க, காவல் துறையினரே அங்கு வந்து மலர்விழியின் கணவன் வீட்டாரை சமாதானப்படுத்தி அவளை அங்கு சேர்த்து விட்டு சென்றார்கள்.

அன்று காலையில் கணவன் வேலை தேடிச் சென்றபோது "சீக்கிரமா வந்துருங்க" எனக்கூறி வழியனுப்பி வைத்தவள். நீராடிவிட்டு பசியாற சமையலறைக்குள் நுழைந்தாள். அங்கு இட்லி குண்டாவில் இட்லிகள் பல கிடந்தன. மலர்விழிக்கு இட்லி மீது அவ்வளவு விருப்பம் இல்லை. அதனால் தோசை சுட்டு சாப்பிடலாம் என அடுப்பைப் பற்றவைத்து தோசைக்கல்லை அதன் மேல் வைத்தாள்.

வெளியே பாத்திரம் துலக்கிக் கொண்டு இருந்த அவளது மாமியார் கடிந்து கொண்டதால் தோசைக் கல்லை கீழே வைத்துவிட்டு அடுப்பை அணைத்தாள்.

"ஏண்டி இட்லிதான் இருக்குல்ல, அப்புறம் என்ன உனக்கு மட்டும் ஸ்பெஷலா தோசை? என் புள்ளைங்க எல்லாம் கூட நான் செஞ்சு வெச்சத தின்னுபுட்டு அமைதியாக கிளம்புகிறாங்க உனக்கு என்ன? எல்லாம் எங்க தலையெழுத்து! உன்னைச் சொல்லிக் குத்தமில்ல! என் புள்ளையை சொல்லணும். ஊர்ல இல்லாத பொண்ணா? உன்னைப்போய் காதலிச்சு கட்டிக்கிட்டானே! என்ன செஞ்சி என் புள்ளைய மயக்கினயோ" என மீண்டும் பாத்திரத்தின் மேல் நாரைக் கொண்டு தேய்த்தபடி திட்டித் தீர்த்தார் மலர்விழியின் மாமியார்.

தட்டில் இட்லியுடன் வாசலைக் கடந்து வெளிவந்த மலர்விழி திண்ணையில் உட்கார்ந்து உணவருந்த தொடங்கினாள். "நீ டைமுக்கு நல்லா சாப்பிட்டா தான் உன் குழந்தை நல்லா இருக்கும்மா" என்று இறுதியாக டாக்டரிடம் சென்றபோது அவர் கூறியதை நினைவு கூர்ந்தவள் சாப்பிட்டுக்கொண்டே வயிற்றை பார்த்தாள். நன்கு

வீங்கிய பெரும் வயிறாக இருந்தது.

"அம்மா உனக்காக தாண்டா செல்லம் சாப்பிடுறேன்" என மனதிற்குள் கூறிக் கொண்டவள், தன் குழந்தையை எண்ணி மகிழ்ந்தாள். சாப்பிட்டு முடித்த மலர்விழி சற்று பின் சாய்ந்து எதிரே வேடிக்கை பார்த்தாள். சற்று தொலைவில் அவளுக்கு எதிரே பெரும் சுவர் ஒன்று தெரிந்தது. அதன்மேல் பூனைகள் பல 'மியாவ் மியாவ்' என கத்தியவண்ணம் அலைந்து திரிந்து கொண்டிருந்தன. அதைக் கடந்து நிரம்ப வீடுகள் அருகருகே ஒட்டியபடி அமைந்திருந்ததால் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஓட்டின் மேல் காய்ந்து கொண்டிருந்த தானியங்களைச் சூறையாட வீட்டு மாடிகளில் புறாக்கள் பல காத்துக் கொண்டிருந்தன. அவைகளை கப்பென்று பிடித்து ருசிக்க பூனைகள் நோட்டமிட்டபடி சுவரில் அமர்ந்திருந்தன. இவை அனைத்தையும் வேடிக்கை பார்த்தபடி

திண்ணையில் சாய்ந்தபடி அமர்ந்திருந்தாள் மலர்விழி.

"அடியேய் அங்கு என்ன வேடிக்க பார்க்கிற? வா வந்து கைய கழுவிட்டு இந்த பாத்திரத்தை எல்லாம் கழுவி வை. என் பெரியபுள்ள வேலைக்கு கிளம்புறான். அவனுக்கு சாப்பாடு போடணும்" என கையைக் கழுவிக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தார் அவளது மாமியார்.

திண்ணையிலிருந்து சிரமப்பட்டு இறங்கி வந்த அவள், தட்டை முதலில் கழுவிவிட்டு பிறகு பாத்திரங்களை கழுவ அமர்ந்தாள். சிறிது நேரம் பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்தாள்

மலர்விழி. அப்போது வீட்டினுள் இருந்து வெளிவந்தான் அவளது மூத்த கொழுந்தன். கைகடிகாரத்தை கட்டியபடி வெளிவந்த அவன், அருகே அமர்ந்துகொண்டு பாத்திரம் கழுவும் மலர்விழியைக் கண்டதும் கோபம் மூக்கின் மேல் ஏறி நின்றது. அவளருகே கிடக்கும் தண்ணீர் பக்கெட்டை எட்டி உதைத்தான். "டமால்" என்கிற பெரும் சத்தத்தைக் கேட்டு திடுக்கிட்டு திரும்பினாள் மலர்விழி. அங்கு அவளது மூத்த கொழுந்தன் நின்றிருப்பதைக் கண்டாள்.

"மா!.. மா!..." என கோபத்துடன் அழைத்தான் அவன். உள்ளிருந்து ஓடி வந்த மலர்விழியின் மாமியார் "என்னப்பா என்ன சத்தம்? என்ன ஆச்சு ஆபீஸ் போலையா?" என்று கேட்டார்.

"ஏன்மா வெளியே கிளம்பும் போதுதான் கண்டவங்க முகத்துல எல்லாம் முழிக்கனுமா?" என்றவன் விறுவிறுவென சந்தை நோக்கி நடந்தான். நீண்ட அந்த சந்தில் நடந்து செல்லும் அவனை எட்டிப் பார்த்துவிட்டு "அவன் கிளம்பும் போது மறைவா போனு சொல்லிருக்கேன்ல? சரி பாத்திரத்த விளக்கனது போதும் போ. அந்த துணியை போய் காய போடு". என்றார் அவளது மாமியார்.

சற்று நடுக்கத்துடனே மேலெழுந்த மலர்விழி ஏதும் பேசாமல் வீட்டிற்கு எதிரே கட்டியிருக்கும் கொடிகளில் துணிகளைக் காயப் போட தொடங்கினாள். சில நிமிடங்கள் கழிந்தன. அந்த வீட்டின் நீண்ட சந்தினுள் இடுப்பில் குடத்துடன் விரைந்தோடி வந்துக் கொண்டிருந்தாள் மலர்விழியின் நாத்தனார் கீர்த்தனா. விரைந்து வந்து அவள் குடத்தை தன் தாயின் அருகில் வைத்துவிட்டு மூச்சு வாங்கினாள். "ஏண்டி கீர்த்தனா காலையில தண்ணி புடிச்சிட்டு வரேன்னு போனவ இத்தன நேரமா என்ன பண்ணிட்டு கிடந்த?"

"அம்மா, அத்தை வந்துட்டு இருக்கும்மா" என மூச்சு வாங்கியபடியே கூறினாள் கீர்த்தனா. அவள் கூறியதைக் கேட்டதும் கையில் வைத்திருந்த டம்ளரை கீழே போட்டார் மலர்விழியின் மாமியார்

"என்னடி சொல்ற?"

"பம்புகிட்ட பார்த்தேன். இங்கதான் வந்துட்டு இருக்காங்க. அதான் அவங்களுக்கு முன்னே நான் ஓடி வந்துட்டேன்" என கீர்த்தனா விறுவிறுத்தாள்.

"அய்யய்யோ அது வரேன்னு ஒரு போன்கூட பண்ணலியே! இவள வேற சேர்த்துகிட்ட செய்தி தெரிஞ்சா அவ்வளவுதான் நம்ம மானமே போயிடும்" என மலர்விழியைக் கண்டார் அவர்.

"அம்மா பேசாம இவளோட அம்மா வீட்டுக்கு அனுப்பிவிட்டுடலாம் பக்கத்துத் தெருதான. சீக்கிரம் அனுப்பிவை மா அத்த வந்துடபோது" என படபடத்தாள் கீர்த்தனா.

"ஆமா அதான் சரியா இருக்கும்" என எழுந்தவர் மலர்விழியிடம் சென்று அவள் கையை பிடித்து இழுத்துச் சென்றார் "அடியே சீக்கிரமா உங்க அம்மா வீட்டுக்கு போயிடு. என் நாத்தனார் வராளாம் அவ கண்ணுல படாம சீக்கிரமாக கிளம்பு" என சந்தை நோக்கி அழைத்துச் சென்றார். இரண்டடி எடுத்து வைத்த மலர்விழியின் மாமியார் நின்றார். அந்த நீண்ட சந்தின் நுழைவாயிலில்

அவரது நாத்தனார் செல்போனில் உரையாடிக் கொண்டிருந்தபடி நின்றிருந்தார்.

அவரைக் கண்டதும் மலர்விழியை மீண்டும் வீட்டு வாசலிடமே இழுத்து வந்தார் அவளது மாமியார். "அடியை மலரு, வந்திருக்க என் நாத்தனாருக்கு உன்ன சேத்துகிட்டு விஷயம் தெரிஞ் சா ஒருவழி பண்ணிடுவா. ஊர்முழுக்க புறணி பேசியே எங்க மானத்தை வித்துடுவா. அதனால நீ அவ கண்ணிலேயே படக்கூடாது" என்றவர் கீர்த்தனாவை பார்த்து "இவளை எங்கடி மறைச்சு வைக்குறது" என படபடப்புடன் கேட்டார்.

"மா நம்ம வீட்டுக்குள்ள எங்க ஒளிச்சு வைச்சாலும் அத்தை கண்டுபிடிச்சிடும். அத்த எப்போ மா ஒரு இடத்துல சும்மா இருந்திருக்கு?" என்றாள் கீர்த்தனா. அவள் கூறியதும் சரி எனப்பட்டது. அவசரமாக இவளை எங்கு அனுப்புவது என சுற்றுமுற்றும் பதட்டத்துடன் ஆராய்ந்தார். அப்போது ஓரிடத்தைக் கண்ட மலர்விழியின் மாமியார், "மலரு அம்மா வீட்டுக்கு போய் இரு. அவ புறப்பட்டதும் சொல்லி அனுப்புறேன். நீ என் பையன் வர்றதுக்குள்ளே வந்துரு! சரியா? வா."

"அம்மா என்னமா ஓலறே வாசல் சந்துல நந்தி மாதிரி அத்தை நின்னுக்கிட்டு போன் பேசிட்டு இருக்கு. அது கண்ணுல படாம எப்படிமா இவ அம்மா வீட்டுக்கு போவா ?".

மலர்விழி பதட்டத்துடன் இருவரையும் மாற்றி மாற்றி நோக்கிக் கொண்டிருந்தாள்.

"வாசல் வழியா இல்லடி இவள அந்த செவுத்துல ஏத்தி விட்டுருவோம் அதுமேல ஏறினா பக்கத்து வீட்டு வழியா அவங்க அம்மா வீட்டுக்கு போகட்டும் என்ன சொல்ற?" அதைக்கேட்ட மலர்விழியின் மனம் பக்கென்றது.

"இந்த செவுத்தலயா இவ கர்ப்பமா இருக்கா மா?

"அதெல்லாம் மலரு ஏறிடுவா! மலரு என் கண்ணுல்லே! ஏறி போய்டுமா" என அவளது மாமியார் வேண்டியபடி கெஞ்சினார். வந்திருக்க அவங்க கண்ணுல பட்டா பெரிய பிரச்சனையாகும். என்ன வீட்ல சேத்துகிட்டத சொந்தக்காரங்களுக்கெல்லாம் சொல்லிடுவாங்க. ஏற்கனவே அவருக்கு வேலை இல்ல. இப்போ சொந்தக்காரங்க பிரச்சனை பண்ணுனா மானத்துக்காக இவங்க நம்மள வெளியே அனுப்பிடுவாங்க. இதுக்கப்புறம் மறுபடியும் போலீஸ்காரங்க இங்க வந்து எனக்காக பேசுவாங்க. குடும்ப மானம் தெருவுல போகும் என பல வினா விடைகளுடன் ஆழ்ந்த சிந்தனையில் கிடந்த மலர்விழி, இறுதியாக அரைமனதோடு "சரி அத்த" என்றாள்.

"சரிசரி! வா வா" என அவள் கையைப் பிடித்து சுவருக்கு அழைத்துச் சென்றார் அவளது மாமியார். அவர்களுடன் நின்றிருந்த கீர்த்தனா மட்டும் சந்தை எட்டிப் பார்த்தாள். அவளது அத்தை போன் பேசியபடியே நின்றிருந்தார். "அப்பாடா" என நெஞ்சில் கை வைத்தவள் சுவருக்கு ஓடினாள்.

"மா அத்தை இன்னும் பேசிகிட்டு தான் இருக்கு"

"கீர்த்தனா இந்த சைக்கிளை கெட்டியாப்புடி" என்றார் அவர்.

"அத்த ஏணி" என பேச்சை இழுத்தாள் மலர்விழி.

"ஏணி எல்லாம் சரி இல்ல, நீ ஏறும்போது உடைஞ்சிடும். அமைதியா இரு. அடியே! என்னடி

பாக்குற? சைக்கிள பிடி" என்றார் அவர். சுவற்றில் சாய்ந்து கிடக்கும் அந்த சைக்கிளை கீர்த்தனா இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள்.

"ஏறுடி சீக்கிரம்" என அவளது மாமியார் வற்புறுத்தினார். வேறு வழியின்றி மலர்விழியும் சைக்கிளின் பெடலில் கால் வைத்து சைக்கிள் மீது ஏறினாள். அவளது ஓர் கையை பிடித்துக் கொண்டிருந்த மாமியார் "ம்ம்ம்! சீக்கிரம் ஏறுடி" என விறுவிறுத்தார். அடுத்ததாக மலர்விழி சுவற்றில் ஆங்காங்கே நீட்டிக்கொண்டிருக்கும் செங்கற்களில் ஒன்றின் மீது கால் வைத்து மேல் வரிசையில்

நீட்டிக்கொண்டிருக்கும் மற்றொரு செங்கலைப் பிடித்து ஏறினாள்.

"பார்த்து கெட்டியாப் பிடி" கீர்த்தனா கீழிருந்து கூறினாள்.

"அடியே! கைய விட்டுக்கிட்டு தொலைஞ்சுடாதே ஏறிடு!" என்றார் அவளது மாமியார். அந்நேரத்தில் "முருகா முருகா" என்கிற மனக்குரல்தான் மலர்விழியின் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது. ஏதோ ஒரு வேகத்தில் ஒப்புக்கொண்ட அவளது மனம் இப்போது அச்சத்தின் உச்சிக்கே சென்றிருந்தது.

இரண்டு உயிராக இருக்கும் இவளை இந்தப் பாடு படுத்துகிறார்களே என சுவற்றில் ஒட்டிக் கொண்டிருந்த பல்லிகள் எல்லாம் உச்சுக் கொட்டின. கர்ப்பிணிப் பெண் பரிதாபம் என சுவற்றின் மேல் அமர்ந்து இருந்த பூனைகள் எல்லாம் வருந்தின. அவளது நிலையைக் கண்டு மனம் வருந்திய புறாக்கள் எல்லாம் பசி மறந்து சிறகடித்து பறந்துச்சென்றன. முக்கால்வாசி சுவற்றில் ஏறி இருந்தாள் மலர்விழி. இரு செங்கற்களைக் கடந்தால் பக்கத்து வீட்டு கூரை ஓடு வந்துவிடும்.

அப்போது ஒரு கட்டத்திற்கு மேல் அவளது வயிறு வலிக்கத் தொடங்கியது. கீழே விழுந்தால் என்ன ஆகும் என்பதை நினைத்துப் பார்த்தவள் மனமுருக முருகனை வேண்டினாள். முருகனை மட்டும் மனதில் நினைத்துக் கொண்டு பலமுறை மலையேறிதைப் போல் அன்றும் அவள் முருகனை நம்பியே அதன் மேல் ஏறிக் கொண்டிருந்தாள். ஒருபக்கம் முருகனின் நாமத்தை உச்சரித்தாலும் மறுபக்கம் தன் வயிற்றில் வளரும் குழந்தையின் அழுகைக் குரல் அவள் செவிகளில் கேட்க தவறவில்லை.

"கொஞ்சம் பொறுத்துக்கடி செல்லம், அம்மா உன்னை கை விடமாட்டேன்" எனத் தனது வயிற்றுக்குள் வளர்ந்து கொண்டிருக்கும் பிள்ளையிடம் கூறியவள் கடைசிக் கல்லை பிடித்து சுவற்றின் மேல் ஏறி அமர்ந்தாள். முடிந்தவரை தனது பெருத்த வயிறு சுவற்றில் படாதவாறு பார்த்துக் கொண்டதே அவளுக்கு அந்நொடி பெரும் மகிழ்ச்சியைத் தந்திருந்தது. கீழே நோக்கினாள், தலை சுற்றத் தொடங்கியது. இவ்வளவு உயரத்தையா நாம் ஏறி வந்தோம் என வியக்கவும் செய்தாள்.

"அடியேய், என்ன அங்க உட்காந்துகிட்டு இருக்க? கிளம்புடி" எனக் கடிந்தார் மாமியார். பிறகு "கீர்த்தனா, போய்ப் பாரு அத்த வருதானு" என்றார். கீர்த்தனா விரைந்து சென்று எட்டிப் பார்த்தாள். அவளது அத்தை அப்பெரும் நீண்ட சந்தில் பாதையைக் கடந்து வந்து கொண்டிருந்தார்.

"மா அத்தை வருது மா!' என எச்சரித்தாள் கீர்த்தனா"

"அடியேய் மலரு, கிளம்படி சீக்கிரம்" எனச் சுவற்றின் மேல் அமர்ந்திருந்த மலர்விழியிடம் கூறினார் மாமியார்.

மலர்விழி மெல்ல மேலெழும்பி ஒரு கையால் வயிற்றையும் ஒரு கையால் பக்கத்து வீட்டுச் சுவற்றையும் பிடித்தவாறு ஓட்டின் மேல் நடந்து சென்றாள். அவள் பார்வையிலிருந்து மறைந்ததும் "மா அத்து வந்திருக்குமா" என கீர்த்தனா புன்னகையுடன் அழைத்தாள்.

திரும்பிய மலர்விழியின் மாமியார் "அடடே! வாங்க எப்ப வந்தீங்க?" என நெற்றியில் வழியும் வியர்வையைத் துடைத்துவிட்டு அவர்களை நோக்கி புன்னகையுடன் நடந்தார்.

ஓட்டின் மீது நடந்து சென்ற மலர்விழி பக்கத்து வீட்டு மாடியில் மெல்ல இறங்கி நின்றாள். அவள் உடல் முழுவதும் வியர்வை பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தன. பிறகு தன் முந்தானையால் முகத்தைத் துடைத்துவிட்டு அங்கிருக்கும் படிகளில் இறங்க முனைந்தாள். அப்போது அவளது கால்கள் நடுங்கத் தொடங்கின. படி இறங்க சக்தியற்றவளால் தள்ளாடினாள். அடுத்த நொடியே கால் தடுக்கி கீழே விழுந்தாள். மேல் படியில் தடுக்கி விழுந்தவள் உட்கார்ந்தபடியே கீழ்ப்படியிடம் வந்து விழுந்தாள். அமர்ந்து அமர்ந்து சறுக்கியதால், அவளது இடுப்புப் பகுதியில் தாங்கிக் கொள்ள முடியா வலி ஏற்பட்டன. கண்களில் நீர் அருவிபோல் வழியத் தொடங்கியது.

"முருகா! முருகா!" என மனதிற்குள் உச்சரித்தவள் மேலெழும்ப சக்தி இல்லாமல் துடித்துக் கொண்டிருந்தாள். அப்போது அவளது வயிற்றில் கிடக்கும் குழந்தை எட்டி உதைக்க செய்தது.

"கண்ணே, உனக்கு ஒன்னும் ஆகாது. அம்மா இருக்கேன்" எனக் கண்களை மூடி அழுதபடியே அருகில் இருக்கும் ஒரு கம்பை இறுகப் பற்றினாள் அடுத்து ஓட்டு மொத்த சக்தியையும் உபயோகித்து மேலே எழும்ப முயற்சித்தாள். ஒரு கையில் கம்பை பிடித்துக் கொண்டிருந்தவள் மறு கையால் வயிற்றைப் பிடித்தபடி கண்ணீருடன் மேலெழும்பி நிற்க முடியாமல் நின்றாள். அப்போது அவள் தலைமீது தங்க கிரீடம் ஒன்று தோன்றியது. முதுகில் நெருப்பால் ஆனச் சிறகுகள் இரண்டு முளைத்தன. கையில் ஊன்றி நிற்கும் அந்த கம்பு தங்கவேலாக மாறியது. அந்த வேலை ஊன்றியபடியே அந்தச் சிங்கப் பெண் நடந்து சென்றாள்.

கடைத்தெருவிற்கு சென்றுவிட்டு திரும்பிய மலர்விழியின் தாயார் தாழிட்டுச் சென்ற கதவுகள் திறந்திருப்பதை அறிந்து உள்ளே நுழைந்து

பார்த்தார். படுக்கையறையில் மலர்விழி படுத்து கிடந்தாள்.

"மலரே எப்பமா வந்த?" எனக்கேட்டார் அவர்.

"இப்பதான் மா வந்தேன். அங்க வேலை எல்லாம் முடிஞ்சிடுச்சு. அவரும் வேலை தேடிப் போய் இருக்காரு. அதான் உன்னப் பாத்துட்டு போலாம்னு வந்தேன்"

"பிரச்சனை ஏதும் இல்லையே மா?"

"அதெல்லாம் ஒன்னும் இல்லம்மா".

"ம்ம்ம்! சரி! சரி! இரு, அம்மா காப்பி போட்டு எடுத்துட்டு வரேன்" என சமையலறையை நோக்கி நடந்தார் மலர்விழியின் அம்மா. கண்களில் தேங்கி நிற்கும் நீரைத் துடைத்து விட்டு எதிரே சுவற்றில் ஒட்டி இருக்கும் முருகப் பெருமானின் படத்தைக் கண்டு கைகூப்பி வணங்கினாள் மலர்விழி. பிறகு அசதியில் கண்களை மூடி அயர்ந்து உறங்க தொடங்கினாள்.

# அறிவோம் தமிழர்

## `ஜானகிராமன் படைக்கும் உலகம்

**தி.ஜா**னகிராமன் 1921—ஆம் வருடம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள மன்னார்குடிக்கு அருகிலுள்ள தேவங்குடி கிராமத்தில் பிறந்தார். அவருடைய தந்தை தியாகராஜ சாஸ்திரிகள் நல்ல சமஸ்கிருதப் புலமையும், சங்கீத ஞானமும் உடையவர். இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்றவற்றை உபன்யாசம் செய்பவராக இருந்தார். அவர் குடும்பம் அங்கிருந்து இடம்பெயர்ந்து கும்பகோணம், தஞ்சை போன்ற ஊர்களில் கொஞ்சகாலம் வசித்தபின் நீ வலங்கைமானுக்கு அருகிலிருக்கும் கீழவிடையல் என்ற கிராமத்தில் நிலைபெற்றது. ஜானகிராமனின் தஞ்சாவூரிலும், கீழவிடையலுக்கு இடம்பெயர்ந்தபின் அருகிலிருந்த கருப்பூரிலும் பள்ளிக்கல்வி பெற்றார்.

கும்பகோணம் கல்லூரியில் கல்லூரிப்படிப்பும், சென்னையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும் படித்துப் பட்டங்களும் வாங்கினார். ஆசிரியர் பயிற்சிப்படிப்புக்குப் பின் 11 ஆண்டுகள் பள்ளியாசிரியராக வேலை பார்த்தார். இதில் ஓர் ஆண்டு சென்னையிலும், பத்தாண்டுகள் தஞ்சை மாவட்டம் அய்யம்பேட்டையிலும்,குத்தாலத்திலும் பணியாற்றினார். வேறு வேலைகள் கிடைக்கும் வாய்ப்புகள் இருந்தும், இலக்கியம், இசையில் ஈடுபடுவதற்கான நேரம் கிடைக்குமென்று ஆசிரியர் பணியில் இருந்திருக்கிறார். ஜானகிராமனின் சில சிறுகதைகள் இந்த ஆசிரியர் வேலையைப் பின்புலமாகக் கொண்டிருப்பவை. 1954—இல், தன்னுடைய 33—ஆவது வயதில், அகில இந்திய வானொலியின் சென்னை பிரிவில், கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராகப் பதவியேற்று, 1968 வரை நீ பதினான்கு ஆண்டுகள் சென்னையில் வாழ்ந்தார். 1968—இல் பதவி உயர்வு பெற்று டில்லி வானொலி நிலையத்துக்கு மாற்றம் பெற்றார். 1979—இல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். எனினும் அவரது சிறப்பான சேவையைப் பாராட்டி அவரை Emeritus Producer என்ற பதவி கொடுத்து ஆகாசவாணி கௌரவித்தது.

கல்வித்துறையில் பணியாற்றியபோது பிற நாடுகளின் கல்வித்திட்டங்களைப் பற்றி தெரிந்துகொள்வதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். நம் நாட்டின் கல்வித்திட்டத்தையும், ஆசிரியர்களின் அக்கறையின்மையையும் குறித்து ஜானகிராமன் தொடர்ந்து தன் படைப்புகளில் பதிவு செய்தபடி இருந்திருக்கிறார். பள்ளிக்கல்வி தொடர்பான பல வானொலி ஒலிபரப்புகளில் ஜானகிராமனின் சிறப்பான ஒலிச்சித்திரங்கள் மிகுந்த புகழ்பெற்றவை.

புதுடெல்லியிலிருந்தபோது அங்கிருந்த இலக்கிய நண்பர்களோடு நட்பும்,தொடர்பும் இருந்திருக்கிறது. கணையாழியின் வளர்ச்சியில் ஆர்வமும், அக்கறையும் கொண்டவராக இருந்திருக்கிறார். அரசுப்பணியிலிருந்து ஓய்வுபெற்றபின் அசோகமித்திரனுக்குப் பின், 'கணையாழியி' பத்திரிகையின் கௌரவ ஆசிரியராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றியிருக்கிறார்.17 வயதில் கும்பகோணம் கல்லூரியில் படிக்கும்போதே கதைகள் எழுதத்தொடங்கி வெகுஜனப் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கின்றன. அப்போது கல்லூரியில் சீனியரான எம்.வி.வெங்கட்ராமுடன் ஏற்பட்ட நட்பு, அவரை தீவிர இலக்கியம் நோக்கி கொண்டுசென்றது. கும்பகோணத்திலிருந்த மணிக்கொடி எழுத்தாளரான கு.ப.ராஜகோபாலனோடு நெருங்கிய நட்பு ஏற்பட்டிருக்கிறது. அவரது வழிகாட்டுதல் தி.ஜானகிராமனை நெறிப்படுத்தியது. அக்காலகட்டத்தில் கரிச்சான் குஞ்சு, எம்.வி.வி, ஸ்வாமிநாத ஆத்ரேயன் ஆகியோர் ஜானகிராமனின் நெருங்கிய நண்பர்களாக இருந்திருக்கிறார்கள். இந்த இளைஞர்கள் அனைவருக்கும் கு.ப.ரா நல்ல இலக்கிய வழிகாட்டியாக இருந்திருக்கிறார்.

ஜானகிராமனின் தீவிர இலக்கியச் செயல்பாடு கு.ப.ராவின் அறிமுகத்துக்குப் பின்னரே நிகழ்ந்திருக்கிறது. தன்னுடைய 24—ஆவது வயதில் அமிர்தம் என்ற முதல் நாவலை எழுதியிருக்கிறார். பத்து நாவல்களும், இரண்டு குறுநாவல்களும், மூன்று நாடகங்களும், நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும், மூன்று பயண நூல்களும் எழுதியிருக்கிறார். கடைசி நாவலான நளபாகம் 1982—இல் வெளியானது. 1979—ஆம் வருடத்துக்கான சாகித்ய அகாடமி விருது 'சக்தி

# பெருமை

வைத்தியம்' என்ற சிறுகதைத் தொகுப்புக்காக வழங்கப்பட்டது. காலச்சுவடு நிறுவனம் சில தேர்ந்தெடுத்த சிறுகதைகளை 'சிலிர்ப்பு' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது.

`மோகமுள்', `அம்மா வந்தாள்', `மரப்பசு', `உயிர்த்தேன்', `நளபாகம்' போன்ற நாவல்கள் மூலம் உலகப்புகழ் பெற்றவர் தி.ஜானகிராமன். ஒரு நாவலாசிரியராகவே அவர் பெரிதும் அறியப்பட்டிருந்தாலும் அவருக்கு சாகித்ய அகாடமி விருது கிடைத்தது அவரது `சக்தி வைத்தியம்' சிறுகதைத் தொகுப்புக்குத்தான். நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை அவர் எழுதியுள்ளார்.நாவல்கள் அவருக்கு அளித்த புகழின் வெளிச்சம் அதிகம் என்பதால், அவருடைய சிறுகதைகள்மீது கவனம் குறைவாகவிழுந்திருக்கலாம். பாலியல் மீறல்கள் அவரது நாவல்களின் மைய இழையாக இருந்ததாலும் ஒரு வெகுசன ஈர்ப்பு அவர் நாவல்களின் மீது விழுந்திருக்கலாம். ஆனால், அவரது சிறுகதைகள் மிக நுட்பமான மனித உணர்வுகளைப் பேசுகின்றன.

தி.ஜானகிராமன் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த தேவங்குடி என்னும் ஊரில் 1921—ம் ஆண்டில் பிறந்தார். ஆரம்பகாலங்களில் சங்கீதப் பயிற்சியும் மேற்கொண்டார். இவருடைய பல கதைகளில் சங்கீதம் பற்றிய அருமையான பல தகவல்கள் விரவிக்கிடப்பதைக் காண, சங்கீதத்தில் இவருக்கு இருந்த ஞானமும் அறிவும் முக்கியக் காரணமாக இருந்திருக்க வேண்டும். இலக்கியத்தில் எம்.ஏ படித்திருக்கும் இவர், ஆரம்பத்தில் சிலகாலம் பள்ளி ஆசிரியராக வேலைபார்த்து, பிறகு சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் வேலைபார்த்தார். பிறகு, புதுடெல்லி வானொலி நிலையத்திலும் பணியாற்றி சிறந்த சேவை புரிந்து 1978—ம் ஆண்டு பணி ஓய்வுபெற்றார்.

ஆரம்ப காலங்களில் `கலைமகள்' பத்திரிகையில் எழுதி, நட்சத்திர எழுத்தாளராக உருவெடுத்தார். `மணிக்கொடி' இதழிலும் இவரது சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றன. இவரது முதல் சிறுகதைத் தொகுப்பு `கொட்டு மேளம்' 1954—ம் ஆண்டில் வெளிவந்து மிகவும் பிரபலமடைந்தது. இரண்டாவது சிறுகதைத் தொகுதி `சிவப்புரிக்ஷா'. 1956—ல் வெளிவந்த இந்தச் சிறுகதைத் தொகுப்பும் ஜானகிராமனுக்கு மிகுந்த புகழைக் கொடுத்தது. கு.ப.ராஜகோபாலனுக்கு நெருக்கமான நண்பராக இருந்தவர். கு.ப.ரா—வின் இறுதி நாளில் அவருக்குத் துணையாக இருந்தவர்.

``இன்றைய தமிழ் இலக்கியத்தில் தி.ஜானகிராமன் ஒரு தனித்த, விதிவிலக்கான நிகழ்வு. அவர் ஒரு முதல் தர இலக்கியத் தரமான எழுத்தாளர். அதேசமயம் மிகப் பிரபலமான எல்லோரும் விரும்பி வாசிக்கும் எழுத்தாளரும்கூட. இலக்கியத் தரமும் பிரபல்யமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற இவரைப் போன்ற எழுத்தாளர் இன்று தமிழ் எழுத்துலகில் இல்லை. அவருடைய எழுத்தின் குணங்கள், மிக நுண்ணிய ரசனைகொண்ட விமர்சகனையும் வியக்கவைக்கும்; வெகுசாதாரண வாசகனையும் கவர்ந்துகொள்ளும்.

அவருடைய சம்பிரதாயக் கட்டுப்பாடுகளை மீறும் கதைகளில் காணும் அழகு, கதாபாத்திரங்களும் நிகழ்வுகளும் உருவாக்கப்படும் தீவிரம் எல்லாம் ஒரு விமர்சகனை வியக்கவைக்கும். அதேசமயம் அவரது சொக்கவைக்கும் நடையழகும், வெகுசுலபமாக எந்தவிதமான சிரமமும் கொடுக்காமல் எத்தனை நூறு பக்கங்களானாலும்

அலுக்காமல் படிக்கவைக்கும் எளிய சின்ன சின்ன சம்பாஷணைகளால் ஆன கதை சொல்லும் நேர்த்தியெல்லாம் எப்படிப்பட்ட சாதாரண வாசகனையும் மனம் கவரும். சாதாரணமாக நம்மில் பெரும்பாலோருக்கு வார்த்தைகளில் அடைபட மறுக்கும் எந்தச் சிக்கலான சம்பவமுமோ அல்லது சிந்தனையுமோ வெகு எளிதாக அன்றாடம் நாம் புழங்கும் வார்த்தைகளில் ஜானகிராமனால் சொல்லிவிட முடிகிறது.

தன்னை அதிகம் சிரமப்படுத்திக்கொள்ளாத சாதாரண கதை படிக்கும் வாசகன், இத்தகைய எழுத்தின் ஆழத்தை உணர்த்துகொள்ளாமல் படித்துச் செல்லக்கூடும்தான். ஆனால், ஜானகிராமன் எழுத்து தரும் சுகானுபவத்தில் அவன் தீவிர ஜானகிராமன் ரசிகனாகிவிடுகிறான். இதெல்லாம் போக, ஜானகிராமனின் எழுத்தில் காணும் பரிகாசமும் கேலியும் யாரையும் துன்புறுத்தாத மென்மை குணம்கொண்டது. இது எந்த ரக வாசகனையும் கவர்ந்து ரசிக்கவைக்கும்.

ஜானகிராமனின் நாவல்கள், சிறுகதைகள் எல்லாமே அவர் பிறந்த தஞ்சை ஜில்லாவின் மத்திய தர பிராமணர்களின் வாழ்க்கையைச் சித்திரிப்பவை; அந்த வாழ்க்கைகொண்ட மதிப்புகளின் உச்சங்களையும் சீர்கேடுகளையும் பிரதிபலிக்கும் ஆவணம். ஜானகிராமன் படைக்கும் உலகம் லட்சியவாதிகளால் நிறைந்தது. அவர்கள்தாம் தமக்கு விதித்துக்கொண்டுள்ள லட்சியங்களைக் காக்க எப்போதும் வாழ்க்கையின் வதைக்கும் யதார்த்தங்களையும் சூழ்நிலையையும் போராடிக்கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது" என்பது அவரைப் பற்றி, வெங்கட் சாமிநாதன் அவர்களின் சித்திரிப்பு.

`தஞ்சை விவசாயக் கூலிகள் சாட்டையடியும் சாணிப்பாலும் தின்றுகொண்டிருந்த காலத்தில், மணிக்கொடி எழுத்தாளர்கள் அதைப்பற்றி எதுவுமே எழுதாமல் மேல்தட்டு வர்க்கத்து வாழ்க்கையையே வியந்து வியந்து எழுதிக்கொண்டிருந்தார்கள்' என்ற விமர்சனம், தி.ஜானகிராமன் மீதும் உண்டு. என்றாலும் எளியவர்கள் மீது பரிவும் சாய்மானமும்கொண்டவராக அவரது சிறுகதைகள் அவரை அடையாளப்படுத்துகின்றன. அதற்கு நல்ல உதாரணம் `சிலிர்ப்பு' கதை. அவர் எப்படி எழுதுகிறார் என்பதற்கான உதாரணமாக அந்தக் கதை பற்றி அவரே பேசுகிறார்:

``எப்படி எழுதுவது என்பதை எனக்குச் சரியாக விவரிக்கத் தெரியவில்லை. மாபஸான் `நெக்லேஸை'யோ, `இரு நண்பர்களை'யோ, செக்காவ் `டார்லிங்'கையோ, `கோரஸ் பாடகி'யையோ, கு.ப.ரா. `நூருன்னிஸா'வையோ, பிச்சமூர்த்தி `பதினெட்டாம் பெருக்கை'யோ, தாகூர் `ஊர் திரும்புதலை'யோ எப்படி எழுதினார்கள் என்று அவர்களைக் கேட்டால்தான் தெரியும். என் சொந்த அனுபவத்தில் தெரிந்ததைத்தான் நான் சொல்வேன்.

ஒருநாள் நான் ரயிலில் போய்க்கொண்டிருந்தபோது கச்சலும் கறுப்புமாக நாய் பிடுங்கினாற்போன்ற பத்து வயதுப் பெண் குழந்தையுடன் யாரோ பணக்கார அம்மாள் எதிர் இருக்கையில் அமர்ந்திருந்தாள். பள்ளிக்கூட விடுமுறைக்கு மூத்த அக்காளின் ஊரில் தங்கிவிட்டு ஊர் திரும்புகிறது அந்தப் பெண். நல்ல துணை ஒன்று இந்தப் பணக்கார அம்மாளின் உருவில் கிடைக்கவே, அக்காள் அந்த அம்மாளோடு குழந்தையை அனுப்பியிருக்கிறாள். ஏதோ பேசிக்கொண்டிருக்கும்போது அந்த அம்மாள் ``இது படித்து என்ன பண்ணப்போகிறது? நான்கூட, கூடமாட ஒத்தாசையாயிருக்க இதையே சாப்பாடு போட்டு வீட்டில் வைத்துக்கொண்டுவிடலாம் என்று பார்க்கிறேன்" என்றாள்.

என்னமோ, அந்த யோசனையும் அந்த அம்மாள் அதைச் சொன்ன தோரணையும் உள்மனதில் பாய்ந்து குத்திக்கொண்டுவிட்டன. அந்தப் பெண்ணையே பார்த்துக்கொண்டு வந்தேன். அந்த ஆறு மணி நேரப் பயணத்தில் ஒன்றும் வேண்டும் என்று கேட்காமல், ஆசைப்படாமல், கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லிக்கொண்டு வந்தது அது. எனக்கு உணர்ச்சிவசப்படுகிற இயல்பு அதிகம். அந்தப் பெண் தன் பொறுமையினாலும் பொறுப்பினாலும் எதையும் சமாளிக்கும். எதையும் ஆளும் எனத் தோன்றிற்று. ஓடி ஆடி, கத்திக் கூச்சலிட்டு விளையாடிப் பிதற்றவேண்டிய வயதில் அது உலகத்தின் சுமைகளையும் கவலைகளையும் தாங்கிக்கொண்டிருப்பதுபோல் எனக்குத் தோன்றிற்று. எனக்குப் பயமாக இருந்தது. வயிற்றைக் கலக்கிற்று. அதுவே பிறகு `சிலிர்ப்பு' கதையாயிற்று.

ஏன் எழுதுகிறேன் என்கிற கேள்வியை எழுப்பி அவரே விடை கூறுகிறார் தி.ஜா. ``எனக்கே எனக்காக, கொஞ்சம் எனக்கும் கொஞ்சம் உங்களுக்குமாக, சில சமயம் எதற்கு, யாருக்கு எனத் தெரியாமல்... இப்படிப் பல மாதிரியாக எழுதுகிறேன்.எனக்கே எனக்காக எழுதும்போது என்ன எழுதுகிறேன், எப்படி எழுதுகிறேன், என்ன எழுத வேண்டும் என்று எனக்கு நானே உபதேசம் செய்துகொள்கிறேனோ? பசியே தொழிலாகக்கொண்டிருக்கிற ஏழைகளைப் பற்றி, பிச்சைக்காரர்களைப் பற்றி, பாட்டாளிகளைப் பற்றி, விருப்பமில்லாமல் வழுக்கி விழுந்த பெண்களைப் பற்றி, பள்ளிக்கூடம் போக முடியாமல், பிண ஊர்வலத்தில் நடனம் ஆடிக்கொண்டு போகிற குழந்தைகளைப் பற்றி, விருப்பமில்லாமல் திருட நேர்ந்தவர்களைப் பற்றித்தான் எழுத வேண்டும் என்று வகுத்துக்கொள்கிறேனா?

இதையெல்லாம் எழுதி, உன்னைச் சுற்றி சாக்கடை தேங்கிக்கிடக்கிறதுஞ் ஏன் பார்க்கவில்லை என்று சமுதாயத்தைப் பார்த்துக் கோபித்துக்கொள்ள சங்கற்பிக்கிறேனா அல்லது குடும்ப உறவுகள், உணர்ச்சிகள், கலைஞர்கள், பெரிய உத்தியோகஸ்தர்கள், நடுவகுப்பு, உயர்வகுப்பு மனிதர்கள், அவர்களுடைய ஆச்சாரங்கள், சீலங்கள், புருவம் தூக்கும் பாங்கு, கண்ணிய வரம்புகள், மேல்பூச்சுகள், உள்நச்சுகள் இவற்றைப் பற்றி எழுத வேண்டும் எனத் திட்டம் போட்டுக்கொள்கிறேனா? அல்லது சிம்ம விஷ்ணு, கரிகாலன், ராணாப்பிரதாப், வல்லவ சேனன், அலெக்ஸாண்டர் இவர்களைப் பற்றி எழுதி பழைய காலத்தை மீண்டும் படைக்க வேண்டும்.இன்றைய மனிதனின் மூதாதையரின் நற்குண, துர்குணங்கள், இவற்றையெல்லாம் எழுதி சரித்திரக் கொள்கைகளையோ சித்தாந்தங்களையோ வகுத்து நிலைநாட்ட வேண்டும் என்று எழுதும்போது திட்டம் போட்டுக்கொள்கிறேனா?

Mr. Jankiraman, the well-known Tamil writer, photographed with President Rajendra Prasad in New Delhi.

எனக்கே எனக்காக எழுதும்போது இந்தப் பிடுங்கல்கள் ஏதும் என்னைத் தொந்தரவு செய்வதில்லை. நான் இத்தனை பெயரைப் பற்றியும் எழுதினாலும் எழுதுவேன், எழுதாமலும் இருப்பேன். யாரைத் தெரியுமோ அவர்களைப் பற்றி எழுதுவேன். அதாவது அவர்கள் அல்லது அவை என் மனதில் புகுந்து, தங்கி, அமர்ந்து என்னைத் தொந்தரவு பண்ணினால் எழுதுவேன். தொந்தரவு தாங்க முடியாமல்போனால்தான் எழுதுவேன். நானாகத் தேடிக்கொண்டு போய் `உன்னைப் பற்றி எழுதுவதாக உத்தேசம்' என்று பேட்டி காண மாட்டேன் — அப்ஸர்வ் பண்ண மாட்டேன். அவர்களாக, அவையாக வந்து என்னைத் தாங்கினால்தான் உண்டு. அதனால்தான் எனக்கு எழுதுவதற்காக யாத்திரை பயணங்கள் செய்வதில் உற்சாகம் கிடையாது. அதைவிட காதல் செய்து பொழுதைப்போக்கலாம். (என்ன காதல் என்று நிர்ணயித்துக்கொள்வது என்னுடைய இஷ்டம், வசதியைப் பொறுத்தது.)

அவர் வாக்குப்போலவே `மெனக்கெடல்' என்று ஏதுமின்றி இயல்பாக வந்து விழும் கதைகள்தாம் அவருடைய படைப்புகள். அவருடைய நாவல்களில் பாலியல் மீறல்கள் பற்றி கண்ணியத்துக்கும் ஆபாசத்துக்கும் இடையில் கத்திமுனையில் நடப்பது போன்ற கதைகளைச் சொல்லியிருப்பார். `மரப்பசு' நாவல் கொஞ்சம் கீழே இறங்கிய நாவலாக எனக்குப்படும். ஆனால் சிறுகதைகளில் பல்வேறு தளங்களுக்குள்ளும் ஊடுருவிப் பாய்ந்து நம்மை மெய்ம்மறக்கச் செய்கிறார். சிறுகதை பற்றி அவர் சொல்ல வாசகத்தோடு நிறைவுசெய்வோம்.

``உணர்வு இல்லாமல் இயந்திரரீதியில் படைக்கிறவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் சாமர்த்தியத்தையும் அசகாய சூரத்தனத்தையும் காட்டி நம்மைப் பிரமிக்கவைக்க முடியும். ஆனால், மெய்ம்மறக்கச் செய்ய இயலாது. நான் இந்த நோக்கில்தான் எந்தக் கலைப் படைப்பையும் பார்க்கிற வழக்கம். சிறுகதையையும் அப்படித்தான் பார்க்கிறேன். எந்தக் கலைப்படைப்புக்கும் முழுமையும் ஒருமையும் அவசியம். அவை பிரிக்க முடியாத அம்சங்கள். சிறுகதையில் அவை உயிர்நாடி.''

தி.ஜா. இசையை எழுத்தாக்கிய அபூர்வ எழுத்தாளர். தஞ்சை மாவட்டம் மன்னார்குடியை அடுத்து தேவங்குடியில் 1921ஆம் ஆண்டு பிறந்தவர். பத்து வருடங்கள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிவர்; பின்பு அகில இந்திய வானொலியில் பணியாற்றி ஓய்வு பெற்றார். அதன் பின்னர் தமிழின் முதன்மையான இலக்கிய இதழாக விளங்கிய கணையாழி மாத இதழில், ஆசிரியராகப் பணியாற்றி வந்த தி. ஜானகிராமன் 1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு சிறு உடல் நலக் குறைவிற்குப் பிறகு இயற்கை எய்தினார். இவர் சமையற்கலையிலும் வல்லவர். இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம் முதலியவற்றிலும் ஈடுபாடு மிக்கவர்.

# சிவகாமியின்



## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## அழியா மதில் 1

**வா**தாபி சக்கரவர்த்தி புலிகேசியின் படைகள், மகேந்திர பல்லவரின் காலத்தில் காஞ்சிக் கோட்டையை முற்றுகையிட்டது, தென்னாட்டின் சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற சம்பவம். ஏறக்குறைய எட்டு மாத காலம் அந்த முற்றுகை நீடித்திருந்தது. எனினும், காஞ்சிக் கோட்டையின் மதில்கள் கன்னியழியாமல் கம்பீரமாகத் தலைதூக்கி நின்றன. வாதாபிப் படையைச் சேர்ந்த வீரன் ஒருவன் கூடக் காஞ்சிக் கோட்டைக்குள்ளே கால் வைக்கவும் முடியவில்லை.

வாதாபி வீரர்கள் காஞ்சிக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டவுடனே, வைஜயந்தி பட்டணத்தில் செய்தது போலவே ஒரே மூர்க்கமாய்க் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்ற யத்தனித்தார்கள். காலாட் படையைச் சேர்ந்த கணக்கற்ற வீரர்கள் ஏக காலத்தில் கோட்டையின் நாற்புறத்திலும் அகழிகளை நீந்திக் கடக்க முயன்றார்கள். கோட்டை மதில்களின் மேல் மறைவான இடங்களிலிருந்து மழை போல் பொழிந்த அம்புகளும் அகழியிலிருந்த முதலைகளும் அவ்வீரர்களையெல்லாம் எமலோகத்துக்கு அனுப்பின. தப்பித் தவறிக் கரையேறிய வீரர்கள் கோட்டை மதிலோரமாகக் கண்ணுக்குத் தெரியாமல் அமைந்திருந்த பொறிகளில் அகப்பட்டுத் திண்டாடினார்கள். ஆங்காங்கு அகழிகளில் இறங்கிய யானைகளுக்கும் அகழியிலிருந்த முதலைகளுக்கும் பயங்கரமான போராட்டம் நடந்ததில், அகழியில் நிறைந்திருந்த தண்ணீரெல்லாம் செந்நீராக மாறியது.

முதல் முயற்சியில் தோற்ற பிறகு, கோட்டை வாசல்களுக்கு எதிரே அகழியைத் தூர்த்துக் கோட்டைக் கதவுகள் மேல் யானைகளை மோதச் செய்ய முயன்றார்கள். காஞ்சியைச் சுற்றியிருந்த பெரிய பெரிய விருக்ஷங்களையெல்லாம் மத்த கஜங்கள் வேரோடு பெயர்த்துக் கொண்டு வந்து அகழியில் போட்டுத் தூர்த்தன. ஆனால், இந்த வேலை அவ்வளவு எளிதாக நடக்கவில்லை. கோட்டை வாசலின் மேல் மாடங்களில் மறைவான இடங்களிலிருந்து பல்லவ வீரர்கள் வேகமாய் எறிந்த வேல்கள் யானைகளின் கண்களிலும் மற்றுமுள்ள மர்ம ஸ்தானங்களிலும் தாக்க, அவை வீறிட்டுக் கொண்டு திரும்பியோடிச் சளுக்கர் படைகளுக்குச் சேதமுண்டாக்கின.

பெரும் பிரயத்தனத்தின் பேரில் கோட்டை வாசல்களுக்கு எதிரே அகழிகள் தூர்க்கப்பட்டன. யானைகள் கோட்டைக் கதவுகளை முட்டிய போது, வெளிக் கதவுகள் தகர்ந்தன. ஆனால், வெளிக் கதவுகளுக்கு உள்ளே எதிர்பாராத அதிசயம் யானைகளுக்குக் காத்திருந்தது. புதிதாய் அமைக்கப்பட்டிருந்த உட்கதவுகளில் நூற்றுக்கணக்கான வேல் முனைகள் பொருத்தப்பட்டிருந்தன. இந்த வேல் முனைகளில் வேகமாய் மோதிக் கொண்ட வாதாபி யானைகள், பயங்கரமாகப் பிளிறிக் கொண்டு திரும்பி, தங்களுக்குப் பின்னாலிருந்த காலாட் படை வீரர்களையெல்லாம் துவம்சம் செய்து கொண்டு ஓடின. பெரிய பெரிய மரக்கட்டைகளைக் கொண்டு வந்து அந்த வேல் முனை பொருந்திய கதவுகளையும் தகர்த்தார்கள். அப்படித் தகர்த்து விட்டுப் பார்த்தால், அக்கதவுகளுக்குப் பின்னால் கோட்டை வாசலை அடியோடு அடைத்துக் கொண்டு கருங்கல்லாலும், சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட கெட்டிச் சுவர் காணப்பட்டது.

# 1 சபதம்

கல்கி

இவ்விதமாக, ஏறக்குறைய ஒரு மாதகாலம் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றுவதற்கு முயன்று தோல்வியடைந்த பிறகு, நீடித்து முற்றுகையை நடத்திக் கோட்டையிலுள்ளவர்களைப் பட்டினி போட்டுப் பணியச் செய்வதென்று புலிகேசி தீர்மானித்தான். வாதாபிப் படைகள் காஞ்சியைச் சுற்றிலும் நெடுந்தூரம் வரை கூடாரம் அடித்துக் கொண்டு தண்டு இறங்கின.

முற்றுகையை ஆரம்பித்து ஆறு மாத காலம் ஆன போது, கோட்டைக்குள் இருப்பவர்களுக்கு என்ன ஆபத்து நேரிடுமென்று புலிகேசி எதிர்பார்த்தானோ அந்த ஆபத்து வாதாபிப் படைகளுக்கே நேரலாயிற்று. அதாவது உணவுப் பஞ்சம் நேர்ந்தது. இலட்சக்கணக்கான வீரர்களும், ஆயிரக்கணக்கான போர் யானைகளும், வண்டி இழுக்கும் மாடுகளும் ஒரே இடத்தில் இருந்து

கொண்டு எவ்வளவு காலத்துக்கு உணவு பெற முடியும்? வடபெண்ணைக் கரையிலிருந்து காஞ்சி வரையில் உள்ள வழியில் புலிகேசியின் படைகளுக்கு யாதொரு உணவுப் பொருளும் கிடைக்கவில்லை. ஏனெனில் வடபெண்ணையிலிருந்து மெல்ல மெல்லப் பின்வாங்கி வந்த பல்லவ சைனியம், வாதாபிப் படைக்கு உணவுப் பொருள் ஒன்றும் கிடைக்காதபடி நன்றாய்த் துடைத்து விட்டிருந்தது.

அவ்வாறே,காஞ்சியைச் சுற்றிலும் நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் உள்ள கிராமங்களையெல்லாம் சூனியமாக விட்டு விட்டு ஜனங்கள் போய் விட்டபடியால், வாதாபிப் படைக்கு உணவுப் பொருள் எதுவும் கிடைக்கவில்லை.

இரண்டு மூன்று மாத காலத்திற்குள் காஞ் சியைச் சுற்றியிருந்த காடுகள், தோட்டங்கள் எல்லாவற்றையும் வாதாபியின் யானைகள் அழித்துத் தின்று விட்டன. அப்புறம் அவற்றுக்கு ஆகாரம் தேடுவதற்காகப் பல காத தூரம் போக வேண்டியிருந்தது. அப்படிப் போனாலும் அந்த வருஷத்துக் கடுங் கோடையில் பசுமையைக் கண்ணால் பார்ப்பதே அபூர்வமாயிருந்தது.

இதையெல்லாம் காட்டிலும் மிகப் பயங்கரமான இன்னோர் அபாயம், கோடை முற்றிய போது வாதாபிப் படைகளுக்கு ஏற்பட்டது. அதாவது, குடி தண்ணீருக்கே பஞ்சம் உண்டாகி விட்டது.

அந்த வருஷத்தில் காஞ்சியைச் சுற்றிலும் ஏழெட்டுக் காத தூரம் பரவிய பிரதேசங்களில் சில அதிசயங்கள் நடந்து வந்தன. கார்த்திகை, மார்கழியில் தண்ணீர் நிறைந்து ததும்பிக் கொண்டிருந்த பெரிய பெரிய ஏரிகளெல்லாம், தை, மாசி, மாதத்தில் எப்படியோ திடீர் திடீரென்று கரை உடைத்துக் கொண்டு சுற்றுப் பிரதேசங்களை வெள்ளத்தில் மூழ்கடித்தன. இது காரணமாக, சித்திரை மாதத்தில் ஏரிகளில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லை. ஆங்காங்கு இருந்த கிணறுகளும், குளங்களும், ஏரிகள் உடைத்துக் கொண்டு வெள்ளம் வந்த போது தூர்ந்து போய் விட்டன. எங்கேயாவது கொஞ்சம் தண்ணீர் கண்டால் குடிப்பதற்குப் பயனில்லாதபடி அழுகி நாற்றமெடுத்துக் கிடந்தது.

அந்த நாளில் பாலாற்றில் மூன்று இடங்களில் அணைக்கட்டு கட்டித் தண்ணீரைத் தேக்கி வைத்திருப்பார்கள். வேனிற்காலத்தில் சிறிது சிறிதாக விடுவார்கள். இந்த வருஷத்தில் அந்தத் தேக்கங்களை முன்னமே உடைத்து விட்டிருந்தபடியால் கோடைக் காலத்தில் பாலாறும் வறண்டு விட்டது. பாலாறு வறண்ட காரணத்தினால் காஞ்சியையும் கடலையும் ஒன்று சேர்த்த கால்வாயிலும் தண்ணீர் வற்றிப் போய் விட்டது. கோட்டையைச் சுற்றியிருந்த அகழித் தண்ணீரோ, இரத்தமும் நிணமும் சேர்ந்த சேற்றுக் குட்டையாக மாறியிருந்தது. எனவே, வாதாபியின் இலட்சக்கணக்கான வீரர்களுக்கும் யானைகள், குதிரைகள், மாடுகள் எல்லாவற்றிற்கும் பாலாற்றில் ஊற்றெடுத்தே குடி தண்ணீர் கிடைக்க வேண்டியிருந்தது. பசி, தாகங்களின் கொடுமையினால் போர் யானைகள் அவ்வப்போது வெறி பிடித்துச் சிதறியோட, அவற்றின் கால்களில் மிதிபட்டு வீரர்கள் பலர் எமலோகம் சென்றார்கள்.

ஆனி மாதத்திலே ஒரு நாள் வராகக் கொடி வானளாவப் பறந்த கூடாரத்திற்குள்ளே புலிகேசியின் யுத்த மந்திராலோசனை சபை கூடிற்று. முன்னே வடபெண்ணை நதிக்கரையில் நாம் பார்த்த அதே படைத் தலைவர்கள் ஏழெட்டுப் பேர், எதிரில் விரித்திருந்த கம்பளத்தில் உட்கார்ந்திருக்க, வாதாபி மன்னன் தந்தச் சிங்காதனத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தான். முன்னைக் காட்டிலும் புலிகேசியின் முகத்தில் கடூரமும் கோபமும் அதிகமாகக் கொதித்துக் கொண்டிருந்தன. படைத் தலைவர்களைப் பார்த்து, அவன் கூறினான்: "இந்த மகேந்திரவர்மனுக்குத் தகப்பன் பெயர் சிம்மவிஷ்ணு; மகன் பெயர் நரசிம்மன். ஆனால், மகேந்திரனோ வெறும் நரியாக இருக்கிறான். வளையில் நரி புகுந்து கொள்வது போல், இவன் கோட்டைக்குள்ளே புகுந்து கொண்டிருக்கிறான். நரி வளையிலிருந்து வெளியே வருமென்று எத்தனை நாளைக்குத்தான் காத்துக் கொண்டிருப்பது? உங்களில் யாருக்காவது ஏதாவது யோசனை தோன்றுகிறதா?"

படைத் தலைவர்கள் மௌனமாயிருந்தார்கள். ஒருவராவது வாய் திறந்து பேசத் துணியவில்லை.

“ஏன் எல்லோரும் மௌனம் சாதிக்கிறீர்கள்! வெற்றி மேல் வெற்றி கிடைத்துக் கொண்டிருந்த போது, நான் நீ என்று எல்லோரும் யோசனை சொல்ல முன்வந்தீர்கள். யோசனை தேவையாயிருக்கும் போது வாயை மூடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகா! நமது பிக்ஷு மட்டும் இப்போது இங்கிருந்தால்....” என்று சொல்லிப் புலிகேசி பெருமூச்சு விட்டான்.

சபையில் ஒருவன், “பிரபு! பிக்ஷுவைப் பற்றி எந்தவிதமான தகவலும் வரவில்லையா?” என்று கேட்டான்.

“பிக்ஷுவிடமிருந்து சேதி வந்து நெடுங்காலம் ஆகிறது. வடபெண்ணைக் கரையில் வஜ்ரபாஹு என்னும் களப்பாளத் தலைவனிடம் அனுப்பிய ஓலைக்குப் பிறகு அவரிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. மதுரைப் பாண்டியனைப் பார்ப்பதற்கு அவர் போயிருந்த சமயத்தில், ஏதேனும் நேர்ந்து விட்டதோ, என்னவோ? ஆகா! பிக்ஷு மட்டும் இப்போதிருந்தால் உங்களைப் போல விழித்துக் கொண்டு இருப்பாரோ? ஒற்றர் தலைவரே! புத்த பிக்ஷு என்ன ஆகியிருப்பாரென்று கண்டுபிடிக்கும்படியாக எட்டு மாதத்திற்கு முன்னாலேயே சொன்னேனே? இதுவரை ஏதாவது தகவல் கிடைத்ததா?” என்று கேட்க, ஒற்றர் படைத் தலைவன் தலை குனிந்து கொண்டான்.

பிறகு புலிகேசி அங்கே எல்லோருக்கும் முதலில் இருந்தவனைப் பார்த்து, “சேனாதிபதி, உமக்கு என்ன தோன்றுகிறது? முற்றுகையைத் தொடர்ந்து நடத்த வேண்டியதுதானே? மகேந்திர பல்லவனைப் பணியச் செய்ய இன்னும் எத்தனை காலம் பிடிக்கும் என்று நினைக்கிறீர்?” என்று கேட்டான்.

அதற்கு வாதாபி சேனாதிபதி, “மதில் மேல் காணப்படும் பல்லவ வீரர்கள் கொஞ்சம் கூட வாட்டமின்றிக் கொழுத்தே காணப்படுகிறார்கள். ஆனால், நம்முடைய வீரர்களுக்கு இப்போது அரை வயிறு உணவுதான் கொடுக்கிறோம். இன்னும் ஒரு மாதம் போனால் அதுவும் கொடுக்க முடியாது. சுற்றுப்புறத்தில் பத்துக் காததூரத்திற்கு ஒரு தானிய விதை கூடக் கிடையாது” என்றார்.

புலிகேசியின் முகத்தில் கோபம் கொதித்தது, “ஆமாம்! ஆமாம்! எப்போது பார்த்தாலும் இந்தப் பஞ்சப் பாட்டுத்தான்! இம்மாதிரி மூக்கால் அழுவதைத் தவிர, வேறு ஏதாவது யோசனை சொல்லுவதற்கு இங்கு யாரும் இல்லையா?” என்று கோபக் குரலில் புலிகேசி கேட்க, படைத் தலைவர்களில் ஒருவன், “பிரபு! காவேரிக் கரையில் ஆறு மாத காலமாகப் பாண்டிய ராஜா காத்துக் கொண்டிருக்கிறார். சோழ வளநாட்டில் சென்ற வருஷம் நன்றாக விளைந்த தானியம் ஏராளமாக இருக்கிறது. ஜயந்தவர்ம பாண்டியருக்கு

ஓலையனுப்பினால், ஒருவேளை அவர் உணவு அனுப்பக்கூடும்,” என்றான்.

இதைக் கேட்ட புலிகேசி சற்று நேரம் ஆழ்ந்த யோசனையில் இருந்தான். பிறகு திடீரென்று துள்ளிக் குதித்து எழுந்து, எல்லாரையும் ஒரு தடவை சுற்றிப் பார்த்து விட்டு, “என்ன செய்வதென்று தீர்மானித்து விட்டேன். இனிமேல் நான் இங்கேயே சும்மா உட்கார்ந்திருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும். சேனாதிபதி! நீர் இங்கேயே நமது சைனியத்தின் பெரும் பகுதியுடன் முற்றுகையை நடத்திக் கொண்டிரும். ஓர் இலட்சம் வீரர்களுடன் நான் தெற்கே புறப்பட்டுச் சென்று பாண்டிய மன்னனை நேரில் பார்த்து விட்டு வருகிறேன். யானைப் படை என்னுடன் வரட்டும். ஆஹா! வாதாபியிலிருந்து புறப்பட்ட போது கொழு கொழுவென்றிருந்த நம் யானைகள் உணவில்லாமல் எப்படி மெலிந்து போய் விட்டன! காவேரிக் கரையில் நம் யானைகளுக்கு நிறைய உணவு கிடைக்குமல்லவா?” என்றான்.

அப்போது ஒற்றர் படைத் தலைவன், “பிரபு! தாங்கள் அப்படிச் சிறு படையுடன் போவது உசிதமா? பாண்டியனுடைய நோக்கம் எவ்விதம் இருக்குமோ?” என்று கூறியதற்குப் புலிகேசிப், “பாண்டியனுடைய நோக்கம் என்னவாக இருந்தாலும் என்ன? அவன் நம்மோடு போர் செய்யத் துணிய மாட்டான். அவன் மோசக் கருத்துள்ளவனாயிருந்தாலும் என்ன செய்து விடமுடியும்? காவேரிக் கரையில் ஒளிந்து கொள்வதற்குக் கோட்டை ஒன்றும் இல்லை. எதிரி போர்க்களத்தில் நிற்கும் வரையில் எனக்குப் பயமும் இல்லை” என்றான்.

*(சபதம் தொடரும்)*

# இன்பம்

## நமக்கான கடமைகள் நான்கு

இடம் மாறிக்கிடந்த புத்தகங்களை எடுத்து வரிசைப்படுத்திக் கொண்டிருந்தபோது, என்னைப் பார்க்க வந்த நண்பர் ஒரு நூலை எடுத்துத் தலைப்பைப் படித்தார் 'நன்னூல், அப்படின்னா?' 'நல்ல நூல்' என்றேன். 'ஒரு புத்தகம் நல்ல புத்தகமான்னு எப்படித் தெரிஞ்சுக்கிறது?' என்று கேட்டார்.

'அதைத்தான் இந்த நன்னூல் சொல்லுது. ஒரு புத்தகம் என்றால், அது நான்கு பயன்களைத் தரவேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு. அறம் என்றால் வாழ்க்கைக்குத் தேவையான நடைமுறை ஒழுக்கங்களை வரையறுத்துச் சொல்வது; பொருள் என்பது வாழ்வதற்கு ஆதாரமான பொருள்களைத் தெரிந்துகொள்வது; அவற்றைத் திரட்டுவதற்குரிய வழிகள் அறவழிப்பட்டவைதானா என்று தெரிந்துகொள்வது; வயிற்றுப்பாட்டுக்கும் வாழ்க்கைப் பாட்டுக்கும் பொருள் தேடுவது.

அன்றாடப் பசிக்கு உணவு தேடி இடுவது வயிற்றுப்பாடு; என்றென்றும் வாழ்வதற்குரிய நிரந்தரமானவற்றைத் தேடுவது வாழ்க்கைப்பாடு. அது ஆயுட்காலத்தோடு முடிந்துவிடுவது இல்லை; அதற்கு அப்பாலும் இருந்து நாம் வாழ்ந்தமைக்கான அர்த்தத்தை — பொருளை ஏற்படுத்திக் கொடுப்பது. அறத்தை அறிந்துகொண்டு அறவழியில் பொருளைச் சம்பாதித்து, அதன் பின்னர்த் துய்த்துப் பெறுவது இன்பம்.

எது இன்பம் என்றால் துன்பம் இல்லாத எதுவும்தான். பசித்துன்பம் தொடங்கி, கவலை, நோயாகிய பிணி, பிறப்பு, இறப்பு ஆகிய எல்லாவகைத் துன்பங்களில் இருந்தும் விடுதலை பெறுவதே இன்பம்.

வீடு என்பது நாம் இருக்கும் இடம். அதாவது நிம்மதியாக இருக்கும் இடம். அது எந்த இடமாக இருந்தாலும் சரி. பாரதியார் சொல்கிறார், 'கவலை துறந்திங்கு வாழ்வதே வீடு'. உற்சாகமாகி விட்டார் நண்பர். 'அவர் இந்த நாலையும் சேர்த்துச் சொல்லியிருக்காரா?' என்று கேட்டார்.

நான் அவரைப் பார்த்துவிட்டு, "ஆமா, இந்த நான்கும் நாம் நாள்தோறும் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகள் என்று காட்டியிருக்கிறார். அந்தக் கடமைகளுள் முதலாவது, 'தன்னைக் கட்டுதல்', அடுத்தது, 'பிறர் துயர் தீர்த்தல்', மூன்றாவது, 'பிறர் நலம் வேண்டுதல்', நிறைவாக, 'உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல்'.

அந்த 'ஒருவன்' யார் என்று அவரே விளக்கமும் கொடுக்கிறார். 'விநாயக தேவனாய், வேலுடைக் குமரனாய் நாராயணனாய், நதிச்சடை முடியனாய், பெயர் பல கூறிஅல்லா, யெஹோவா, எனத் தொழுது அன்புறும் தேவரும் தானாய், திருமகள், பாரதி, உமை எனும் தேவியர் உகந்த வான்பொருளாய் உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல்.'



# என்பது எதுவெனில்!

கிருங்கை சேதுபதி

இந்நான்கே இப்பூமியில் எவர்க்கும் கடமை எனப்படும். இதனால் ஏற்படக்கூடிய பயன்கள் நான்கு என்கிறார். அவற்றை நன்னூல் சொல்லிய நான்காய் விரிக்கிறார்.

'பயன் இதில் நான்காம், அறம், பொருள், இன்பம், வீடு எனும் முறையே' என்கிறார். இந்த 'முறையே' என்கிற சொல்தான், இந்த நான்கையும் நமக்குப் பின்வருமாறு வரிசைப்படுத்தி விளங்கிக் கொள்ள வழி வகுக்கிறது. தன்னைக் கட்டுதல் — அறம்; பிறர் துயர் தீர்த்தல் — பொருள்; பிறர் நலம் வேண்டுதல் — இன்பம்; உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல் — வீடு. இந்தக் கருத்துகளையெல்லாம் முப்பாலில் அடக்கித் தந்தவர் திருவள்ளுவர்.

'ஈதல்அறம்; தீவினைவிட்டு ஈட்டல்பொருள்; எஞ்ஞான்றும்காதல் இருவர் கருத்து ஒருமித்து — ஆதரவு பட்டதே இன்பம்; பரனை நினைந்து இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு' என்பது ஔவையார் பாடல். இந்தப் பாடலின் மேல்விளக்கம்போல் பாரதி அமைத்துப் பாடியதுதான், நாம் பேசிக்கொண்டிருக்கும் இந்தப் பாடல்".




'வாயும் வயிறும்தான் வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டு, உண்பதும், கண்டதை உரைப்பதும், உறங்குவதுமாகக் கழிந்துபோகும் சராசரி வாழ்க்கையில் இருந்து உயர்ந்து வரவேண்டியது மனிதம். தன் வாய்க்கும் வயிற்றுக்கும் மட்டும் இரைதேடுகிற விலங்குகள், பறவைகள், தன் வயிற்றில் பிறந்தவற்றுக்கும் சேர்த்து உணவு தேடி ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் ஊட்டுகின்றன.

அந்த வகையில் ஒரு விலங்காக மட்டும் மனிதன் இருப்பது எந்தவகையில் நியாயம்? தன் ஒத்த மனிதர்கள் உண்ண வழியின்றி, இருக்க இடமின்றி, தேவைக்கு உரிய பொருள் இன்றித் துயர்படும்போது, மனிதர் நோக மனிதர் பார்ப்பதா, மனித மாண்பு?

தன்னைக் கட்டுவது அறம் என்றால், தன் ஒத்த மனிதர்களின் துயரத்தைப் போக்கி, அவர் நலம் காப்பதும் அவசியக் கடமை அல்லவா? தன்னலத்தையும் பொதுநலத்தையும் உள்ளடக்கி, எல்லா உயிரும் இன்புற்றிருக்க இறைவனை வேண்டுதல் உன்னதப் பண்பு அல்லவா?அதைத்தான் இந்தப் பாரதி பாடல் நமக்கு உணர்த்துகிறது.

இன்றைக்கு வாயோடு சேர்த்து மூக்கையும் மூடிக் கட்டச் சொல்கிறது, கரோனா. மூக்கையும் வாயையும் முறைப்படக் கட்டினால், உடலைக் கட்டலாம். உடலைக் கட்டினால், உயிரைக் கட்டலாம். உயிரைக்

கட்டினால், வீட்டை மட்டுமல்ல, நாட்டையும் இந்த உலகத்தையும் கட்டலாம் என்பதை, இந்த ஒடுக்கம் நமக்கு உணர்த்தியிருக்கிறது.

தனக்காக அனைத்தையும் கட்டிக் காப்பாற்றி வைத்தலே அறம் என்றும், தன்னலம் துய்த்தலே இன்பம் என்றும், அதற்காகத் தேடுவதே பொருள் என்றும், அனைத்து வசதிகளையும் உள்ளடக்கி, அரண்மனை போலக் கட்டிக் கொள்ளுதலே வீடு என்றும் அவசரப் பொருள் கொண்டு தேடிய மனிதகுலம், உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்ற மறந்து உயிருக்கு மன்றாடி நிற்கிறது.

நிலத்தை வாங்கி வேலி போட்ட மனிதம், வானத்துக்கும் வேலிபோட விரைந்த அவசரத்தில், நீருக்கும் விலை வைத்தது; நெருப்புக்கும் விலை வைத்தது; இப்போது காற்றையும் விலை கொடுத்து வாங்க, வரிசையில் நிற்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது.

இந்த அவலம் மனிதர்களோடு நில்லாமல் சிங்கங்களுக்கும் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கும் நிலையை என்ன சொல்வது? இப்படியே போனால் என்னாவது என்ற கவலை வந்து கவ்வுகின்றது.வீடே சிறையாகிவிட்டது என்ற வேதனைப்படாமல் ஒடுங்கிக்கொண்டால்தான் இந்த உடலையும் உயிரையும் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்கிற நிலை இப்போது.

இது, சுற்றுச்சூழல் என்று மனிதத்தை முன்னிறுத்தி மற்றவற்றைப் பின்தள்ளி விரைந்த வேகக் கொடுமையால் நிகழ்ந்தது; எல்லாவுயிரும் இன்புற்றிருக்க நினைக்காமல், தன்னுயிர் மட்டுமே தலைசிறந்தது என்ற மமதையால் வந்த விபரீதம்; தன்னுள் இறைமையைக் காணாமல், தானே இறைவன் என்று அவசரமாக எண்ணிய அசுரப்போக்கின் விளைவு.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐம்பெரும் பூதத்து இயற்கையால் ஆனது உலகம்; உடலும் அப்படித்தான். இந்த உலகில் வாழும் எல்லாவுயிர்களுக்கும் ஐம்பூதத்து ஆற்றல் மிகவும் அவசியம். அவற்றையே இறைவனாகக் கண்டு காட்டியது தமிழ்.

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

என்று இறைவனைப் போற்றினார் மாணிக்கவாசகர்.

'அன்பே சிவம்' என்று ஆற்றுப்படுத்தினார் திருமூலர். 'உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்' என்பதான கேள்விகளை அடுக்கிக் கொண்டுபோய், அவனது, 'துயர்அறு சுடர் அடி தொழுது எழு, என் மனனே' என்று தன் மனத்துக்குச் சொல்வதுபோலத் தரணிவாழ் மனித இனத்துக்குச் சொன்னார் நம்மாழ்வார்.

இந்த நெறியைத்தானே எல்லாச் சமயங்களும் எடுத்துரைக்கின்றன.

'பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே'

என்று எங்கும் நிறைந்த பரம்பொருளை, ஒன்றாக இணைத்தும் நினைத்தும் போற்றிப் பாடினார் வள்ளலார்.

இந்த ஒருமை உணர்வோடு உலகத்தில் உள்ள ஒவ்வொருவரும், உயிர் பறிக்கும் இந்தக் கொடுநோயிலிருந்து விடுதலை அடையப் பிரார்த்தனை செய்துகொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொருவரையும் காக்க இறைவன் உடன்வந்து உதவுதற்கு முன்னதாக, நம்முள்ளே முயன்று நம்மையும் நம்மோடு இருந்து துன்புறும் மக்களையும் இயன்ற அளவு முயன்று காப்பது இன்றியமையாத கடமை அல்லவா?

இந்த நான்கு கடமைகளையும் நன்கு கடைப்பிடிப்பதே வாழ்வியல் நெறி. ஒன்றை விட்டு ஒன்றைக் கொள்வதும் மற்றவற்றைத் தவிர்ப்பதும் நன்றன்று. இறந்த பின்னர் ஏகுவது சொர்க்க வீடு என்று சொல்லியதெல்லாம் இருக்கட்டும். வானகம் இங்கு தென்படவேண்டும் என்று உறுதியாய் உரைத்த பாரதி, அதற்கான வழிகளையும் வசன கவிதையில் விரித்தார்.

"மண்ணிலே வேலி போடலாம்.
வானத்திலே வேலி போடலாமா?"
போடலாம்; மண்ணிலும் வானந்தானே நிரம்பியிருக்கின்றது?
மண்ணைக் கட்டினால் அதிலுள்ள வானத்தைக் காட்டியதாகாதா?
உடலைக் கட்டு, உயிரைக் கட்டலாம்.
உயிரைக் கட்டு. உள்ளத்தைக் கட்டலாம்.
உள்ளத்தைக் கட்டு. சக்தியை கட்டலாம்.
அந்த சக்திக்கு கட்டுப்படுவதில் வருத்தமில்லை.
இப்போது புரிகிறதா, பாரதியார் ஏன், 'கடமையாவன தன்னைக் கட்டுதல்' என்று சொல்கிறார் என்று" — இப்படி முடித்தபோது, 'வீட்டைக் கட்டுவதோடு சேர்த்து நூலகத்தையும் கட்டிக் கொள்ள வேணும் போல இருக்கு' என்றபடி, வீடு திரும்ப எழுந்தார், நண்பர்.

அவருக்கு,'பாரதியார் கவிதைகள்' நூலைப் பரிசாகக் கொடுத்தேன்; அவர் கட்டிக் கொண்டிருக்கும் வீட்டின் நூலகத்துக்கு முதல் வரவாய் இருக்கட்டும்' என்று.

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!

* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!

தொடர்புகளுக்கு

editor@ithamil.com

## யோகாசனம் எனும் மனப்பயிற்சி

திருமூலர் தனது 'திருமந்திரம்' நூலில் அட்டாங்க யோகம் என்ற தலைப்பில் ஆசனப்பயிற்சி முறைகளை பற்றி விவரித்துள்ளார். 'யோகம்' என்ற சொல்லுக்கு ஒன்றுபடுவது என்றும், 'ஆசனம்' என்ற சொல்லுக்கு இருக்கை நிலை என்றும் பொருள். ஆகவே இருக்கை நிலையில் உடலும், மனமும் ஒன்றுபட்டு இருப்பது 'யோகாசனம்'.

கணக்கில் அடங்காத பல்வேறு ஆசன இருக்கை நிலைகளை திருமூலர் குறிப்பிட்டுள்ளார். அகத்தியரும் தம் நூல்களில் பல்வேறு யோகாசனப் பயிற்சி முறைகளைக் குறிப்பிட்டுள்ளார். பதஞ்சலி முனிவர் யோகாசனமுறைகளின் தந்தையாகக் கருதப்படுகிறார் .

ஆசனப் பயிற்சி செய்வது, நோயாளியின் உடல் உறுப்புகளில் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கக்கூடும். மேலும், மன ஒருங்கிணைப்பையும் மன வலிமையையும் ஏற்படுத்தும். அதே நேரத்தில், யோகாசனப் பயிற்சியோடு சேர்ந்த சுவாசப்பயிற்சி, தியானம் இவற்றால் மனம் அமைதியாகி மனப்பதற்றம் நீங்கி மனம் செம்மையாகும்.

யோகாசனப் பயிற்சி செய்வதால் உடலும், மனமும் புத்துணர்வு பெறுகிறது. அது, மனஅழுத்தத்தைப் போக்கி நிம்மதியான தூக்கத்தை தருகிறது. இது எளிமையாகச் செய்யும் உடற்பயிற்சி ஆகையால், எந்த இடத்திலும் நம்மால் யோகாசனப்பயிற்சியை செய்ய முடியும். உடல் எடையைக் குறைக்க இது பெரிதும் உதவுகிறது.

பல்வேறு நோய்நிலைகளில் யோகாசனப் பயிற்சி நல்ல பலனைத் தந்திருப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. மிக முக்கியமாக, இன்றைய பெருந்தொற்று காலத்தில் நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது. யோகாசனப் பயிற்சி செய்வதால் உடலியலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவதாக பல ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இருதய சுற்றோட்ட மண்டலத்தில் இயற்கையாக ரத்த அழுத்தமும், இருதயத் துடிப்பும் குறைகின்றன. நாம் யோகா பயிற்சி செய்வதன் மூலம் நுரையீரல் செயல்படும் திறனும், சுவாசத்தின் செயல் திறனும், மூச்சினை உள் வைத்திருக்கும் திறனும் அதிகரிப்பதோடு, சுவாசத் துடிப்பு எண்ணிக்கை இயல்பாகவே குறைவதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. அத்துடன் ஹார்மோன் சுரப்பிகளின் செயல்படும் அதிகரிக்கிறது.



மரு. சோ. தில்லைவாணன்

உதாரணமாக, தைராக்ஸின், ஆக்சிடோஸின் அளவுகளை இது அதிகரிக்கச் செய்கிறது. யோகா செய்வதால் செரிமான மண்டலத்திற்குத் தேவையான ரத்த ஓட்டம் இயல்பாக அதிகரித்து, செரிமானத்தை தூண்டவும், பெரிஸ்டாலிசிஸ் எனும் குடல் இயக்கத்தைத் தூண்டி மலச்சிக்கல் ஏற்படாமல் இருக்கச் செய்யும். தசை எலும்புக்கூடு சார்ந்த மண்டலத்தில் மூட்டுக்களின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கவும், இயக்கங்களை எளிமையாக்கவும், மூட்டுகளை வலிமைப்படுத்தவும் யோகாசனம் உதவிபுரிகிறது .

மூலம், கணையத்தில் உள்ள பீட்டா செல்கள் புத்துணர்ச்சி அடையும். இதனால் ரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும் இன்சுலின் அதிகரிக்கும். மேலும், கணைய செல்கள் புத்துணர்வு பெறுவதால் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கவும், அதனை அதிகமாகப் பயன்படுத்தப்படவும் காரணமாகிறது.

தொற்றா நோய்களான நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், உடல் பருமன் போன்ற பல்வேறு நோய்கள் இன்று உலக அளவில் மிகப்பெரிய சவாலாக உள்ளன. முக்கியமாக நீரிழிவு நோயாளிகளின் ரத்தத்திலுள்ள சர்க்கரை அளவைக் குறைப்பதில் யோகாசனப் பயிற்சிகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

அவர்கள் தினசரி யோகாசனப் பயிற்சி செய்வதன்

பல்வேறு நோய் நிலைகளுக்கு, தனித்தனி யோகாசனப் பயிற்சி முறைகள் சொல்லப்பட்டுள்ளன. இந்த யோகாசன முறைகளை காலையிலும், மாலையிலும் எதுவும் சாப்பிடாமல் வெறும் வயிற்றில் செய்தல் நல்ல பலன் கிட்டும். உணவு உண்டவுடன் எந்த ஆசனப் பயிற்சியையும் மேற்கொள்ளக் கூடாது. அப்படிச் செய்தால் செரிமான பாதிப்பு ஏற்படும். 'வஜ்ராசனம்' எனும் இருக்கை நிலை யோகா




மட்டுமே உணவுக்கு பிறகு செய்யலாம். இது வாயு தொல்லையை போக்கி, செரிமானசக்தியை அதிகரிக்கும்.

மிகுந்த வாயுத் தொல்லைக்கு 'பாவன முக்தாசனம்', தைராய்டு சுரப்பி கோளாறுகளுக்கு 'சர்வாங்காசனம்', 'ஹலாசனம்' நல்ல பலனைத் தரும். கழுத்து எலும்பு சார்ந்த நோய்களுக்கு 'புயங்காசன'மும், முதுகு எலும்பு சார்ந்த வியாதிகளுக்கு 'உஸ்ட்ராசனம்', 'தனுராசனம்' மன உளைச்சல், மன அழுத்தம், பதற்றம், பயம் போன்ற மனம் சார்ந்த நோய் நிலைகளுக்கு 'யோக நித்திரை'யும், முழங்கால் எலும்பு பிரச்னைக்கு 'பத்மாசன'மும், நுரையீரல் சார்ந்த நாட்பட்ட நோய் நிலைகளுக்கு திருமூலர் அருளிய 'பிராணாயாமம்' எனும் மூச்சுப் பயிற்சியும் அதிகரித்த ரத்த அழுத்தத்தை குறைக்க 'வஜ்ராசனம்', 'பட்சி மோத்தாசனம்', 'சவாசனம்', 'சுகாசனம்' ஆகிய யோகாசன நிலைகள் நல்ல பலனை தரும். சூர்ய நமஸ்காரம் செய்வது பல்வேறு நோய் நிலைகளிலும் நல்ல பலனை தரும்.

சர்க்கரை வியாதியை கட்டுக்குள் கொண்டு வர 'தனுராசனம்', 'புஜங்காசனம்', 'பத்த கோணாசனம்', 'சூர்ய நமஸ்காரம்', 'பர்வதாசனம்', 'மக்ராசனம்', 'விருக்ஷாசனம்', 'அர்த்த மச்சேந்திராசனம்', 'ஹலாசனம்' ஆகியவை நல்ல பயனளிப்பவை. ரத்த சர்க்கரை, ரத்தத்தில் கொழுப்பு அளவைக் குறைப்பதில் யோகாவின் பங்களிப்பு பற்றி செய்த ஆய்வில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் கிடைத்துள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

வாரத்தில் ஆறு நாட்கள், ஒரு நாளைக்கு 60 நிமிடம் என்று தொடர்ந்து 10 வாரம் யோகாசன பயிற்சி செய்தவர்களுக்கு முடிவில் ரத்த சர்க்கரை அளவு குறிப்பிடத்தகுந்த அளவு குறைந்திருப்பதோடு, ரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்பின் அளவும் குறைந்துள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.






திருமூலர் கூறிய ஆசனப் பயிற்சியும், மூச்சுப் பயிற்சியும் இன்று உலக நாடுகளால் போற்றப்படுவது நம் நாட்டிற்கு கிடைத்த பெருமை. யோகாசனப் பயிற்சியும், மூச்சு பயிற்சியும், தியானமும் தொடர்ந்து செய்து வந்தால் நோய்கள் பலவற்றை வராமல் நாம் தடுத்துக் கொள்ள முடியும்.

அப்படியே வந்துவிட்டாலும், வந்த நோயினை குணப்படுத்தவும் இவை பக்க பலமாக நிற்கும். யோகா ஆரோக்கியமான வீட்டையும், நாட்டையும் உருவாக்கி அனைவரின் வாழ்க்கை தரத்தையும் உயர்த்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

உடல், மனம், உணர்ச்சிகள், ஆன்மா ஆகியவற்றை ஒன்றிணைப்பது அல்லது ஒருமுகப்படுத்துவதே யோகக் கலை. உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, மன அழுத்தங்களை குறைத்து அமைதி தருவது. இலக்கின்றி அலையும் மானுட வாழ்வில் இலக்கை நிர்ணயித்து சேர வேண்டிய இலக்கில் கொண்டு போய்ச் சேர்க்க யோகா ஒரு சிறந்த கருவியாகும்.5000 ஆண்டுகள் பழமையான இக்கலையை ஆயிரக்கணக்கான சித்தர்கள், ஞானிகள், ரிஷிகள் குறிப்பாக மச்சேந்திரநாதர், கோரக்கநாதர், திருமூலர் போன்றோர் வாழ்நாள் முழுவதும் பயிற்சி பெற்று கண்டுபிடித்துள்ளனர்.

## யோகா பலன்கள்:

முறையாக யோகா ஆசனம் பயிற்சி செய்வதன் மூலம் பல நோய்களை குணப்படுத்த முடியும். நோய் வராமல் தடுக்க இயலும். வந்த நோய்களை கட்டுப்படுத்தவும் முடியும். நேரடியாக தகுதிபெற்ற யோகா நிபுணரின் கீழ்தான் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். 'டிவி' பார்த்து செய்தால் பக்கவிளைவுகள் வர வாய்ப்பு உள்ளது. முறையாக செய்வதன் மூலம் பல அற்புத பலன்களை பெற இயலும்.

யோகப் பயிற்சியின் மூலம் உடற்தகுதியினை உடல் நலத்தை தக்க வைத்துக்கொள்ளலாம். உடலின் பலவீனமான பகுதிகளை வலுவடைய செய்கிறது. உடல் எடையை சீராக வைத்துக்கொள்ள உதவுகிறது. மரணத்தை தள்ளிப்போடுகிறது. சர்க்கரை நோய், ரத்தஅழுத்தத்தை கட்டுப்பாட்டிற்குள் வைக்க உதவும். ரத்தத்தில் உள்ள கொழுப்பை கரைக்க உதவுகிறது.

இளவயதிலேயே முறையாக பயிற்சி செய்தால் மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரகம், கல்லீரல் நோய்களை வராமல் தவிர்க்கலாம். ரத்தஓட்டத்தை சீராக வைக்க உதவும். எலும்புகள், தசை நார்களை வலிமையாக, உறுதியாக வைக்க உதவும். முன்னால் குனியும் ஆசனங்கள் மூலம் மூளைக்கு முறையாக ரத்தஓட்டத்தை செலுத்தி, பிராணவாயு அதிகமாக உட்செலுத்தி நீண்ட ஆயுளையும், ஞாபக சக்தியையும் பெருக்க முடியும்.

உளவியல் ரீதியாக மன அழுத்தத்தை கட்டுப்படுத்த முடியும். தன்னம்பிக்கை, சுயக்கட்டுப்பாடு வளர்க்க முடியும். கவனச் சிதறலில் இருந்து விடுபட்டு, மனஒருமைப்பாட்டை வளர்க்க முடியும். மாணவர்கள் கற்கும் திறனை மேம்படுத்த முடியும். மனநோய்களான மனஇறுக்கம், அபரிமித உணர்வுகள், வன்முறை உணர்வுகள், பயம் போன்றவற்றை கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடியும். மது, புகையிலை, சிகரெட், இனிப்பு, எண்ணெய் பதார்த்தங்கள், பாஸ்ட்புட் வகைகளை விட்டுவிட வேண்டும். உணவு உண்டபின் ஆசனம் செய்யக்கூடாது. தூங்கி எழுந்தபின் வெறும் வயிற்றில் அதிகாலையில் பயிற்சி செய்ய வேண்டும்.

தினமும் அரைமணிநேரம் தவறாமல் யோகா பயிற்சி செய்வது நல்லது.

## முதியோர் கடவுளுக்கு நிகராவர் !

அண்ணல் காந்தியடிகளை மாற்றிய வரலாறுகள் பலவற்றையும் நாம் படித்து இருக்கிறோம். அவற்றுள் ஒன்று சிரவணன் வரலாறு. சிரவணனுடைய தாய் — தந்தை பார்வைக் குறைபாட்டுடன் மாற்றுத் திறனாளியாக இருந்தாலும் அவர்களுடைய எண்ணம், பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று தங்கள் பாவங்களை நீக்கிக் கொள்ள வேண்டும் என்பது.

அதற்காக இரண்டு பேரையும் உறியாகக் கட்டித் தோளிலே சுமந்து கொண்டு பல தலங்களுக்கும் அழைத்துச் சென்றான் சிரவணன். இந்த நிகழ்வு காந்தியின் உள்ளத்திலே தாக்கத்தினை ஏற்படுத்தியது. அதனால் தனது தாய் தந்தையரை மதிப்பதிலே அவர் சிறந்து விளங்கினார்.

பாண்டுரங்கன் என்று சொல்லக் கூடிய தெய்வம் ஒரு செங்கல் மீது ஏறி நின்று கொண்டு இருப்பார். ஏன் அவ்வாறு செங்கல் மீது நின்று கொண்டு இருக்கிறார்? அவருக்கு விட்டலன் என்கிற சீடர் ஒருவர் இருந்தார். அவருக்கு பாண்டுரங்கன் மீது அளவில்லாத பிரியம். ஒரு நாள் பாண்டுரங்கன் அந்த சீடர் வீட்டிற்குச் சென்று, வாயிலில் நின்று "நான் பாண்டுரங்கன் வந்திருக்கிறேன்' என்று கூறியிருக்கின்றார்.

ஆனால் விட்டலன், உடனே இரண்டு செங்கலை எடுத்துப் போட்டு "சிறிது நேரம் இதன் மேல் நின்று கொண்டிருங்கள்; என்னுடைய தாய் தந்தையரைக் குளிப்பாட்டி, உணவு அளித்துவிட்டு வருகிறேன்' என்று கூறியுள்ளார். பாண்டுரங்கன் அவ்வாறே நின்றார். அதுதான் இன்று நாம் வழிபடக் கூடிய தெய்வமாக இருக்கின்றது.

கௌசிகன் என்ற முனிவர். கொக்கு ஒன்று வானத்தில் பறக்கும் பொழுது அவர்மீது தெரியாமல் எச்சம் இட்டு விட்டது. அவர் மேலே பார்த்தார் கொக்கு தீ பிடித்து இறந்துவிட்டது. அவர் ஒரு வீட்டிற்கு செல்கிறார். அப்போது அந்த வீட்டில் உள்ள பெண்மணி, தனது வயதான கணவனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கின்றார்.

"எனது கணவன் உடல் நலமின்றி இருக்கின்றார். அவருக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்துவிட்டு வரும்வரைக் காத்திருங்கள்' என்று கூறுகிறாள். உடனே முனிவருக்குக் கோபம் வந்து விட்டது, "நான் யார் தெரியுமா' என்று கோபமாகப் பார்க்கிறார். அந்த பெண்மணி மென்மையாக சிரித்துக் கொண்டே "கொக்கென்று



நினைத்தாயோ கொங்கணவா' என்று கேட்கிறார்.

இவ்வாறு பெற்றோரை, வீட்டில் இருக்கக் கூடிய முதியவர்களைக் கவனித்தல் முக்கியம் என்பதை நம் பெரியோர்கள் கதைகளின் வாயிலாகக் கூறியுள்ளார்கள். ஆனால் காலப்போக்கிலே நாம் நம்முடைய பெரியோர்களை மதிப்பது குறைந்துவிட்டது. அதன் காரணமாகப் பெரியோர்களுக்கு மனதளவிலே நெருடல் ஏற்பட்டு மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள்.

ஒரு காலத்தில் முதியோர்களைக் கடவுளுக்கு இணையாகக் கருதினார்கள். முதியோர்கள்தான் அடுத்த தலைமுறையினை உருவாக்கியவர்கள். வீடுகளிலே பாட்டி, தாத்தாக்கள்தான் குழந்தைகளுக்கு அறவுரைகள், நெறிமுறைகள், நீதி மொழிகள், பண்பாடு, நல்ல பழக்கங்களைச் சொல்லி அவர்களை ஒழுக்கமுடையவர்களாக வளர்த்தார்கள்.

சாந்தலிங்க அடிகளார்

அவர்கள் சிறந்த மருத்துவர்களாகவும் இருந்தார்கள். அடுத்த தலைமுறைப் பெண்களுக்கு ஒழுக்கத்தைப் பற்றியும், சமுதாயத்திலே பழக வேண்டிய தன்மைகளைப் பற்றியும் பெற்றோரைவிட முதியோர்கள்தான் அதிகம் கற்றுத் தந்தார்கள்.

பெரியவர்களை நாம் எப்படி பேணுகிறோம் என்பதைப் பார்த்து நம் குழந்தைகள் வருங்காலத்தில் நம்மைப் பேணுவதற்குக் கற்றுக்கொள்வார்கள். அவ்வகையிலே பெரியோர்களைப் பேணுதல் நம் கடைமைப்பாடு ஆகும். முதியோர்களை வன்கொடுமையில் இருந்து மீட்டெடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.




அவர்கள் வாழ்கின்றவரை அவர்களது உடல், மன நலத்திற்குண்டான பாதுகாப்பினைத் தரவேண்டும். நம் உடலில் ஓடிக்கொண்டிருக்கக் கூடிய ரத்தமும், இந்தத் தசையும் அவர்கள் தந்ததுதான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

நமக்குத் தேவையான உடலையும், கல்வியையும் பெருளாதார மேம்பாட்டையும் நல்கிய பெரியவர்களைப் பேணிப் பாதுகாப்பது நமது கடமையாகும். அவர்களின்




நலனுக்கான அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டும். அவர்களது உடல் வளத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

அவர்களோடு நேரத்தைச் செலவிட வேண்டும். அவர்களோடு காலையிலே நடைப்பயிற்சி மேற்கொள்ளலாம். சிறு சிறு உடல் உபாதைகள் வரும்பொழுது அவற்றுக்கான மருந்துகளை வாங்கிக் கொடுக்கலாம். அவர்களுக்கான உதவிகளைச் செய்யும் பொழுது அன்போடு செய்ய வேண்டும்.

நம் உடலைப் பேணி வளர்த்தவர்கள் அவர்கள். தினமும் சிறிது நேரம் அவர்களோடு பேசலாம். அவர்களின் உடல் நலத்திற்காக சிறிய சிறிய உடற்பயிற்சிகள், மூச்சுப் பயிற்சிகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கலாம். உடல் பாதுகாப்புக்கான சிறு சிறு ஆலோசனைகளை அவர்களுக்குக் கூறலாம்.

கேரளத்தில் நடந்த உண்மை நிகழ்வு ஒன்று. ஒரு சிறுவனின் தாய்க்கு ஒரு கண்தான் இருக்கும் மற்றொரு கண் தைக்கப்பட்டிருக்கும். நண்பர்கள் கேலி செய்வார்கள் என்று அவன் தன் தாயைப் பள்ளிக்குக் அழைத்துச் செல்ல மாட்டான். பெரியவனாகி வேலை கிடைத்தது. அப்பொழுதும் தன் தாயை எங்கும் அழைத்துச் செல்ல மாட்டான். சில வருடங்களில் திருமணமாகின்றது. குழந்தைகள் பிறக்கின்றன. அவர்களிடமும் தன் தாயினைக் காட்டவில்லை. தானும் தாயைப் பார்க்க வருவதைத் தவிர்த்தான்.

ஒரு நாள் வயதான அவனது தாய் இறந்து போகிறாள். இறப்பதற்கு முன்னர் ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தார். இறுதிச்சடங்கு செய்வதற்காக மகன் வருகிறான். அப்பொழுது அந்தக் கடிதத்தைப் படிக்கிறான். அதில் அவனது தாய், “”கண்ணே, நீ எனக்கு ஒரு கண் இல்லை என்று மிகவும் உதாசீனம் செய்கிறாய். உனக்கு இரண்டு கண் இருப்பதற்குக் காரணம் தெரியுமா? சிறு வயதில் விளையாடும் பொழுது இரும்புக் கம்பி பட்டு உன்னுடைய ஒரு கண் பார்வை இழந்து விட்டது.

எல்லா மருத்துவர்களிடமும் காட்டினோம். யாராவது கண் கொடுத்தால் தவிர மீண்டும் கண் பார்வை கிடைக்க வாய்ப்பு இல்லை என்று கூறிவிட்டார்கள். யாரும் கண் தர முன்வரவில்லை. அதனால் எனது ஒரு கண்ணை உனக்குக் கொடுத்துவிட்டேன். அந்தக் கண்ணில்தான் இப்பொழுது நீ பார்த்துக் கொண்டு இருக்கிறாய். நான் என் கண் இருந்த இடத்தில் தையல் போட்டுக் கொண்டேன்”. கடிதத்தைப் படித்த மகன் அழுகிறான். அழுது என்ன பயன்? அதனால், பெரியவர்களின் பாதுகாப்பிற்கு அவர்கள் வாழும் காலத்திலேயே நாம் நன்மைகள் செய்ய வேண்டும்.

அவர்களுக்கு அதிக செலவு செய்து பொருட்களை வாங்கித் தர வேண்டும் என்று இல்லை. அன்பும், அரவணைப்புமே அவர்களுக்குத் தேவை.



சரியான நேரத்திற்கு சாப்பிட்டார்களா என்று விசாரிப்பதும், உடல் நலம் குறித்து அக்கறையோடு விசாரிப்பதும் அவர்கள் மேல் நமக்கு இருக்கும்




அக்கறையை வெளிப்படுத்தும். அது அவர்களின் மன வளத்திற்கும், மதிப்பிற்கும், மரியாதைக்கும் ஒரு அங்கீகாரம் வழங்குவதாக இருக்கும்.

அதைவிட்டு அவர்களை மிக வசதியான முதியோர் இல்லத்தில் சேர்ப்பது காட்டில் வாழும் சிங்கத்தைக் கூண்டில் அடைப்பது போன்றதாகும். எப்பொழுதும் அவர்களோடு சேர்ந்து இருக்க வேண்டும். அவர்களின் சம வயதினரோடு இருப்பதற்கான வசதிகளையும் செய்து தர வேண்டும்.

பெரியவர்களுக்கு பொறுமை அதிகம். நம் குழந்தைதான் தெரியாமல் செய்துவிட்டது என்று மன்னிப்பார்கள். அந்த பொறுத்தல் என்ற மிக உயர்ந்த குணத்தினை நாம் போற்றுதல் வேண்டும். முதியோருக்கு எதிரான வன்கொடுமை ஒரு மனிதாபிமானமற்ற செயல். முதியோரை மதிக்காத தன்மையால்தான் நாம் இயற்கை அன்னையையும் பேணாமல் அழிக்கின்றோம்.

முதியோருக்குசெய்யக்கூடியகொடுமை பெரும் தீங்காக மாறும். அதனால்தான் அரசு முதியோர் பாதுகாப்புக்காக புதிய சட்டங்களைக் கொண்டுவந்துள்ளது. முதியோர்களை, பிள்ளைகள் பேணிப் பாதுகாக்காவிட்டால் அந்த முதியோர் சம்பாதித்துப் பிள்ளைகளிடம் கொடுத்த சொத்துக்களை எல்லாம் திரும்பப் பெற்று அவர்களிடமே கொடுத்துவிடுவோம் என்று சட்டம் போடும் வகையில் இன்றைய வாழ்க்கை நிலை அமைந்துவிட்டது.

எனவே, முதியோர்களை மதிக்க வேண்டும். அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும். கடவுளைக் கருவறையில் வைத்துப் போற்றுவது போலவும், மதிப்புமிக்க பொருட்களை வரவேற்பு அறையில் வைத்திருப்பது போலவும், வீட்டில் முன்னிலைப்படுத்தப் படவேண்டியவர்கள் பெரியோர்களே.

ஆகவே, நம் வீட்டில் உள்ளவர்கள் மட்டுமின்றி அனைத்துப் பெரியோர்களுக்கும் மதிப்பு கொடுக்க வேண்டும். தெருக்களில் ஆதரவில்லாமல் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் முதியோர்களாகத்தான் இருக்கிறார்கள்.

தன் குழந்தையை மாசுபடாமல் வளர்த்த பெற்றோர்கள் இன்று சாலையோரத்தில் சாப்பாட்டிற்கு வழி இல்லாமல் கந்தல் ஆடை உடுத்திக் கொண்டு படுத்திருக்கின்றனர். இந்த நிலையினை மாற்ற வேண்டும். இனிமேல் எந்த ஒரு முதியவருக்கும் வன்கொடுமை ஏற்படக் கூடாது.

முதியோர்களைப் பாதுகாப்பாகப் பேண வேண்டும். அவர்களது வாழ்க்கையை வளமாக்க வேண்டும். நாம் வீட்டிலேயே தனித்திருக்கும் இந்தக் கரோனா காலத்தில், பெரியோர்களை அன்போடு கவனிப்போம் என்ற உறுதிமொழியை எடுத்துக் கொள்வோம்.

ஜூன் 15 முதியோர் வன்கொடுமை எதிர்ப்பு விழிப்புணர்வு நாள்.

# தமிழ் 2021

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## JANUARY

## FEBRUARY

## MARCH

## APRIL

## MAY

## JUNE

## JULY

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## AUGUST

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

## SEPTEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

## OCTOBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

## NOVEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## DECEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

June 2021

# இதமிழ்

12-ம் ஆண்டில்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

Email: editor@ithamil.com

# VARSHA™

# IDLI/DOSA BATTER

## Let's eat the Best!